COIMBATORE.
600

எழுவர் நாங்கள்

(ஒரு பயண நூல்)

கோவை கிழார்

U8. 4498
N53
108060

நிலையப் பதிப்பகம், லிமிடெட்

எழுவர் நாங்கள்

(ஒரு பயண நூல்)

கோவை கிழார்

கோவை நிலையப் பதிப்பகம், லிமிடெட்

உ

கடவுள் துணை.

எழுவர் நாங்கள்

முன்னுரை

இது ஒரு பயண நூல். நாங்கள் ஏழுபேர் சேர்ந்து இலங்கையில் நடைபெற்ற தமிழ் விழாவைக் காணச் சென்ற போது அங்கு கண்டவற்றையும் கேட்டவற்றையும் சுருக்கமாக இதில் கூறியிருக்கிறோம். எங்கள் நண்பர்களில் வேறு யாரா வது எப்போதாவது இலங்கையைக் காணும் வண்ணம் சென்றால் அவர்களுக்கு இந்நூல் பயன்படக்கூடும். இதில் முதற் பகுதி உரை நடையாகவும், இரண்டாம் பகுதி செய்யுள் உருவமாகவும் அமைந்துள்ளன. எளிய நடையில் எழுதப்பெற்றுள்ளதால் எவரும் சுலபத்தில் படித்து அறிந்துகொள்ளலாம்.

எழுவர்.

எழுவர் நாங்கள்

பொருளடக்கம்.

			பக்கம்.
1.	ஒன்று சேருகிறோம்	...	1
2.	கடல்மேல் பறக்கிறோம்	...	3
3.	கலா நிலையம் தங்குகிறோம்	...	6
4.	நாடு காண்கிறோம்	...	10
5.	விழா அயர்கிறோம்	...	13
6.	பண்டைக்கலை காண்கிறோம்	...	16
7.	கீழ்க்கரை அரணைப் பார்க்கிறோம்	...	19
8.	நடுவனம் புகுகின்றோம்	...	22
9.	கீழைத் தமிழ்நாடு அணுகுகிறோம்	...	25
10.	புனிதத் தலம் போற்றுகிறோம்	...	28
11.	பெரு மலைகள் ஏறுகிறோம்	...	31
12.	கண்டியைக் காண்கிறோம்	...	33
13.	கொழும்பு நகர் அடைகின்றோம்	...	36
14.	களனியா காண்கிறோம்	...	39
15.	மேற்குக்கரை ஓடுகிறோம்	...	42
16.	திருக்கேதீச்சரம் வணங்குகிறோம்	...	44
17.	மீண்டும் யாழ்ப்பாணம் புகுகின்றோம்	...	46
18.	திரும்பி ஊருக்குப் பறக்கிறோம்	...	48



ஆசிரியர் கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார்

தி. சோ. கலியாணசுந்தரம்



தி. சி. அருணாசலம்

தி. சி. ஜம்புலிங்கம்



தி. க. சண்முகாநந்தம்

தி. சி. தியாகராசன்



தி. அ. வெங்கடாசலம்

ஏழுவர் நாங்கள்.

---

1. ஒன்று சேருகிறோம்.

தமிழ் நாட்டில் இலங்கை என்ற சொல் மக்களை வசீகரிக்கும் ஒரு சொல் ஆகும். அச்சொல் ஒரு அருமையான தீவின் பெயர் என்று அறிவோம். அத் தீவு பலவிதமான செழிப்புக்களைக் கொண்டது. அதன் நீர்ச் செழிப்பு நிலச் செழிப்பு முதலிய செழிப்புக்களே யன்றி மக்கட் பண்புகள் சமய நிலையங்கள் முதலியவை களும் மக்களை இழுக்கும். ஆகவே அவைகள் எங்களை இழுத்துச் சென்றது ஒரு வியப்பு அல்ல. பலதிறப் பட்ட எங்களை ஒன்று சேர்த்தி இழுந்தது என்றால் அதுவும் ஒரு வியப்பே. ஏனெனில் இன்று அல்ல நேற்று அல்ல. உலகம் தோன்றிய நாள் முதற் கொண்டே இந்த இலங்கை என்ற அழகு பொருந்திய தீவு பிறநாட்டு மக்களை இழுத்துச்சென்று தன் வசப் படுத்திக்கொண்டே இருக்கிறது. ஆகவே எங்களை இழுத்திற்று என்றால் அது ஒரு புதுமை அல்ல. சரித காலத்திற்கு முந்தி அதாவது காவிய காலத்திலே இத்தீவில் குடியிருந்த இயக்கர்கள் செல்வாக்கோடு ஆண்ட காலத்தில் அது வானரத் தலைவனான அனு மனையும் வடநாட்டரசனான இராமனையும் இழுத்துச் சென்றதாம். பின்னர் சரிதம் உதித்த பிறகு மகத நாட்டு இளவரசன் விஜயனை அத்தீவின் நாககன்னிகை இழுத்துச்சென்று மணமும் செய்துகொண்டு அவ்விதக் கலப்பு மணத்தின் விளைவாக சிங்கள அரச வமிசமும் சிங்களர்களாகிய மக்களும் உதித்தனராம். பிறகு புத்தப் பெருமானை இந்த அழகிய தீவு அழைத்துச் சென்று அவருடைய சமய போதனையைக் கேட்டதாம். பின்னர் அசோகருடைய மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும், இத்தீவு அழைத்து அவர்களின் மூலமாக வெள்ளரசுச் சின்னத்தையும் புத்த சம யத்தையும் ஏற்றுக்கொண்டதாம். செந்தமிழ்

மன்னர்களைப் பலமுறை இழுத்து அவர்களால் ஆட்சியைப் பெற்றதாம். சிறப்பாக ஏலேலசிங்கன் என்ற தமிழ்மன்னன் இந்தத் தீவிற்கு இழுக்கப்பெற்றுச் சிங்கள நாட்டைப் பல்லாண்டுகள் ஆண்டு அதன் தலைநகரான அனுராதபுரத்தில் தன் ஆட்சிக் குறிப்புகளை வைத்துச் சென்றானும். சிலம்புச் செல்வி கண்ணகியின் திருவுருவம் இலங்கையில் கோயிலில் விளங்க இருக்க அக்காலத்து அரசன் கயபாகு என்பவன் அக்கொள்கையை ஏற்றுக்கொண்டானும். சோழ சாம்ராச்சியத்தில் புகழ்பெற்று விளங்கிய இராசராசச் சோழன் அவன் மகன் இராசேந்திரச் சோழன் என்ற பேரரசர்களுடைய படைகளை அது இழுத்து அவர்கள் ஆட்சியை அது ஏற்றுக்கொண்டதாம். அப்போது சைவ சமயத்தையும் இழுத்துச்சென்று அழகிய கோயில்களையும் கலைச் சிலைகளையும் அது பெற்றதாம். தமிழ் மக்களைக் காலாகாலங்களில் வாணிபத்திற்கும் கைத்தொழிலுக்கும் பண்ணைத் தொழிலுக்கும் இழுத்துச்சென்று அவர்களால் ஒப்பற்ற நிலச் செழிப்பும் பண்பாடும் பெற்றதாம். தற்போதும் சிங்களருடன் தமிழ் மக்கள் ஆட்சியிலும் பங்கு எடுக்கும் வகையில் சிறந்து விளங்க வசீகரித்துக்கொண்டு நிற்கிறது. இவ்வாறு பண்டைக்காலம் முதற்கொண்டு இச்சிறு தீவு அரபியரையும், பறங்கியரையும் இழுத்துச் சென்று அவர்களுக்குக் காலாகாலங்களில் அடிமைப் பட்டுக்கிடந்தது. இவைகளுக்குக் காரணம் அங்கே காணும் இயற்கைச் செழிப்புக்களே ஆகும். அழகும் செல்வமுமே மக்களை இழுக்குமன்றி பொட்டையும் வறுமையும் எவரையும் இழுக்கா என்று அறியவேண்டும். இப்படிப்பட்ட பண்புகளைக்கொண்ட இந்த ஈழநாடு இந்த ஆண்டில் எங்களையும் ஒன்றுசேர்த்தி இழுத்தது. எங்களை மட்டுமோ தமிழ்விழாவையும் இழுத்துச்சென்று அதனை நடத்திற்று. அதனோடு பரந்து கிடக்கும் தமிழ் மக்கட் தொகுதிகளையும் இழுத்தது. இத்தீவில் உள்ள அழகுகளேயன்றிச் செந்தமிழ் ஆர்வம் மொழிப் பற்று பண்பாட்டுப் பற்று சமயப் பற்று சமய

நிலையங்கள், அவைக் காணும் அவா, முதலான பல காரணங்களும் தமிழ் மக்களை அது இழுத்தது. அவைகளே எங்களையும் இழுத்தது. முதுமை, இளமை இரண்டையும் ஒன்று சேர்த்தியும் பலவித குணங்களை ஒற்றுமைப் படுத்தியும் இழுத்தது என்றால் வியப்பு அல்ல என்று மீண்டும் கூறலாம் அல்லவா!

இவ்வாறு இழுக்கப்பட்ட நாங்கள் ஏழு பேர் கொண்ட ஒரு சிறு தொகுதியேம். அந்தப் பெயரே எங்கள் பயண வரலாற்றிற்கும் பொருத்தமானதென்று நினைப்பீர்கள் அல்லவா? எங்களில் ஒருவர் பெரியவர். இருவர் நடுவயதினர், இருவர் வாலிபர்கள், இருவர் இளைஞர்கள் ஆக மொத்தம் ஏழு பெயரினர் கூடினேம். அதுவியப்போ? பெரியவரைத் தவிர ஏனையோர்கள் ஒரு குடும்பத்துக் கிளையினர்கள். எல்லாரும் நல்ல நிலைமையில் இருப்பவர்கள். பொதுக் கல்வி பெற்றவர்கள். ஆகவே பயணம் இலகுவாகவும் சுவைப் படவும் நடக்கும் அல்லவா? எங்கள் பெயர்களைக் கூறவேண்டியதில்லை. கூறினல் பயனும் இல்லை அல்லவா? ஆகவே பொதுப்பட பெயர்கள் கூறுமல் பயண விவரங்களை மட்டும் கண்டவை கண்டபடி எழுதுவோம். அதுவே சிறந்த முறை அல்லவா?

செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதிலும் பார்க்கவேண்டிய காட்சிகளைப் பார்ப்பதிலும் முதியவர்களா வாலிபர்களா இளைஞர்களா ஊக்கம் கொள்வார்கள்? மக்கள் பொதுவாக நினைப்பதை மீறி வேறு விதமாக நடவடிக்கை இருந்தால் வியப்பு அடைவீர்களா? அதனை இந்த வரலாறு நிரூபிக்கும். நுணுக்கமாக ஆராய்வீர்களாக!

2. பறக்கிறோம்.

இலங்கை எங்களை இழுக்க அத்தீவிற்கு எவ்வழியில் போவது என்பது எங்களுக்குத் தோன்றிய முதல் கேள்வி. இலங்கைக்கு இரண்டு வழிகள் உண்டு.

ஒன்று புகைவண்டியில் தனுஷ்கோடி சென்று அங்கிருந்து கப்பலில் போவது. இரண்டாவது திருச்சியிலிருந்து வானில் பறப்பது. கப்பலில் போவதற்கு 24 மணி நேரம் ஆகும். வானில் பறப்பதற்கு ஒரு மணி நேரம் ஆகும். செலவு இரண்டிற்கும் ஒன்றே. ஆகவே எங்கள் அன்பர்கள் வானில் பறக்க முடிவுகட்டினார்கள். விரைவில் செல்வதுமட்டும் அன்று. வானில் பறந்தால் எவ்வாறு இருக்குமோ என்ற அவா ஒன்று அவர்களைத் தூண்டியது. முதல் முதல் வானில் பறப்பது என்றால் வியப்புத்தானே. எங்களில் இளைஞர்கள் மிகுதியாக இருந்ததினால் அவர்களின் மன எழுச்சிக்கு அளவும் கூற முடியுமோ? 'குருவியைப்போலப் பறக்கிறோம். புறாவைப்போலப் பறக்கிறோம். மேகத்தின் மீது போவோம். அப்போது எப்படி இருக்குமோ' என்று ஆச்சரியப்பட்டார்கள் சிலர். படித்தவர்களோ வானவர், இயக்கர், கந்தருவர் போலப் பறப்போம் என்றனர். இலக்கியம் படித்தவர்கள் 'அளகாபுரியில் இயக்கர் மன்னன் குபேரன் வைத்திருந்த புட்பக விமானத்தில் இலங்கை அரசர்களில் தசக்கிரீவன் பறித்துக்கொண்டு பறந்து போனானே அவனைப்போல நாமும் இந்த வானவிமானத்தில் போவோம்' என்றார்கள். ஆங்கிலம் கற்றவர்கள் ஏரியல் (*Ariel*) என்ற மாயாவி (*Fairy*) போலப் பறப்போம் என்றார்கள். மற்றொருவர் வேடிக்கையாக லூசிபர் (*Lucifer*) என்ற சைத்தான் போலப் பறப்போமா என்றார். முடிவில் எல்லோரும் பறப்பதே சரி என்று நிச்சயித்தார்கள்.

எங்களைப்போல் தமிழ் விழாவைச் சாக்காக வைத்துக்கொண்டு இலங்கை பார்க்கச் செல்லுகிறவர்கள் பலபேர். அவர்கள் எல்லோரும் பறக்கவே நினைத்தார்கள். தினம் ஒன்றுக்கு ஒரே ஒரு வான ஊர்த்திதான் போகும் என்று கண்டோம். அதற்குப் பல பேர் போட்டி போட்டார்கள். இதன் நடுவிலே ஒரு பெரியார் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஒரு தரகனுடைய கையில் சிக்கினோம். எங்களுக்கு அனுமதிச் சீட்டு கிடைப்பதே ஆபத்தாக முடிந்தது. இறுதியில்

ஒருவர் சென்னை போகவேண்டியும் வந்தது. முடிவில் இரண்டு நாட்களுக்கு முந்தியே புறப்பட நேரிட்டது. அதுவும் ஒருவாறு நன்மையாகவே ஏற்பட்டது. திருவிழாவிற்கு முந்தியே பல சுற்று இடங்களையும் பார்த்து மகிழும் வாய்ப்பும் கிடைத்தது.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்"

என்ற ஔவைப் பிராட்டியாரின் சொற்படி நேரிட்டது.

மேலும் அனுமதிச் சீட்டுக்கள், அம்மை, அத்தாட்சிகள் முதலியவைகளுக்கு மிகுந்த முயற்சிகள் எடுக்கவேண்டி வந்தது. பலமுறை திரிந்த வகையில் அவைகளும் கிடைத்தன. ஆனல் இவைகளுக்காகப் பட்ட அலைச்சல் அனுவசியமானதுதான். அவைகளால் பலனும் மிகுதியில்லை. இலங்கை ஆட்சியார் தங்கள் தீவிற்கு ஏன் இத்தனை பாதுகாப்புத் தேடுகிருர்களோ தெரியவில்லை. அந்தத் தீவில் அம்மையும் வாந்தியும் வருவதில்லையோ என்று வியந்தோம். நமது நாட்டைப்போலவே அங்கும் அளவற்ற மக்கள் வைத்தியசாலைக்குப் போய்கொண்டேதான் இருக்கிருர்கள். ஆகவே இந்த விதிகள் பிரயாணிகளை துன்பப்படுத்திக் குறைவாகப் பிரயாணம் செய்யும்படி வற்புறுத்தவே இவைகளைக் கட்டாயப்படுத்துகிருர்கள் என்று நினைத்தோம்.

விமானம் ஏறினேம். சிறையில் அடைத்தாற் போல எங்களை ஒரு வாரினல் கட்டிவிட்டார்கள். காதில் பஞ்சையும் அடைத்துவிட்டார்கள். சிந்தாகுலத்தில் எங்களை அமிழ்த்தாதபடி சில செய்தித் தாள்களைக் கொடுத்தார்கள். அவைகள் இலங்கைத் தாள்கள்தான். ஒரு பெண் எங்களுக்கு தேநீரும் தின் பண்டமும் கொடுத்தாள். இந்த ஆர்ப்பாட்டத்தில் நாங்கள் பறக்கிறேம் என்ற நினைவே வரவில்லை. அடுத்த கண்ணடிச் சாளரத்தில் பார்க்கவே நிலத்தில் விளைவுக் காணிகள் சதுரங்கள் வரைந்தாற்போல

தோன்றின. குன்றுகள் திடல்கள் போலத்தோன்றின. மேகங்கள் பனிப் புகைபோலக் காணப்பட்டன. யாதொரு அசைவுமின்றி ஒரு மணி ஆவதன் முன் யாழ்ப்பாணத்துக் கரை தெரிந்தது. முதலில் பனைமரங்களின் தொகுதிகள் தெரிந்தன. பலாலி நிலையத்தில் இறங்கினோம். நண்பர்கள் எதிர்கொண்டழைத்தார்கள். சோதனை நடந்தது. ஊர் வழியே புறப்பட்டோம்.

இளைஞர்கள் கூட்டுறவு பலவிதங்களிலும் பயன் படுகிறது. அவர்களுக்குப் பசியும் தாகமும் மிகுதி அல்லவா? அதனை உத்தேசித்தே பலநாள் பயன்படத் தக்க முறையில் தின்பண்டங்களைக் கொண்டு வந்திருந்தார்கள். எங்கே சோதனை அதிகாரிகள் தடை செய்கிறார்களோ என்ற அச்சம் என்னைப் பிடித்தது. முன்பு ஒருமுறை மதுரைத் தலப் பிரசாதங்கள் நாவாயில் பட்டபாடு நான் அறிவேன் அல்லவா. ஆனால் தெய்வ அருளால் இளைஞர்கள் ஆர்வம் நிறைவேறிற்று. எங்கள் பயணம் முழுதும் கூடவந்த தின்பண்டங்கள் புதுபுதுதாக வெளி வரவே எங்கள் வாய்கள் அவல் கண்ட பாட்டியின் வாய்போல் ஆயிற்று. யாழ்ப்பாண உவர் நீருக்குப் பதிலாகச் சிறுவானி நீர் ஒரு சிறிது உடன்கொண்டு சென்றிருந்தால் எங்கள் ஆர்வத்தைப் பிடித்து அடக்குவார் இன்றி இருந்திருப்போம்.

3. கலா நிலையம் தங்கினோம்.

வான ஊர்தி நிலையத்திலிருந்து எங்களை அம்பிகைபாகனார் தம்முடன் அழைத்துச் சென்றார். வண்ணார் பண்ணைக் கலா நிலையத்தில் எங்களைத் தங்கவைத்தார். நவரத்தினத் தம்பதிகள் விருந்தளித்தார்கள். சொந்த வீட்டில் காணும் உபசரிப்பைவிட இப்பெரியார்களின் வீட்டில் சிறந்த உபசரிப்பு நடந்தது. நவரத்தினமோ தமிழ் விழாச் செயலாளராக இரவும் பகலும் ஓயாமல் உழைப்பவர். அவரன்றி விழாவில் எதுவும் நடைபெறாது. அவருடைய மனைவியாரோ எங்களுக்கும்

பின்னல் வந்த சென்னைப் பேராசிரியர்களுக்கும் சொல்ல ஒண்ணுத உணவு வசதிகளைச் செய்து வைத்தார். நாள்தோறும் நான்கு வெவ்வேறு விருந்துகள் என்றல் யார்தான் பராமரிப்பு செய்யக் கூடும். இலை போட்டுப் பரிமாறும் சேவையை அந்த அம்மையாரே முன்னின்று செய்வார்கள். பெரிய புராணத்தில் வரும் சிவனடியார்களிலும் ஒரு பங்கு மிகுதியாகவே அன்பைக் காட்டினர்கள். அந்த அம்மையார் மிக்ப் படித்த ஆராய்ச்சியாளர். ஆகை யினல் நாள் தோறும் எங்களுக்கு உபசரணை செய்து விட்டுத் திருவிழாப் பேச்சுக்களைக் கேட்கவும் செல்லு வார்கள், கலா நிலையத்திற்கும் திருவிழாக் கல் லூரிக்கும் மூன்று கல் தொலைவு இருக்கும். அப்படி இருந்தும் இத்தகைய சேவை செய்தது எங்களுக்கோ வியப்பும் பரிதாபமும் தோற்றியது. என்ன அன்பு, என்ன மரியாதை, எங்கள் குழுவில் இருந்த இளைஞர்களைக் குறித்துப் பெற்ற தாய் செய்யும் அன்பி லும் நன்றகப் பாவித்தார்கள். அந்த அன்பிற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேம்?

கலா நிலையம் உண்மையாகவே ஒரு பன்னசாலை போன்றது. மா, பலா, தென்னை, நாகலிங்கம் முதலிய மரங்கள் குளிர்ந்த நிழலைத் தந்தன. தென்னங் கூறையால் மேய்ந்த முன்வாசற் கொட்டம் தண்மை தந்தது. பண்டைய நூல்கள் அதனைக் கலைமகள் இல்லம் ஆக்கின. அடிக்கடி பெரியார் கூட்டுறவு கிடைத்துக்கொண்டே இருந்தது. அடிக்கடி இலங்கை யன்பர்கள் எங்களுக்குப் பேச்சுத் தொடர்பைத் தந்து கொண்டே இருந்தார்கள். விடிந்ததும் சிறுபிள்ளைகள் மாங்காய்களையும் நாகலிங்கப் பூக்களையும் நாடி வருவார்கள். அருகிலிருந்த கேணி வற்றுத நீர் தந்து கொண்டிருந்தது. கையேற்றம் எங்களுக்குத் தேகப் பயிற்சி தந்தது. நாங்கள் எல்லாரும் குளித்தல் வேட்டி துவைத்தல் முதலிய செயல்களில் ஈடுபட்டுக் கலா நிலையத்தைப்பண்டைக் குருகுலவாசம் ஆக்கிவிட்டோம்.

எங்கள் ஆச்சிரமத்திற்கு ஒரு முனிவரும் வந்தார். அவர் ஒரு ஐரோப்பிய வெள்ளையர். ஜெர்மானிய குலத்தைச் சேர்ந்தவர். துறவியாகக் காவியணிந்து இலங்கையிலேயே தங்கிவிட்டவர். அடிக்கடி கதிர்காமம் செல்வார் "சும்மா இரு" என்ற சொற்களில் ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தார். அருணகிரி நாதர், தாயுமானவர், சிதம்பர முனிவர் முதலியோர்கள் நூல்களில் நின்று 'சும்மா இரு' என்ற மேற்கோள்களை அவருக்கு எடுத்துச் சொன்னேன். பொருள் விளக்கமும் சொன்னேன். அவற்றை முழுதும் எழுதிக் கொண்டார். சுத்த சைவப் பழக்கங்களை அவர் மேற் கொண்டிருக்கின்றார். அவருடைய கூட்டுறவு எங்கள் விடுதியை ஒரு ஆசிரமமே ஆக்கிவிட்டது.

ஒரு ஆப்பிரிக்கா தேசத்துத் தமிழன்பர் வந்தார். அவரும் எங்கள் விடுதியிலேயே தங்கினார். ஆங்கில உடை ஆங்கிலப் பேச்சு இவைகளைத் தழுவி இருந்தார். அவருடைய உச்சரிப்பும் தோரணையும் வெகு உயர் வாகவே இருந்தன. அறிவு முதிர்ச்சியும் மிக இருந்தது. அவரே தமிழ் விழாவை ஆப்பிரிக்காவிற்கு அழைத்தார். ஆப்பிரிக்காவிற்கு ஏன் போகக்கூடாது என்று நினைத்தோம்.

பகலெல்லாம் ஊர் சுற்றிவிட்டு இரவில் கலா நிலையத்தில் தங்கினோம். காலையில் விடிவதற்கு முன்னமே நானும் மற்றொரு நண்பரும் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கேணியில் நீர் இறைத்துக் குளிப்போம். மற்றவர்கள் சிறப்பாக இளைஞர்கள் நிதானமாக எழுந்து சாவகாசமாகக் குளித்து வரு வார்கள். கண்ணாடி, சோப்பு, சீப்பு, நறுநெய் முதலிய சரக்குகளைப் பற்றி அடிக்கடி விவாதம் வந்துவிடும். ஒருவர் ஒன்றை எடுத்து பயன்படுத்திக்கொண்டு ஒரு இடத்தில் வைத்துவிடுவார். மறந்தும் போவார். மற்றொருவர் அவைகளைக் கேட்பார். 'எனக்குத் தெரியாது' என்று விடை வரும். மற்றவருக்கு சினம் வரும். பிறகு தேடுதல் தொடங்கும். கடைசியில்

சரக்கு கிடைத்துவிடும். இதற்கு வெறும் ஆர்ப்பாட்டம். இந்தவகையில் சிறு சம்பவங்கள் அடிக்கடி நடைபெறும். தகப்பனுக்கும் பிள்ளைக்கும் நேரிடும் சிறு வாக்குவாதமும் மிகுதியாக இருந்தது. அவ்விதச் சம்பவங்கள் சோம்பலைத் தகர்த்துவிடும். உற்சாகத்தைக் கிளப்பிவிடும். தெவிட்டும் பாயாசத்திற்கு இஞ்சித் துவையல் தொட்டாற்போல் அது இருக்கும். நீண்ட இன்ப இல்லற வாழ்வில் சுவை இல்லை. ஆனல் ஊடல் இடையிடையில் நேரிட்டால் சுவை மிகுதி ஆகும். அதுபோல இச்சிறு சச்சரவுகள் எங்கள் பயணத்திற்கு ஊறுகாய் கிடைத்தாற்போல இருந்தன. ஆகவே நாங்கள் கலா நிலைய வாழ்வை மெச்சிக் கொண்டாடினேம்.

யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களின் அன்பே அன்பு! யாங்கள் கலா நிலையத்தில் தங்கியிருந்த செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. அன்பர்கள் பலபேர் அடிக்கடி வந்து எங்களை உற்சாகம் மூட்ட வருவார்கள். பல செய்திகளைக் குறித்தும் வெகுநேரம் பேசுவார்கள். இரவு உணவு அருந்திய பிறகும் வெகு நேரம் பேசிக் கொண்டே இருப்பார்கள். அதனல் எங்களுக்கு ஆயாசம் தீரும் என்பது அவர்கள் எண்ணம். அது போலவே தென் ஆப்பிரிக்கா நண்பரையும் உற்சாகப் படுத்தும் எண்ணத்துடன் ஒரு நண்பர் அவரிடம் இரவில் நள்ளிரவு மட்டும் பேசிக்கொண்டே இருந்தார். நாங்களும் தூங்க இயலவில்லை. திடீரென்று செயலாளர் வந்தார். இவ்வாறு வேண்டாத உதவி தருவதைக் கண்டு மிகவும் கண்டித்தார். பேசிக்கொண்டிருந்த நண்பருக்குத் தேள் கொட்டியதுபோல் ஆயிற்று. உடனே பொறுத்துக்கொள்ளும்படி வணக்கம் கூறி விட்டு இருளில் மறைந்தார். நாங்களும் உறங்கினேம்.

இச்செய்திகள் அற்பம் ஆனலும் மக்களை உற்சாகப் படுத்திப் பண்புகளை தெள்ளெனத் தோற்றுவிக்கின்றன அல்லவா!

4. நாடு காண்கிறோம்.

யாழ்ப்பாண வட்டத்து நாட்டுபுறங்கள் ஊர்கள், கோயில்கள் முதலியவைகளைப் பார்க்கவேண்டுமென்ற அவாமிருந்தது. அதற்கேற்ற வாய்ப்பும் ஓய்வும் கிடைத்தது. உடனே புறப்பட்டோம். கூடியமட்டிலும் பார்த்தோம். முதலில் கீரிமலைக்குச் சென்றோம். பாரத நாட்டிற்கு கயா எப்படியோ அப்படியே யாழ்ப்பாணத் ,தமிழருக்குக் கீரிமலை இருந்தது. பெயர்தான் மலை. அங்கே மலை இல்லை. வடகடல் ஓரம் பாறைகள் நில மட்டத்,தில் இருக்கும். அவைகள் மலையென்று உயர்வு நவிர்ச்சியில் கூறினார்கள் போலும். கோவைக் கடுத்த தடாகத்தில் தடாகம் இல்லை. பெரிய தடாகத்தில் ஒரு சிறு கிணறும் இல்லை. வானமாமலையில் மலை இல்லை. விருத்தாசலத்தில் அசலம் இல்லை. அதுபோலவே கீரிமலையிலும் என்க. கடற்கரையோரத்தில் அருமையான வாவி ஒன்று உண்டு. அது கட்டு வாவி. முட்டை போன்ற வடிவம் ஒருபுறம் கொண்டது. கடலுடன் கால்வாயில் இணைக்கப்பெற்றது. சுற்றிலும் நல்ல படிக்கட்டுகள். குளிக்கப் பக்குவமாய் 4, 5 அடி நீர்தான் உண்டு. வடபுறத்திலிருந்து உப்பு நீரும் தென்புறத்துக் குகையிலிருந்து நன்னீரும் வரும். உயர் அலையில் உப்பும் தாழ் அலையில் நன்னீரும் நிரம்பும். இந்தக் கலப்பினால் குளிப்பு சுகத்தைத்தரும். எல்லாரும் நீந்தி மகிழ்வார்கள். ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு தடாகங்கள் உண்டு. குளித்துவிட்டு அருகில் உள்ள சிவாலயத்தில் பூசை முடித்துக்கொண்டு ஒரு கிணற்றடியில் சிற்றுணவு அருந்திவிட்டு மாவிட்டபுரம் சென்று கந்தப்பெருமானை வணங்கிவிட்டுக் காங்கேசன் துறையில் கலங்கரை விளக்கத்தைப் படம் பிடித்தோம். வழியில் ஒரு சாயாக்கடையில் விலைநீர் அருந்திவிட்டுக் கிழக்கே சென்றோம். சிறிது தொலைவு சென்றதும் படம் பிடிக்கும் பெட்டிகாணவில்லை. அதன் முதலாளி கவலைப் பட்டார். தன் மகனிடம் கடமை உணராததேன் என்று சொன்னார். அவன் முகம் சுளித்தது. உடனே நாங்கள் திரும்பினோம். பெட்டி கடையிலேயே இருந்தது. கடைக்

காரனுக்கு நன்றி செலுத்திவிட்டு மேலே சென்றோம். கந்தவனக்கடவில் அழகிய மரப்பொழில்களின் இடையே அமர்ந்த கோயிலை வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டு பருத்தித்துறைக்குப் போனோம். அது ஒரு வாணிபத்தலம். காற்றுக் கப்பல்கள் பர்மாவிலிருந்து இங்கே வருவதுண்டாம். ஒரு பகுதிக்கு வியாபார மூலை என்ற பெயர் இருப்பதே சான்று. பின்னர் வல்லிபுரம் என்ற பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். இறுதியில் தொண்டைமான் ஆற்றின் கரையில் உள்ள செல்லச்சன்னிதிக்குச் சென்றோம். நடுப்பகல்; கடுமையான வெய்யில்; வெட்ட வெளியில் சிறிய கோயில். முன் கொட்டம் சுமாராக இருக்கும். கோயிலின் முன்னர் பூவரசு மரங்கள் நிழலைக் கொடுக்க அவற்றின் கீழே தின்பண்டக் கடைகள் நிரம்ப இருந்தன. அன்று வெள்ளிக்கிழமை. தேர் விழாப்போல் மிகுந்த கூட்டம். பிரார்த்தனைக்காரர்கள் மிகுதியாக வந்திருந்தார்கள். இரண்டு தம்பதிகள் வாய்ப்பூட்டிட்டுக் கொண்டு காவடி எடுத்துவந்தார்கள். சகிக்கமுடியாத காட்சி. வாய்ப்பூட்டை எடுத்தபோது அவர்கள் பட்ட துன்பத்தை எவரே காணவும் பொறுக்கவும் முடியும்? இப்படியும் மூடபக்தி இருக்குமா? படிப்பில்லாத மக்களிலே மூடபக்தி ஒரு அற்புதமாக விளைகிறது. பாரத நாட்டில் இது இன்னமும் நடக்கிறது. கல்வி அதிகரித்துப் பயனென்ன? படித்த மக்கள் திருவள்ளுவனார் தவக் கொள்கையை அறிந்து இவ்வித உடல் வதைகளை நிறுத்தவேண்டாமா என்று எண்ணினோம்.

யாழ்ப்பாண வட்டம் முப்புறமும் கடலால் சூழ்ந்த சமநிலம். கடல் மட்டத்திற்கு 4, 5 அடி உயரம்தான் இருக்கும். பெரும்பான்மையாகப் பனை, தென்னை முளைக்கும். பயிர்களில் புகையிலை மிகுதி. சில இடங்களில் வாழை உண்டு. மற்றத் தானியங்கள் குறைவே. நீர் உப்பு. அது எங்கள் தாகத்தைத் தீர்க்கவே இல்லை. சிறுவாணித் தண்ணீர் குடித்துப் பழகின எங்களுக்கு யாழ்ப்பாண உவர் நீர் ஆறுதல் தருமா?

மேல் பகுதியில் தீவுகள் உண்டு. காரைத் தீவு, மேலணை, சரவணை, ஊர்காவற்றுறை முதலிய பல தீவுகள் உண்டு. இடையில் உள்ள கடல் வழிகள் ஆழமில்லாதவை. தற்போது நடைபாதையால் இணைத்திருக்கிறார்கள். சில இடங்களில் தோணிகளில் கடக்க வேண்டும். சரவணைக்குச் செல்ல முயன்றோம். மக்கட் கூட்டத்தில் பரசல் கிடைக்கவில்லை. நாகத் தீவும் கடலரணும் காணமுடியவில்லை. பௌத்தச் சிங்களர்கள் மணிமேகலை கூறிய மணிப்பல்லவம் என்ற நாகத் தீவைக் கண்டுகொண்டு யாத்திரை புரிவதைக் கண்டோம்.

அங்கே கழியின் ஓரத்தில் மூங்கில் படலை கட்டி அதிலே பெரிய ஆமைகளைச் சிறைப்படுத்தியிருந்தார்கள். ஆமையை ஒருவன் தூக்கி நிறுத்தினான். அடியில் வெள்ளை வெளேர் என்று இருந்தது. அது 200 மணங்கு இருக்குமாம். 100 ரூபாய் விலையாம். அதனை விட்டவுடனே அது உயிருக்கு அஞ்சி ஓடின ஓட்டம் நினைக்கவும் அரிது.

நல்லூர்க் கந்தர் கோயில் ஒரு புனித இடம். மிகுந்த அன்போடு மக்கள் சென்று பணிகிறார்கள். அங்கே தொழுதுவிட்டுப் பள்ளியறை விழா பார்த்துவிட்டுத் திரும்பினோம். மக்களுடைய சமயப்பற்று மிகுதியும் இங்கு உண்டு. வண்டி ஓட்டியும் கோயில் தரிசிக்காமல் ஓட்டவும் மாட்டான். நம் நாட்டில் அவ்வாறு உண்டா?

யாழ்ப்பாணத் தீபகற்பம் பெரும்பாலும் மலையாள நாட்டை ஒத்திருக்கக் கண்டோம். மக்கள் பேச்சின் உச்சரிப்பு, குடும்ப வழக்கங்கள், ஆடை அணிகள், நிலத்து வளமை, தென்னை, பனை முதலியவைகளின் பெருக்கம், கிணறுகளோடு அவற்றின் பயன்கள் முதலிய பல காரணங்களும் யாழ்ப்பாணத்தை மலை நாட்டுப் பகுதி ஆக்கிவிடுகின்றன. ஆனால் வெய்யிலோ அதிகம். மழையோ குறைவு. இருந்தாலும் அந்நாட்டை ஏன் ஒத்திருக்கிறதோ!

சரித்திரத்தை ஆராய்ந்தால் மலைநாட்டிற்கும் இந்த ஈழப் பகுதிக்கும் தொடர்பு இருக்கிறதென்று அறியலாம். இந்த வகையில் இரண்டும் ஒத்து உள்ள பண்பாட்டை வியந்தோம். பேச்சின் உச்சரிப்பும், சொற்களின் அமைப்பும் 'ஆ' என்ற எழுத்து 'ஓ' ஆக மாறுவதும் கண்டு எங்கள் இளைஞர்கள் அந்நாட்டார்போலப் பேசவும் விகடம் செய்யவும் முயன்றது ஆச்சரியமோ?

5. விழா அயர்ந்தோம்.

தென் நாட்டிலே எந்த தலத்திலும் பிரமோற்சவம் என்ற பெருந் திருவிழாவிற்கு முந்தி, கிராம தேவதை விழா என்ற அம்மன் திருவிழா நடக்கும். அதுபோல யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவிற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்குப் பெருமை நாட்டின தலைவர் விழா நடந்தது. உயர்திருவாளர் சர். பொன்னம்பல இராமநாதன் அவர்கள் அரசியலிலும் தமிழ்க் கல்வியிலும் சமயத் துறையிலும் நாட்டுச்சேவையிலும் பெரும்புகழ் படைத்தவர். கொழும்பு யாழ்ப்பாணம் என்ற இரண்டு இடங்களிலும் அன்னாருடைய சேவைச் சின்னங்களை எங்கும் காணலாம். சிதம்பரத்தில் சைவ சித்தாந்த மகாசமாசத்தின் முதல் ஆண்டு விழாவில் தலைமை வகித்து யாழ்ப்பாணத்தின் பெயரைத் தமிழ் நாட்டில் தெரியப்படுத்தின பெரியார் அவரே. அவரது நூற்றாண்டுப் பெருவிழாவை முதல் நாள் நடத்தினார்கள்.

யாழ்ப்பாணத்திலும் ஒரு திருநெல்வேலி உண்டு. அங்கே பரமேசுவரன் கல்லூரி என்ற ஒரு அரும்பெரும் கல்லூரி இருக்கின்றது. ஆயிரக் கணக்கில் மக்கள் கல்வி பெறுகிறார்கள். யாழ்ப்பாணத்துப் பெருங் குடும்பத்துப் பிள்ளைகளும் பெண்களும் இதிலும் இராமநாதன் கல்லூரியிலும் படித்தவர்களே ஆவார்கள். அவைகளில் பரமேசுவரன் கல்லூரியின் வளைவில் மிகப் பெரிய காவணம் ஒன்றை நிறுவித்திருந்தார்கள். அது தேவாசிரிய மண்டபமே என்று வியக்கும் முறையில்

இருந்தது. அருகில் கல்லூரி மண்டபத்தில் கலைப் பொருள் காட்சிச்சாலை வைக்கப்பட்டிருந்தது. இந்த அழகிய காவணத்தில் நூற்றுண்டுவிழா நடை பெற்றது.

தமிழ் பெருமகனுரின் அரிய சேவைகள் வெகு சிறப்பாக ஆளப்பட்டன. சென்னையிலிருந்த பெரிய நீதி மன்றத் தலைவர் தலைமை வகித்தார்கள். இலங்கைப் பெரியார்கள் பேசினர்கள். தென்னுட்டுப் பெரியார்களும் பேசினர்கள். விழாத் தலைவரின் மனைவியாரும் மகளாரும் வந்து மகிழ்ந்தார்கள். மருமகனர் நன்றி கூறினர்கள். இந்த முறையில் தலைவர் பெருவிழா நடந்தது. அந்தத் தலைவரே இலங்கைத் தமிழரின் பண்பாட்டை இங்கிலாந்து, அமெரிக்கா, பாரத தேசம் இவைகளில் நிறுவிப் பெரும் புகழை அளித்தவர். அன்னுரின் விழாவை முதல் நாள் நடத்தினது பொருத்தமானது அல்லவா?

அடுத்த நாள் தமிழ்ப் பெருவிழா நடைபெற்றது. இயலுக்குச் சேதுப்பிள்ளையும், கலைக்குக் கிருஷ்ணனும், சரித்திரத்திற்கு நடேசம் பிள்ளையும் தலைமை வகித்தார்கள். சர். கந்தையா வைத்தியநாதன் முதலியோர் தொடக்கப் பேச்சுக்களைப் பேசினர்கள். இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல புலவர்கள் பேசினர்கள். பேச்சுக்களைக் கேட்ட எனது இளைய தோழர்கள் அவ்வளவாக அவைகளை இரசிக்கவில்லை. அவை உயர்ந்த நடையோடு தாழ்ந்த மழலைகளும் குதலைகளுமாக இருந்தன. நகைச் சுவையோடு அவலச் சுவையும் தோன்றியது. தமிழ்நடை இப்படியும் சீர்கெட வேண்டுமா என்று ஒருவர் கேட்டார். ஆனல் எல்லாக் குறைகளும் கூட்ட மிகுதியில் ஆர்ப்பாட்டத் தொகுதியில் மறைந்துவிட்டன.

மாலை நேரங்களில் நடந்த ஆடல் பாடல்களும் பொம்மலாட்டங்களும் பாமர மக்களை மிகவும் மகிழ்வித்தன. உணவு வகைகள் முதலில் அளவு தெரியாத வகையில் சீர்குறைந்த போதிலும் பின்னர் ஒழுங்கு

செய்யப்பட்டன. தங்குமிடங்கள், வாகன வசதிகள், சிற்றுண்டி இடங்கள் முதலியன செவ்வையாக இருந்தன.

ஆந்திர நாட்டுத் தெலுங்கரைத் தமிழ் நாட்டுத் தெலுங்கர் கேட்டால் மிகவும் கடூரமாக இருக்கிறதென்பர். தமிழ் நாட்டுத் தெலுங்கை ஆந்திரன் கேட்டால் கொச்சை என்பான். அதைப்போலவே இலங்கைத் தமிழை சென்னைத் தமிழன் கேட்டால் இலக்கணமாக இருக்கிறது என்பான். சென்னைத் தமிழை இலங்கையில் கேட்டால் கொச்சை என்பான். ஆனால் இந்த முறை தமிழ் விழாவில் சென்னையார் இயற்றிய தமிழுரைகள் உண்மையில் மழலைகளாகவே இருந்தன. உச்சரிப்பு மட்டுமன்றி பொருளிலும் அவ்வாறே இருந்ததெனச் சொன்னார்கள் எனது இளைய தோழர்கள்.

இயல் பகுதிக்கு தலைமை வகித்த சென்னைப் பேராசிரியர் காலம் தாழ்ந்து வந்தார். ஆனால் நிகழ்ச்சி நிற்கவில்லை. பேச்சாளர் பேசத் தொடங்கிவிட்டார். பின்னர் வந்த தலைவர் சமயத்திற்கேற்றபடி அதனை நன்மைக்குத் திருப்பிக்கொண்டு பேசினார். ‘இலங்கையில் முற்போக்கு அமைந்திருக்கும் தமிழ் ஆனது மக்களுக்குக் காத்திராது என்று தெரிவித்துவிட்டது. ஆகையினால் எச்சரிக்கையுடன் நடக்கவேண்டியிருக்கிறது’ என்ற பொருள்பட பேசினார்

“போற்றினும் போற்றுவர் ....
... ...
.... சொன்ன சொல்
மாற்றினும் மாற்றுவர் ....”

என்றபடிக்கும் “பாவமும் அறமதாகும் அடியார்களிடம்” என்றாற்போலவும், குறைவை நிறைவு ஆக்கினார்.

இந்த விழாவில் விவிலியமும் இசுலாமியமும் பங்கு எடுத்துக்கொண்டது போற்றத்தக்கது. இந்த முறையும் மேடை மீது எனக்கு ஒரு பேச்சு கிடைத்தது.

தென்னுட்டிற்கும் தென்னிலங்கைக்கும் உள்ள உறவைப்பற்றிப் பேசினேன். கலையுறவோடு உடலுறவும் இருக்கவேண்டும் என்று பேசினேன். எல்லாமே என்றுமில்லாத பெருமையில் நடந்தது. எங்கள் குழுவும் மகிழ்ந்தது.

6. பண்டைக் கலைகளைக் கண்டோம்.

யாழ்ப்பாணத்தில் விடைபெற்றுக்கொண்டு கிழக்கே சிறிது தொலைவு சென்றுப் பிறகு தெற்கே திரும்பினேம். யானையிறவுக்கு இருபுறமும் நீர் சூழ்ந்த தாழ் இடங்கள், பிறகு, இலங்கையின் சமபரப்பு, இவற்றிற்குச் சென்றோம். இருபுறங்களும் பெரிய மரங்கள், அடர்ந்த சோலைகள் தோன்றின. கோயிலைக் கண்டால் எங்கள் விசைவண்டி ஓட்டி நிறுத்திக் கற்பூரம் பற்றவைத்துத் தொழுதுவிட்டுத்தான் மேலே செல்வான். எங்கள் விருந்தாளிகள் தந்த நல்லுணவை ஒரு வழிப் பிள்ளையார் கோயிலருகே உண்டுவிட்டு மேலும் சென்ரேம். அனுராதபுரத்தைப் பகல் சாய்ந்த பிறகு அடைந்தோம். விவேகாநந்தர் பள்ளியில் இறங்கி ஆலயக் கேணியில் குளித்துவிட்டு முருகக் கடவுளைத் தொழுது விட்டுஉணவு அருந்திவிட்டு இளைப்பாறினேம்.

எங்களில் ஒருவருக்கு அனுராதபுரம் என்ற பெயரே வாயில் நுழையவில்லை. சிறுவர்களுக்கு அது வியப்பாக இருந்தது. பிறகு பண்டைக் கலைகளைப் பார்க்கச் சென்ரேம். வெள்ளரசுக் கோயில் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருக்குமா என்பது ஒருவர் கேள்வி. மகிந்தன் கொண்டுவந்த அரசு இன்னும் வளர்ந்துகொண்டே வருமா? பௌத்தர்கள் அதுதான் அவ்வரசு என்று நம்புகிருர்கள். ஆயிரக்கால் கொண்ட வெண்கல மாளிகை இப்போது குறுகிய கற்கால்களோடு மட்டும் ஏன் நிற்கிறது? ஏழு தளங்கள் இவையின்பேரில் எப்படி நிற்கும் என்று ஒருவர் கேட்டார். ஈசுவரமுனி கற்குகைக் கோயிலில் இந்து சமய உருவங்கள் ஏன் இருக்கின்றன என்ருர்



தமிழ் விழாவில் கோவை கிழார்



தமிழ் விழாவில் அமைச்சர் நடேசம் பிள்ளை

மாவிட்டபுரம் கந்தகோட்டம்



அனுராதபுரம் ஈசுர முனி

மற்றவர். திருக்குளத்தில சின்னஞ்சிறு ஆமைகளை ஏன் வளர்த்துகிறார்கள் என்றார் வேறொரு பிள்ளை. பின்னால் பராக்கிரம பாகு கட்டிய பெருங்குளம் எத்தனை பெரியது? இக்காலத்தில் கட்டமுடியுமா என்று வியந்தார் வேறு ஒரு இளைஞர். மலைபோல் கட்டப்பட்ட பல் தூபிக்கு எத்தனை செலவாயிற்றோ? சுற்றிலும் யானை உருவங்கள் ஏன் வைக்கப்பட்டன. இந்த நாளில் இவற்றின் திருப்பணிக்குப் பணம் கொடுக்கிறார்களே என்ன மதியீனம் என்றார் ஒருவர். நமது இந்துக் கோயில்களுக்குக் கல்லில் பணம் போடுகிறார்கள். இங்கே செங்கல்லில் பணம் இறைக்கிறார்கள் என்று மற்றொருவர் விடையளித்தார். கணக்கற்ற பௌத்த யாத்திரிகள் செந்தாமரைகளைக் கொண்டுவந்து இந்தத் தூபிகளுக்கு அர்ச்சனை செய்கிறார்கள். அங்கே ஒரு கூடத்தில் அருமையான ஓவியங்கள் இருக்கின்றன. சிங்கள நாட்டுச் சரிதப பகுதி அங்கே உருவங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஏலேலசிங்கனைத் துட்டகெமுனு வென்ற கதை இங்கே உருவத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது. மஞ்சள் காவியில் தோன்றும் புத்த பகவானின் திருவுருவம் என்ன பொலிவோடும் புன்சிரிப்போடும் விளங்குகிறது. திருவுருவத்தைக் கண்டாலே கைகள் கும்பிட எழும்புகின்றன. என்ன புனித இடம்? பிறகு புனித வனம் முற்றும் சுற்றிப் பல பாழடைந்த ஆலயங்கள், செடி, கொடி முளைத்த செய்குன்றுகள் முதலியவையெல்லாம் கண்டுவிட்டு எங்கள் இடத்திற்கு வந்தோம்.

இங்கேயும் ஒரு தமிழ்நாட்டுக் காப்பிக்கடை இருந்தது. இட்டலியும், தோசையும் நன்றாக இருந்தன. உண்டுவிட்டு இரயிலடி தாண்டிச் சென்றோம். புது நகரம் அங்கே கட்டப்பட்டு வருகின்றது. இரயில் தொழிலாளிகள் மேதிருநாள் கொண்டாடிக்கொண்டு இருந்தார்கள். தொலைவில் ஒரு பெரிய ஏரி, அதன் கரையில் ஒரு பிள்ளையார் கோயில், அதற்குச் சென்று கோயிலை அருகித் தொழுதுவிட்டுத் திருநீறு பெற்று வந்தோம். கோயில் தன்னந்தனியே நிற்கிறது. ஆனால்

அதைக் கர்த்துக்கொண்டு ஒரு பண்டாரக் குடும்பம் அங்கே வசிக்கிறது. சமயத்தில் என்ன ஈடுபாடு என்று எண்ணினேம்.

மறுநாட் காலேயில் அனுராதபுரத்தை விட்டுக் கிழக்கே சென்ருேம். ஐந்து கல்கள் சென்றதும் ஒரு மலேத்தொடர் தெரிந்தது. அதன்மேல் தூபிகளும் சைத்தியங்களும் தெரிந்தன. அதுதான் அசோக மன்னன் புதல்வன் மகேந்திரன் வந்து இலங்கை அரசனுக்குப் புத்த தருமம் போதித்த இடம். அதனுல் இதன் பெயர் மிகுந்தலே (மகேந்திரன் தலம் என்பதன் மருவு) போலும். அந்த குன்றுகளில் மேல் ஏறினேம். இளமை வெய்யிலிலே அம்மலேயில் ஏறினதோ வெகு இரம்மியமாக இருந்தது. முதலில் படிகள் அகலமாக இருந்தன. இடையிடையில் சம இடங்களில் வெள்ளே அலரிக்குத்து மரங்கள் பூத்திருந்தன. மலேமேல் நீர்ச் சுனேகளும் இருந்தன. ஒரு பெரிய செங்குத்தான பாறையின்மேல் ஒரு சிறு சின்னம் இருந்தது. அதனே ஏறுவதற்குக் கம்பிகள் நட்டிருந்தார்கள். கமபியில்லாத நாளில் எப்படி ஏறிஞர்களோ அறியோம். சிறுபிள்ளேகள் தைரியமாக ஏறிஞர்கள். என்ஞல் ஏறமுடியவில்லே. கீழே உட்கார்ந்துகொண்டேன். சிங்களத் துறவிகள் அங்கங்கே இருந்தார்கள். தற்கால அரசியலார் பழைய தூபிகளே புதுப்பித்து வருகிருர்கள். மலேவிட்டுக் கீழே இறங்கியதும் சிறிது தாகம் தீர்த்துக்கொண்டு மேலே சென்ருேம்.

பாதையின் இரு பக்கங்களிலும் அருமையான வனங்கள். பாதையோ மிக ஒழுங்கு. ஒரே நேர்கோடு இழுத்தாற்போல இருந்தது. ஒருவிதமான வளேவும் இல்லே. ஆனல் சில இடங்களில் ஏறும், சில இடங்களில் இறங்கும். இடையிடையே மரங்கள் வெட்டப்பட்டு வயல்கள் செய்யப்பட்டுள்ளன. குளங்கள், மதகுகள் அங்கங்கே காண்கிருேம். ஆகா, என்ன அருமை. குரங்குகள் மரங்களின் மீது தாவிக்கொண்டு செல்லுவதைக் கண்டால் அனுமான் இங்கு வந்தபோது

அவனைக்கண்டு இவைகள் பழகிக்கொண்டனவோ என்று மயங்கினோம். வழியில் இறங்கினால் தொட்டாற் சுருங்கி எங்களைக்கண்டு வாடுகிறது. நாங்கள் என்ன முரடர்களா என்று எண்ணினோம்.

'தொட்டாற் சுருங்கி'க்கு உள்ள உணர்ச்சி சில ஆறறி உயிர்களுக்கு இல்லையே என்றான் எங்களில் ஒரு இளைஞன். 'என்ன தம்பீ, ஒரு அறிவு உயிர் ஆகிய இந்த 'தொட்டாற் சுருங்கிக்கு உள்ள உணர்ச்சியும் ஆற்றி உயிர்களாகிய மக்களுக்கு இல்லாமல் இருக்குமா' என்று கேட்டேன். 'ஏன் இல்லை. சில மனிதர்கள் சொன்னதையே சொல்லிக்கொண்டிருப்பார்கள். என்னவிதமாக எடுத்துச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் அவர்களுக்கு உணர்ச்சி உண்டா? இந்தச் செடிக்கு உள்ள நாணமும் அவர்களுக்கு இல்லை' என்றான் அவன்.

'இந்தச் செடிக்கு முள் இருக்கிறது. ஆனால், சிறிய அழகிய உருண்டைப் பூச்செண்டுபோன்ற மலர்களும் உண்டு. அதனால் என்னமோ அவைகள் நாணு கின்றன.'

'இருக்கலாம். உணர்ச்சி இல்லாத மக்களுக்குப் பணம் இருக்கலாம். ஆனால் அழகும் மணமும் இருக்கா' என்றான்.

அதற்குள் செல்லும் இடம் சென்றோம், பேச்சும் நின்றது.

7. கீழ்க்கடல் அரணைக் காண்கிறோம்.

கிழக்கடற்கரை நோக்கிச் சென்றோம் அல்லவா. அவ்வாறு செல்லுகையில் அழகிய வனங்களின் இடையிலே கன்னியா வெப்பக் கிணறுகள் என்ற ஒரு கைகாட்டி மரத்தைக் கண்டோம். அதனைப் படித்த இளைஞர்கள் கிணறு எப்படி வெப்பமாக இருக்கும் என்று கேட்டார்கள். அது ஒரு இயற்கை அதிசயம்; விரைவிலே நேரில் காண்பீர்கள் என்று விடைகூறினேன். சிறிது நேரத்தில் அங்கே போய்ச் சேர்ந்தோம். ஒரு மேட்டுச் சாரலின் அடியிலே சின்னஞ் சிறு தொட்டிகள்போலக்

கிணறுகள் இருந்தன. அவைகளைச் சுற்றி ஒரு சுற்று மதில் கட்டப்பட்டிருந்தது. கிணறுகள் மூன்றுக்கும் இரண்டிற்கும் ஆக, ஆழம் மூன்று அடிக்கும் இருக்கும். வெய்யில் வேளையில் அந்த வெப்ப நீரில் குளிக்கச் சிரமமாக இருந்தது. இருந்தாலும் நாங்கள் எல்லாரும் நிரம்ப நேரம் குளித்துவிட்டுப் படமும் எடுத்துக் கொண்டு அடுத்து இருந்த ஒரு சாயா விடுதியில் சிற்றுண்டி உண்டோம். தற்கால வழக்கத்தை ஒட்டி அக்கடை வெகு சௌகரியமாகக் கட்டப்பட்டிருந்தது. சிங்களர்கள் வெள்ளையரை அனுசரித்து இவ்வித சௌகரியங்கள் செய்து பணமும் சம்பாதிக்கிறார்கள் என்று பேசிக்கொண்டோம். தென்னிந்தியாவில் குற்றாலத்திலும் இவ்விதமான சௌகரிய விடுதிகள் இல்லையே என்றும் இருக்கும் சிலவற்றிலும் தற்கால முறைகள் இல்லையே என்றும் எண்ணினோம்.

நடுப்பகலில் திருக்கோணமலை அண்டினோம். இராமகிருஷ்ணக் கல்லூரியில் தங்கினோம். திரு நடராஜானந்த அடிகள் வசதிகள் செய்துதந்தார். பிள்ளைகளுக்கு ஒரு பேச்சும் பேசினேன். பிற்பகலிலே ஊர் சுற்றச் சென்றோம். கீழ்க்கடற்கரையில் உயர்ந்த கரும் பாறைகள் கடலில் நீண்டு இருக்கின்றன. அவ்விதமான பாறைகள் பல விரிகுடாக்களையும் ஒரு பெரிய வளைகுடாவையும் செய்கின்றன.

பாறைகளின் உச்சியில் ஏறிப்பார்த்தோம் அடியிலே நீலக்கடலில் திரைகள் பெரும் இரைச்சலுடன் பாறைகளின்மேல் மோதி அடிக்கின்றன. செங்குத்தான பாறைகள் உடைந்தெழுந்த சுரங்கச் சரிவுகள்போல கரடு முரடாக இருக்கின்றன. கருங்கடலைக் கண்டோம். சொல்ல ஒண்ணாத பயங்கரம் தோன்றுகிறது. ஆக இவைகளின் அடியில் எவ்வாறு செம்படவர்கள் சிறு படகுகளைச் செலுத்திக்கொண்டு போகிறார்களோ அறியோம். அப்படகுகள் பாறைகளின்மீது மோதினால் அவைகள் கதி என்ன ஆகுமோ? உயிருக்குத் துணிந்த சாகசம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் இந்த

செம்படவர்கள் என்று எண்ணினோம். மேலே பாறையிலிருந்து அடியே நீர்மட்டம் வரையில் செல்லும் கோணல் பின்னல் பாதை ஒன்று தெரிந்தது. அதில் இறங்க வேண்டும் என்று இளைஞர்கள் துணிந்தார்கள். பொழுது இல்லாமையால் அது செய்ய நாங்கள் விடவில்லை.

அந்த உயர்ந்த செங்குத்தான பாறையின்மேல் குளக்கோட்டன் கோணேசர் ஆலயத்தைக் கட்டினனும். அதனை ஆடகசுந்தரி அழிக்கக் கட்டளை இட்டாளாம். ஆனல் அவனே அவளையே மணந்துகொண்டு அவளால் பல அரிய பணிகளையும் செய்வித்தான். பின்னல் இதே கோயிலுக்குச் சம்பந்தர் ஒரு அருமையான தேவாரம் பாடினர். ஐந்நூ-முன் பறங்கியர் இக்கோயிலை அழித்தார்கள். பிறகு இது ஒரு படை வீடு ஆயிற்று. ஒரு சிறந்த அரண் கட்டப்பட்டது. தற்போது இங்கே பலமான அரண் நிற்கிறது. கோயில் இருந்த இடம் சுவாமிப் பாறை என்ற பெயர்பெற்றது. வாரம் ஒருமுறை பூசை நடைபெறுகிறது. மற்றநாட்கள் உத்தரவு பெற்றுத்தான் போகவேண்டும்.

கோட்டைக்கடுத்த வளைகுடாவைத் துறைமுகம் ஆக்கி உள்ளார்கள். இங்கே ஓரிடத்தில் போர் வீரர்கள் நீந்துவதற்கு ஒரு அமைவு செய்திருக்கிறார்கள். 20 அடி உயரத்திலிருந்து அவர்கள் குதித்து நீந்துவதைக் காண அற்புதம் ஆக இருக்கிறது. துறைமுகம் உலகிலேயே மிகச் சிறந்தது. பெரியதும் ஆகும். உலகில் எங்கும் உள்ள எல்லா க்கப்பல்களும் வந்தாலும் அது இடங்கொடுக்கும். அதற்குப் பல ஒதுக்கு இடங்கள் உண்டு. எந்த அபாயக் காலங்களிலும் மறைந்து இருக்க நீர் நிலையங்கள் உண்டு. சீன விரிகுடா என்பது ஒரு அரிய இடம். அதற்கருகில் வான விமான நிலையம் மண்எண்ணெய் நிலையம் முதலியன உண்டு. கோடிக்கணக்கான செலவில் இராணுவ வேலைகள் இங்கே செய்துவைக்கப்பட்டன. ஆனல் ஒருநாட் காலை பயங்கரமான வெடி ஏற்பட்டது. பொருள்கள் நாசம்,

மக்கள் சாவு, இவைகளுக்கு கணக்கில்லை. அது ஜப்பானியரால் ஏற்பட்டதாம். இவைகள் முழுதும் பார்த்துவிட்டு வந்தோம்.

திருக்கோணமலை முந்தி சிறு ஊராக இருந்தது. தற்போது புற நகர்கள் ஏற்பட்டுக் கல்லூரிகளைக் கொண்ட பெரிய நகரம் ஆகிவிட்டது. சுவாமி விபுலானந்தர் ஏற்படுத்திய இந்துக் கல்லூரி வெகு நன்ருக வேலை செய்கிறது. கடற்கரை ஓரம் இலங்கை மாகாளி கோயில் இருக்கிறது. ஆறு கல்லில் ஆடகசுந்தரி கட்டின கண்டமழாய் ஏரி இருக்கிறது. இதில் கணக்கற்ற ஏகர் நிலங்கள் பயிராகின்றன. துறைமுகத்தில் மாவலி கங்கை விழும் இடம் மிக மனேரம்மியமான இடமாகும். அதனைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை.

8. நடுவனம் புகுகின்ருேம்

திருக்கோண மலையைவிட்டு தென்மேற்கே செல்லும் பெரும் வழி இலங்கைப் பரப்பிலுள்ள நடுவனத்தின் வழியே செல்லுகிறது. அழகிய வழவழப்பான பாதை இரு புறமும் பெரிய வனைந்திரம், யானை, புலி, சிறுத்தை முதலிய விலங்குகள், யதேச்சையாகத் திரியும் காடுகள். மரங்களோ வானளாவி இருப்பன. நீர் நிலைகள் சிற்ருறுகள் எங்கும் காணப்படுவன. முந்தி ஒரு முறை பாதையோரம் ஒரு புலி இறந்து கிடந்தது. அதன் நாற்றம் வெகு தொலைவு மட்டும் வீசிற்று. நரிகள், உடும்பு, கீரி முதலிய சிறு விலங்குகள் மிகுதியும் உண்டு. விடியலில் செல்லுகையில் அவைகளை மிகுதியும் காணலாம். 'நரியைப் பார்த்தால் நல்லது என்பார்களே என்ருன் ஒரு இளைஞன். நரியைக் காணுகிருேமோ இல்லையோ நல்லதுதான் பார்க்கப்போகின்ருேம் என்றேன். நெடுந்தூரம் சென்றதும் ஒரு சிறு ஊரும் அதனருகில் ஒரு மலையும் தெரிந்தது. மலை ஏறினேம். அம்மலையின் பெயர் தம்பளை. மேலே ஒரு சரிவில் இயற்கைக் குகைகள் நீண்டு ஆழ்ந்து இருந்தன. அவைகளைப் புத்தர் ஆலயங்கள் ஆக்கியுள்ளனர். குகைகள்

மிகப்பெரியவை. அருமையான உருவாரங்கள் உள்ளே இருந்தன. நூற்றுக்கணக்கான புத்த சிலைகள் உள்ளே உட்கார்ந்துகொண்டும் நின்றுகொண்டும் இருந்தன. எல்லாம் ஒரே மஞ்சள் மயம். வண்ணம் சிறிதும் மங்காதது போலும்! சில உருவங்களை செய்துவைத்த அரசர்களின் உருவங்களும் இருந்தன. கீழே தளம் பளபளப்பானது. மேலே முகட்டுப் பாறை ஓவியங்களால் தீட்டப்பெற்றது. இவ்வித விசித்திர வேலைப்பாடு எளிதில் காணமுடியாது. இந்த ஆலயங்களைக் காத்துக்கொண்டு பல பிக்ஷுக்கள் உறைகின்றார்கள். தாமரைகள் நிரம்ப விற்கப்படுகின்றன. யாத்திரிகள் பலர் இருந்தார்கள். எங்கள் வண்டி ஓட்டி இங்கே முணுமுணுக்கத் தொடங்கினான். அது அவனைப்போன்றவரின் இயல்பாய் இருக்கிறது.

அடுத்துச் சென்றது சிகிரியா என்ற சீயகிரி. இது ஒரு பெரிய மலை அரண். தந்தையைக் கொலைபுரிந்த ஒரு அரசன் (காசியபன்) இங்கே சரண்புகுந்துப் பலமான அரணைக் கட்டிக்கொண்டு உள்ளே இருந்தான். மலைச்சரிவில் எல்லாம் அவன் உறைந்த இடங்கள். எட்டமுடியாத இடங்களிலும் அருமையான ஓவியங்கள். அவைகளுக்கு ஏற ஒரு சுருள் படிக்கட்டு இரும்பினால் ஆக்கப்பட்டுள்ளது. மேலே மலை சிங்க உருவில் அமைக்கப்பட்டுள்ளது. சிங்கத்தின் கால் விரல் ஒரு ஆனைவிடப் பெரியது. மலைமேல் பெரிய கோட்டை. இவ்வரிய அரணை அந்நாளில் எவ்வாறு கட்டினானோ? இது விடைபெறாத கேள்வி. வெய்யில் மிகுதி ஆகவே மேலே ஏறவில்லை. இம்மலையை அரசாங்கம் தங்கள் தபால் முத்திரையில் அச்சடித்திருந்தால் அதன் பெருமையை அளக்க முடியுமா? ஆகா! உச்சியிலிருந்து பார்த்தால் சுற்றுநாடு எத்தனை அருமையாகத் தோன்றுகிறது. இம்மலையின் உருவம் வெகுதொலைவிலிருந்தும் தெரியும்.

பிறகு கிழக்கே சென்றோம். அதன் பெரும் பரப்பைப் பற்றி விவரிக்க வேண்டியதில்லை. சுற்றிலும் வானளாவிய பொழில்கள் இடையே நீல நீர்ப்பரப்புக்கள், சின்னஞ்

சிறு தீவுகள், அவற்றில் பல வர்ணப் பட்சிகள். நாங்கள் சென்ற பாதையோ இவைகளைக் சுற்றிச் சுற்றிச் சென்றன. சிறிது தூரம் சென்றதும் மற்றொரு பெரிய ஏரி. இது முன்னர் கூறியதைவிட மிகப் பெரியது. பெருங்கடல் போலுள்ளது. இதனை இயற்றியவனின் பெயரால் இந்த ஏரி பராக்கிரம பாகு சமுத்திரம் என்று வழங்குகிறது. சிங்களத் தீவை 12-ம் நூற்றாண்டில் வெகு பராக்கிரமத்தோடு ஆண்ட அரசன் பராக்கிரம பாகு என்ற பெயர் படைத்தவன். அவன் சிறப்புத் தான் என்னே! அவன் கட்டின மதகில் செல்லும் நீர் 'கடலின் மடை விண்டது' என்னப் பெரும் ஒலியோடு பாய்கிறது. அதுவே ஒரு கண் காணாக் காட்சி. மேலும் அவ்வேரிக்கரையின் கீழ் ஒரு மேட்டில் அவனது உருவம் பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஊர்தான் பொலன்னறுவை என்பது. தமிழில் புலனரி என்று எழுதப்பட்டுள்ளது. பொலன்னறுவை வெகு நூற்றாண்டுகள் இலங்கையின் தலை நகராக இருந்த ஓர் சிறந்த ஊர். அநுராதபுரம் முந்தித் தலை நகராக இருந்தது. அதனைத் தமிழர்கள் அழிக்கத் தொடங்கினார்கள். இலங்கை அரசன் வனங்களுக்கு ஓடி அதன் நடுவிலே அருமையான நகர் கட்டி ஆண்டான். தமிழர்கள் அதையும் விட்டபாடில்லை. அதன் மீதும் படையெடுத்து அதனையும் அழித்துத் தங்கள் நாட்டோடு அதனையும் சேர்த்துக்கொண்டார்கள். அவ்வாறு வென்ற சோழன் ராஜேந்திரன். ஒரு அருமையான சிவாலயம் இங்கே கட்டித் தன் மெய்க் கீர்த்தியை அதிலே வெட்டிவித்து சமய குரவர்கள் நால்வர்கள் நடராசப் பெருமான் இவர்களுடைய வெண்கலச் சிலைகளைத் தாபித்தான். பிறகு சோழ அரசு அழிய இலங்கை மன்னர்கள் மீண்டும் அரசாளத்தொடங்கினர். அப்போதுதான் பராக்கிரம பாகு என்ற பேரரசன் பல அரண்மனைகளையும் பௌத்த ஆலயங்களையும் கட்டுவித்தான். அவற்றின் சின்னங்கள் இன்றைக்கும் இங்கே காணுகிறோம். பெரிய குன்றுபோலத் தூபிகளும் நன்னீர்த் தீர்த்தங்களும் அகன்ற ஏரிகளும் கட்டப்

பெற்றன. கல்விகாரை என்ற இடத்தில், பௌத்தரின் மூவகை உருவங்கள் ஆன 'இருந்தான், நின்றான், கிடந்தான்' என்ற பெருஉருவங்கள் ஒரே பாறையில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் எந்த சிற்பி இயற்றினான் என்று வியக்கக்கூடும். பழைய ஏரியிலிருந்து ஓடும் நீரிலிருந்து தற்போதைய அரசாங்கம் உழவுப் பண்ணைகள் நடத்துகின்றது. அப்பண்ணைத் தலைவரான சதாசிவப் பிள்ளையின் விருந்தினராக இருந்து மகிழ்ந்தோம். இரவில் நடந்த சிங்கள விஜயத் திருவிழாவின் பெருமை உரைக்கப்பாலதன்று.

9. கீழைத் தமிழ்நாடு புகுகின்றோம்.

இரவில் பௌத்தர் திருவிழா பார்த்து மகிழ்ந்த நாங்கள் புலனரிவிட்டு நேர்கிழக்கே சென்றோம். பாதை புகைவண்டித் தடமோரமாகவே சென்றது. ஆனால் முந்தியதுபோலச் செம்மையாக இல்லை. நீர் ஓடைகளை அடிக்கடி தாண்டவேண்டி வந்தது. கிழக்கரைவரை ஓடின பாதை தெற்கே திரும்பியது. வாழைச்சேனை அடைந்ததும் தமிழ்நாடு மீண்டும் புகுந்தோம். இங்கே வனங்கள் இல்லை. தென்னை, மா, பலா செழிக்கும் தோப்புக்களைக் கண்டோம். தமிழர் உழவுத் தொழிலில் சிறந்தவர்கள். வனங்களை அழித்துப் பலன் தரும் தோப்புக்களை உண்டாக்குகிறார்கள். சித்தாண்டி குடியில் கந்தர் கோயில் வெகு அமைதியாக இருந்தது. முதல் முறையாக அறுபத்துமூவர் படங்களை தூண்களில் தீட்டப்பெற்றிருந்ததைக் கண்டோம். அங்கே இறைவனைத் தொழுதுவிட்டுத் தெற்கே மட்டக்களப்பு அடைந்தோம்.

விபுலானந்த அடிகள் சேவைசெய்த ஊர் அது ஆகும். அவ்வூர்தான் கீழ் மாகாணத்திற்குத் தலைநகர். கோட்டைபேட்டை கல்லூரி முதலியவைகள் உண்டு. இப்போது தமிழ்ப் புலமை மணக்கிறது. சிவானந்தர் கல்லூரியும், விபுலானந்தர் ஆசிரமும் அவரது சமாதியும் இங்கே உண்டு. கல்லோடை தாண்டினவுடனே கட

லோரம் மணல் வெளியிலே அகன்ற இடத்தில் இக்கல்லூரி கட்டப்பெற்றிருக்கிறது. இங்கே கேணியில் நீராடிச் சிற்றுண்டி உண்டோம். பகல் உணவிற்கு அடிகளின் பிறப்பிடமாகிய காரைத்தீவிற்கு விரைந்து சென்றோம். அவருடைய உறவினரின் விருந்தினராக இருந்தோம். அவர் வைத்துச் சென்ற ஆண் பெண் பாடசாலைகளைக் கண்டு மகிழ்ந்தோம். கண்ணகி கோயில் இங்கு இருப்பதைக்கண்டு, சிலம்பின் ஒலி எத்தனை மட்டும் எட்டியிருக்கிறது என்று நினைத்தோம். மீண்டும் திரும்புகையில் பல தமிழர் ஊர்களையும் கண்டோம். கொக்குடிக் கோயில் போகமுடியவில்லை. ஆறு தாண்டி அதற்கு செல்லவேண்டும். எனது நண்பர்கள் மட்டக்களப்பில் பலவேறு கோயில்களும், அனுமார் கோயிலும் காணச் சென்றார்கள். என்னையோ அங்கிருந்த உயர்ந்த அலுவலாளர் திரு. தட்சிணாமூர்த்தி அழைத்துச் சென்றார். தென்னாட்டிலிருந்து வந்த தமிழ்ப் பேராசிரியர்களை வரவேற்க ஒரு கூட்டம் நிறுவியிருந்தார்கள். அழைக்கப்பட்ட பேராசிரியர் வராததினால் என்னை அந்த இடத்தில் வைத்துக் கூட்டத்தை நடத்தினார்கள். நடந்த கல்லூரி பெரியது. கிறிஸ்தவர்கள் நடத்தும் நிலையம். அதன் பெரிய மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கூட்டம் நடைபெற்றது. பல பண்டிதர்கள் பேசினார்கள். இறுதியில் என் பேச்சு இருந்தது. தங்கள் நாட்டின் நான்கு திணைகளையும் அருமையாக உருவம் வரைந்தார் ஒரு புலவர். என்னை அதைப்பற்றி எழுதச் சொன்னார். நானும் பின்னால் சித்தாந்தத்தில் எழுதினதுண்டு. கூட்டம் முடிந்ததும் ஒரு தெருக்கூத்து நடந்தது. அதில் பதினான்காம் போர்ச்சருக்கம் நடத்தினார்கள். பின்னர் ஊர்கடந்து விடுதி சேர்ந்தோம்.

எனது நண்பர்கள் நீல நிறக்கடலிலே நீரரமகளிர் பாடும் பாடலைக் கேட்கச் சென்றார்கள். நிலா இல்லாமையினால் அந்தக் கீதத்தைக் கேட்க இயலவில்லை. மேலும் நீரின்மேல் செல்ல படகு கிடைக்கவில்லையாம். இரவில் சிவானந்தர் கல்லூரியில் படுத்துறங்கினோம். மட்டக்களப்பில் எங்கள் நாட்டு அன்பர் அறிமுகம்

கிடைத்தது. கணவனும், மனைவியுமாக இருக்கும் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக இங்கு பணிசெய்து வருகிறார்கள். அவர்கள் பழக்கம் அருமையாகக் கிடைத்தது.

முடிந்தவுடன் மட்டக்களப்பைவிட்டு நேராகக் கடற்கரை ஓரமாகச் சென்றோம். திருக்கோயில் மட்டும் செழுமை தோன்றிற்று. பின்னர் வறட்சி தென்பட்டது. கடலோரம் மணலும் தாழையுமாகக் கண்டோம். திருக்கோயில் என்பது முருகன் புனிதத் தலம். கோயில் பாலாலயமாக இருக்கிறது. திருப்பணி தொடங்கி முடியவில்லை. மூலத்தானத்தில் மயிலின்மீது ஆறு முகங்களோடு முருகன் காட்சி தருகிறார். அங்கே வணக்கம் செலுத்திவிட்டுத் தெற்கே மணல்கரை வழியே சென்று புத்துவில் அடைந்தோம். கடற்கரையில் மணலில் அழகிய விடுதி கட்டப்பட்டிருக்கிறது. அங்கே சிற்றுண்டிப் பானம் முதலியன கிடைக்கின்றன. சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு உண்டி அருந்தியதும் கடலில் ஓடிக்கொண்டிருந்த பெருங் கப்பல்களை தொலைவில் கண்டோம். எங்கள் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் படம் பிடித்தார்கள்.

புத்துவில் விட்டுப் பாதை மேற்கே திரும்புகிறது. சிறிது தூரம் மருத நிலம், பிறகு வனங்கள். நடுநாட்டுக் கானல்களைப்போன்று இங்கு கண்டோம். இந்தக் கானலிலே யானைகள் மிகுதி. அவைகளைப் பழக்கி மரங்களை எடுத்துச்செல்லப் பயன்படுத்துகிறார்கள். சித்தானை என்ற இடத்தில் ஏழெட்டு யானைகள் ஒரே தொழும்பில் வேலை செய்துகொண்டிருந்தன. படம் பிடித்தோம். பாகர்கள் வேடிக்கைகளைச் செய்துகாட்டினார்கள். கானல் வழியாய்ச்சென்று வெள்ளைவாயில் அடைந்தோம். நடுப்பகல் வந்தது. சிற்றுண்டியும் காப்பியும் அருந்தினோம். சிறிய தம்பி முணுமுணுத்தான். அவனுக்கு வேண்டியது தருவதாகச் சொன்னதும் சாந்தமானான்.

10. புனிதத் தலம் புகுகின்றோம்.

வெள்ளைவாயில் விட்டதும், பாதை தெற்கே திரும்புகிறது. இருபுறங்களிலும் வனங்கள் உண்டு. ஆனால் வனங்களின் நெருக்கடி குறைந்துகொண்டு போகிறது. தெற்கே போகப் போக வெட்ட வெளிகளும் உழவு நிலங்களும் காணப்படுகின்றன. பிறகு ஒரு பெரிய பாய்ச்சல் குளம் தெரிகிறது. கடந்ததும் குடி வசதிகள் தெரிகின்றன. நெல் வயல்கள், கரும்புத் தோட்டங்கள் காண்கின்றன. ஆறும், ஓடைகளும் பாய்கின்றன. அவைகளிலிருந்து வாய்க்கால்களும் பிரிகின்றன. பிறகு திசமாராமம் என்ற பெயர் கைகாட்டி மரத்தில் எழுதப் பட்டிருக்கிறது. மிகவும் மனமகிழ்ச்சியோடு மேலே செல்லுகிறோம். ஒரு பெரிய ஏரி நீலநிற நீர் நிலையாக எதிரே தோன்றுகிறது. அதன் கரைகள் வெகு நன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அருகில் அலுவல் விடுதிகள் தெரிகின்றன. தொலைவில் வயல்களிடையில் நீலவண்ணப் பல்கோயில் தெரிகிறது. ஏரிக்கரையில் வண்டியை நிறுத்திச் சிறிதுநேரம் இளைப்பாறினோம். பிறகு அதைவிட்டு வடகிழக்கிலே சென்றோம். குன்றுகளிடையே கணவாய்களின் வழியே பாதை செல்கிறது. பத்துக்கல் சென்றதும் ஒரு சுங்கச்சாவடிபோன்று தடிகள் கட்டப்பட்டிருந்தன. பலபேர் வண்டிகளை நிறுத்திவிட்டு நடந்து சென்றார்கள். நாங்கள் அவ்விதம் செய்யமுடியவில்லை. எங்கள் சாமான்கள் மிகுதி. தூக்க முடியவில்லை. வேறொரு வண்டிக்கு இடம்விட்டான் சாவடிக்காரன். நாங்களும் பின்சென்றோம். மாணிக்க கங்கை அடைந்தோம். புனிதத் தலம் மிதித்தோம்.

மாணிக்கக் கங்கை ஒரு அருமையான புனித நதி. அது வடமலையில் தோன்றிப் பல பள்ளத்தாக்குகளில் பாய்ந்துக் கதிர்காமத்துக்கருகில் ஓடி தென்கிழக்கே வெகு தொலைவிற்கப்பால் தென்கடலில் விழுகிறது. ஆறு நில மட்டத்திற்கு 25 அடிக்கீழ் ஓடுகிறது. சாதாரண நாளில் நீர் வெகு தெளிவாக இருக்கும். மற்ற நாளில் செந்நிறமாக மாறி வெகு விரைவோடு

பாயும். அதனைக் கடக்க சாதாரண பாலம் இல்லை. ஒரு சங்கிலி அல்லது தூரிப்பாலம்தான் உண்டு. இரண்டு பெரிய அடி மரங்களை இணைத்து அப்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. எச்சரிக்கையோடு நடக்க வேண்டும். இல்லையேல் ஆற்றில் விழவேண்டியது தான்.

ஆற்றிற்கு மறுபுறம் இருப்பது கதிர்காமம். இரண்டு தெருக்களே உண்டு. தெருக்களின் இரு ஓரங்களிலும் கடைகளும், சத்திரங்களுமே உண்டு. தெருக்களின் மேல்புறம் முருகன் கோயிலும், கீழ்ப்புறம் வள்ளியம்மை கோயிலும் இருக்கின்றன. முருகன் கோயிலில் முருகக் கடவுள், விநாயகர் ஆலயங்கள் கிழக்கு நோக்கியும், தெய்வயானை கோயில் வடக்கு நோக்கியும் உள்ளன. கோயில்களில் யாத்திரீகர் களுக்கு காட்சி தருவது திரைகளே ஆகும். பூசாரி மட்டும் உள்ளே செல்லுகிறான். முருகன் கோயில் கப்பூராளன் என்ற சிங்களனும், தெய்வயானைக் கோயில் வடநாட்டு துறவியுமே பூசை செய்கிறார்கள். இவ்விரு வர்களுக்குமே மிகுந்த விவகாரங்கள் உண்டு. பொது மக்கள் விவகாரங்களைக் கவனிப்பதில்லை. முருகனுடைய பெருமையைப்பற்றிப் பேசி வணங்கிவிட்டு வருவார்கள். ஆடி மாதத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்லுவார்கள். யானைமீது பெட்டி உலா வரும். அப்பெட்டியிலிருப்பது இன்னதென்று எவரும் அறியார்கள். அது ஒரு யந்திரம் என்று மக்கள் கூறு கிறார்கள். திருவிழாவில் பல கொடிய தவங்கள் நடை பெறுமாம். இலங்கைத் தமிழர்களும், புத்தர்களும் தவறாமல் கதிர்காமம் செல்லுவார்கள். வடநாட்டுக் காசியைவிட அதைச் சிறப்பாக வழிபடுவார்கள்.

நாங்கள் மாலையிலும், காலையிலும் கங்கையில் குளித்துவிட்டுத்தான் ஆலயம் சென்றோம். மிகுந்த குளிராக இருந்தபோதிலும், குளிக்காமல் செல்வது அநுசிதம் என்று நினைத்தோம். ஆனால், எங்கள் ஊரி

லிருந்து வந்த மற்ற அன்பர்களை அங்கு சந்தித்தோம். ஆண்கள் குளிக்காமலேயே கோயில் சென்றார்கள். பிறகு குளித்துவிட்டு மீண்டும் சென்றார்கள்.

கதிர்காமத்திற்கருகே செல்லக்கதிர்காமம் என்ற மற்றொரு தலமும் கதிரைமலை என்ற மலையும் உண்டு. நாங்கள் செல்லமுடியவில்லை. இந்தத் தலங்களைப்பற்றி அதிசயம் பொருந்திய சரிதைகள் உண்டு. இலங்கைத் தமிழர்களுக்கு இந்த புனித தலங்களில் மிகுந்த நம்பிக்கை. சிலபேர் கோரிக்கைகளை வேண்டிக்கொண்டு 100, 200 கற்கள்கூட நடந்து செல்வதுண்டு.

இப்படிப்பட்ட புனிதத் தலம் சென்ற அனேக நூற்றாண்டுகளாகப் போற்றப்பட்டு வந்தபோதிலும், கோயில்களைக் கருங்கற்களால் சிற்பச் சிறப்போடு கட்ட வில்லை. ஓடு மேய்ந்த வில்லைச் சாலையே அங்குண்டு. இங்கே சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த பால்குடி பாபா என்ற வடநாட்டுத் துறவி ஒரு மடம் நிறுவிச் சென்றார். அவருடைய சமாதி உண்டு. அவருடைய சீடர் பரம்பரையினர் இன்னும் பூசைசெய்து வருகிறார் கள். பூசாரிகள் வாயைத் துணியால் கட்டிக்கொண்டு தான் பூசை செய்கிறார்கள்.

மிகப் புனிதத் தலமான போதிலும் ஊரும், தெருக் களும் சுத்தமாக வைக்கப்படவில்லை. பசுமாடுகளும், எருமைகளும் எங்கும் சாணி போட்டுக்கொண்டு படுத் துக்கொண்டிருக்கும். நாய்களின் கொடுமை மிக அதிகம். எச்சிலைக் குப்பைகளின் அசுத்தம் கூறவேண்டிய தில்லை.

கீழ்ப்புறத்தில் ஒரு இசுலாமிய நிலையமும், கண்ணகி கோயிலும், வெள்ளரசுமரமும் இருக்கின்றன. பத்தினிக் கடவுள் தமிழ்நாட்டுச் செல்வி. இலங்கை அரசன் அவளது கற்புச் சிறப்பை அறிந்து இங்கே அவளுடைய சிலையை நாட்டினான் என்று சிலம்புக் கதை கூறும். ஆனால் அச்சிலம்பின் செய்தியும் வணக்கமும் ஈழம் முழுதும் எவ்வாறு பரவிற்றோ என்பது ஒரு வியப்பு

ஆகும். மேலும் இங்கே அம்மைக்குக் கண்ணகி என்ற சிறப்புப் பெயரே வழங்குகிறது. தமிழ்நாட்டில் செல்வி என்றும் மலையாளத்தில் பகவதி என்றும் வேறு பெயர் களால் வழங்கி ஈழநாட்டில் மட்டும் கண்ணகி என்றே வழங்கி வருவதைக்கண்டு மிகவும் வியந்தோம். கதிர் காமத்திலுமா கண்ணகிக் கோயில் என்றான் எங்களில் ஒரு இளைஞன்.

11. மலைகள் ஏறுகிறோம்.

கதிர்காமத்தில் காலையில் விடியலின்முன் கங்கை யில் நீராடிவிட்டுக் கோயில் தரிசனம் செய்துப் பிரசாதம் வாங்கி, சிற்றுண்டி அருந்திவிட்டு திசமாராமம் சென் றோம். அவ்வூரின் நிலவளத்தைக்கண்டு அதிசயித்து விட்டு நேர்வடக்கே மீண்டும் வெள்ளைவாயல் வழியே சென்றோம். அங்கிருந்து பாதை மேற்கே மலைச்சாரலில் செல்லுகிறது. வழி நெடுகத் தேயிலை, ரப்பர் தோட்டங் களில் மரங்களை நேர்க்கோடுகள்போல் வளர்த்திருக் கிறார்கள். மரங்களின் பாலைக் கீறி வடிக்கச்செய்து சிறு கிண்ணிகளில் நிரப்பி அதனைப் பெரிய பாத்திரங் களில் ஊற்றி ஆலைகளுக்குக் கொண்டுபோகிறார்கள். இரப்பர் பால் பசுவின் பாலைப்போல வெள்ளை வெளேர் என்று இருக்கின்றது. தோட்டங்களில் கூலிகளின் சாலைகளும், சிற்றூர்களும், கடைத்தெருக்களும் அடிக்கடி காணுகின்றன. சில இடங்களில் நெட்டுக் குத்தலாக மலைகள் ஒருபுறமும், ஆழ்ந்த பள்ளத்தாக் குகள் மறுபுறமும் இருக்கின்றன. இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு செல்லுகையில் திடீரென்று ஒரு மலை உச்சியிலிருந்து பெரிய நீர்வீழ்ச்சி விழும் காட்சி எதிர்ப்பட்டது. அது பாறைக்கு மேலே 625 அடி உயரத்திலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறது. காட்சி மிகவும் அற்புதமாக இருந்தது. சிறிதுநேரம் தங்கிப் புகைப்படம் எடுத்தோம். தம்பிகள் பலவிதமாக உட்கார்ந்துகொண்டு படங்கள் பிடித்தார்கள். இந்த நீர்வீழ்ச்சியின் பெயர் 'தியாதலாமா' என்பது. அந்த வழியே செல்லும் எல்லா மக்களும் இங்கே தங்கிச் சிறிது நேரம் பார்த்து மகிழாமல் மேல் செல்வதில்லை.

மீண்டும் மலைகளின்மேல் ஏறிச்சென்ருேம். கொசலாந்தை என்ற ஊர் வழியே சென்ருேம். இங்கே இந்தியநாட்டு நகரத்து மக்கள் பண்ணைகளை வைத்திருக்கிருர்கள், அங்கிருந்து அப்புத்தலை என்ற ஊர் சென்ருேம். அது மலையின் உச்சியில் கட்டப்பட்ட ஒரு சிறந்த ஊர். கடைத்தெரு பெரிதாக இருந்தது. மேல்நாட்டுச் சரக்குகள் நிரம்ப கிடைக்கும். ஒரு சிவாலயம் இருந்தது. அதில் உணவு கிடைக்காதென்று அறிந்து பண்டாரவளைக்குச் சென்ருேம். அங்கே முன்கூட்டி அறிவித்தும் நல்ல உணவு கிடைக்கவில்லை. அன்று அமாவாசை. பசியோடு இருந்த சிலபேர் மட்டும் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிட்டோம். ஆனல் எங்களில் ஒருவர் அங்கிருந்த அசூசியைக்கண்டு சாப்பிடமறுத்துச் சிற்றுண்டி மட்டும் உண்டார். கடைத்தெரு பெரிதாக இருந்தது. கடைக்காரர்களும், கூலியாட்களும் தமிழர்களே. ஒரு கடையில் துணி வாங்கினேம். கோவையைவிடச் சலிசாகவும், வேண்டியமட்டும் துணி கிடைக்கின்றது.

பண்டாரவளை விட்டு மேலே சென்ருேம். அங்கே புகைவண்டிப் பாதை வந்துவிடுகிறது. படிப்படியாக மலைச்சரிவுகளில் பயிர் விளைவு செய்வதை இங்குதான் கண்டோம். சில கற்கள் சென்றதும் கரும் மேகங்கள் நெருங்கின. மழை அடித்தது. வண்டியில் சாமான் நனையத் தொடங்கிற்று. வெகு பலமாக மழை அடித்தது வண்டியை சிறிது நிறுத்தவேண்டியும் வந்தது. பிறகு ஒரு மணி நேரத்தில் மழை நின்றது. வண்டி மேலே ஓடிற்று.

ஹெக்கலை என்ற பூங்கா அடைந்தோம். மலைப் பாங்கு மரங்கள், செடிகள், கொடிகள் இங்கே இருக்கின்றன. பிறகு சீதா குண்டம் என்ற அருவிக்கும் சென்ருேம். அங்கே ஒரு சிறு சோயில் இருக்கிறது. அதுதான் சீதை குளித்த இடமாம். அருவி ஒரு பாறையிலிருந்து வெளிவருகிறது. எவ்வாறு வருகிறது என்று அறியமுடியவில்லை. 'ரிஷி மூலம் நதி மூலம் கேட்காதே' என்ற பழமொழியின் பொருள் இங்குதான் கண்டோம்.

கன்னியா வெப்பக் கிணறுகள்



கதிர்காமம் வள்ளியம்மை கோயில்



திருக்கோணமலை கடற்குடா



தியாதலாமை நீர்வீழ்ச்சி, நடுமலைகள்

அதற்கு அடுத்ததுதான் இராவணன் கோட்டை இருந்த இடம் என்பர். அனுமார் அதனை அழித்ததைக் காட்டுவதற்காக ஒரு குன்றில் செம்மண்ணின்மேல் ஒரு அடி கருமண் இருப்பதைக் காட்டுகிறார்கள்.

மாலை 5-மணிக்கு நூரளை (நிவாரா எலியா) சேர்ந்தோம். அது இலங்கையின் கோடைக்காலத் தலைநகர். மிகவும் அற்புதமாகக் கட்டப்பட்டுள்ளது. பந்தய வட்டம், ஏரி, விளையாடுமிடங்கள், கடைத் தெருக்கள், உணவு விடுதிகள் எல்லாம் உண்டு. மாலைநேரம். குளிர் அதிகரித்தது. முன் எழுதியிருந்தும் இடம் கிடைக்கவில்லை. தெரிந்த நண்பர் ஒரு தொழிலாளர் கூட்டத்தில் பங்கு எடுத்துக்கொண்டிருந்தார், ஆகவே அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒரு ஓட்டலுக்குச் சென்றோம், மது மாமிசங்களின் வாடை அடித்தது. சகிக்கக் கூடவில்லை. ஆகவே உடனே புறப்பட்டுக் கீழே இறங்கினோம்.

வழியில் பள்ளத்தாக்குகளைக் கண்டோம். மலை வீழருவிகளைப் பார்த்தோம். பயங்கரமான இயற்கைக் காட்சிகள் எங்கும் நிறைந்திருந்தன. ஒரு தேயிலைத் தோட்டத்தருகில் நின்றோம். நீர்க் குழாய் வடிந்து கொண்டிருந்தது. நண்பர் ஒருவர் அங்கே தண்ணீரைத் தொட்டார். ஏறின செகப்பு அட்டைகள். காலிலும், கையிலும் கடிக்கத் தொட்ங்கிற்று. வெருண்டு போனார். சுருட்டுப் புகையிலையால் அவைகளை நசுக்கவேண்டி வந்தது. வழியில் ஒரு ஊரில் கடையில் தேயிலை பருகினோம். பின்னர் நேராகப் பேராதனை வழியே கண்டி சென்றோம். எங்கும் ஜெகஜ்ஜோதிபோல மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன, கண்டியில் பழைய காட் கம்பனியின் முன்நின்றோம். இரவு பத்து மணி ஆகியும், உணவும் வரவேற்பும் கிடைத்தன.

12. கண்டியைக் காண்கிறோம்.

சுதந்திர இலங்கைக்குத் தலைநகராய் இறுதிவரை இருந்தது கண்டி. ஆகவே அது அழிவுறாமல் தலை நிமிர்ந்தே இருந்தது. அது அமைந்திருக்கும் நிலம் மிக

அழகு பொருந்தியது. அழகைக் கண்டே அக்காலத் தரசர்கள் அந்த இடத்தைத் தெரிந்தெடுத்தார்கள் போலும். சுற்றுப் பக்கங்களில் உயர்ந்த குன்றுகள்; நடுவில் அடர்ந்த பள்ளத்தாக்கு; அருகில் மகத்தான மாவலிகங்கை பெருக்கெடுத்தோடுவது; பள்ளத்தாக் கில் அழகிய பெரிய ஏரி; சுற்றிலும் வழவழப்பான பாதை; உல்லாச நடைக்குச் சிறந்த தடம்; மலைச்சரிவு களில் அடர்ந்த குளிர்ந்த பொழில்களிடையே மாளிகை கள்; மற்றப் பகுதிகளில் கடைத் தெருக்கள்; கணக் கற்ற பண்டைய சமய நிலையங்கள்; குறைவிலாத நீர் வசதி; இத்தனை வசதிகள் பெற்ற இந்த இடமோ 1,000 அடிதான் உயரம். ஆனால் 7,000 அடிகொண்ட ஒத்தகமந்து போன்ற வாய்ப்பைப் பெற்றது. ஆகவே கண்டி அரசர்கள் இந்த நகரை ஒரு அளகாபுரியாக்கி ஆண்டார்கள் எனலாம். பல நூற்றுண்டுகளாக வெற்றியுடன் ஆண்ட அவ்வரசு நீக்கப்பட்டது. வெள்ளையர்கள் கண்டியைக் கைப்பற்றி ஆண்டார்கள். புது விடுதிகளும், பண்டகசாலைகளும், உல்லாச பவனங் களும், தோட்டப் பூங்காக்களும் தோன்றின. ஆனால் பழமைச் செழிப்பு சிறிதும் குன்றவில்லை. தற்போதிய தலைநகரான கொழும்புவைக் காட்டிலும் கண்டியே அழகில் சிறந்தது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசே லென்ற வர்ணங்கள், நீர் நிலைகள், ஓடைகள், இவற்றின் இடையே குறையாத வாணிப நிலையங்கள், அடிக்கடி புத்தர்களுடைய திருவிழாக்கள், இவைகளால் இந்த இனிய நகரம் மிகவும் செழிப்புறுகிறது. சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஊர்களின் அருகே உள்ள தோட்டங்களுக்குக் கண்டியே சரக்குகளை அனுப்பு கிறது. ஆகவே அதன் செல்வாக்கு குறையுமா? மாவலி கங்கை கம்பீரமாக ஓடி ஒரு பெரிய திட்டுபோல் உண்டாக்கி வளைந்து செல்லுகிறது. நில மட்டத்திற்கு அடியிலே 50 அடி ஆழத்தில் பாறைகளைத் தோய்ந்து கொண்டு செல்லுகிறது. நடுவிலுள்ள பெரும் திட்டு நான்கு கல் சதுரம் இருக்கும். அத்தனை நிலத்தையும் பெரிய பூங்கா ஆக்கியிருக்கிறார்கள். அதிலே உலகில்

வெப்ப பிரதேசங்களிலுள்ள செடி, கொடி, மரங்களெல்லாம் உண்டு. தாவர இயலுக்கு இது ஒரு அரிய இடமாகும். ஜவ்வரிசி, கற்பூரச்செடி, மிளகுச்செடி, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய் முதலிய பலவகைப்பட்ட செடிகளும் இங்கே காணலாம். எவ்வண்ணப்பூக்களும் காணலாம். எல்லாவித காய்கறிகள் நாற்றுகள் முதலியன கிடைக்கும். மரங்களின் வரிசை நேர் நிரைக்கோடுகளாக நட்டப்பட்டுள்ளதால் அது ஒரு ஓவியம்போலக் காட்டும். பலவித நாகலிங்க மரங்கள் வானளாவி நிற்கும். இவ்வித பூங்காவிட்டுத் தூரிப்பாலத்தைக் கடந்தால் எதிரிலே ஒரு உழவுப் பண்ணையைக் காணலாம். ஆற்றில் முதலைகள் பாறைகளின்மேல் வெய்யில் காய்வதைக்காண்கிறோம். இந்தப் பூங்காவைவிட்டு மற்றொரு பக்கம் சென்றால் அங்கே புதிதாகக் கட்டப்படும் மகத்தான இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டிடங்களைக் காணலாம். ஆசியாவிலேயே சிறந்த கலைக்கூடமாக இது அமையக்கூடும். இங்கே எல்லாக் கலைகளையும் கற்பிப்பதோடு ஆசிரியர்கள் விடுதிகளும் சைவ, பௌத்த, விவிலிய, இஸ்லாமிய, நிலையங்களையும் கட்டுகிறார்களாம். இந்த இடங்களைக் கண்டபிறகு எங்கள் இளைஞர்கள் இங்கே படிக்க வந்துவிடலாமோ என்று எண்ணினார்கள். கலைக்கழக வளைவிற்குள், மலைகள், நீரோடைகள், புல் நிலங்கள், விளையாட்டிடங்கள், நீந்துமிடங்கள் முதலியவையும் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் ஹார்வார்டு, ஏல்பல்கழகங்களை ஒத்து இதுவும் இருக்கக்கூடும். பாரத நாட்டில் இதைப்போல ஒன்றேனும் அமையக்கூடுமா?

பல்லுக்கோயில் பார்த்தோம். இதன் வெளியிலும் சிறு தடாகத்தில் ஆமைகள் இருந்தன. சுவரில் நரக வேதனைப் படங்கள் தீட்டப்பெற்றிருந்தன. பௌத்தர்கள் சமய வாழ்க்கையில் புத்தரின் வாழ்க்கை பின்பற்றியிருந்தால் அவர்களுக்கு இப்படங்கள் ஏன்வேண்டுமோ. மூலஸ்தானத்தில் பொன் சாமான்கள், பொன் நகைகள் மிகவும் இருந்தன. கடைசி அரசர்கள் கொடுத்த கங்கணம், தட்டு முதலியவைகள் இருக்கின்றன.

அருகே முருகன் பிள்ளையார் முதலிய மூர்த்திகளுக்கும் கோயில்கள் உண்டு. திருமாலுக்குத் தனிக்கோயில் உண்டு. அங்கே பாலி மொழியில் அர்ச்சனையும், பாவ மன்னிப்பும் சொல்லப்படுகின்றன. பிறகு சிவாலயத் துக்குச் சென்றோம். நமது நாட்டைப்போல ஆராதனை கள் அங்கு நடக்கின்றன.

ஊரில் பண்டகசாலைகளுக்கும், உணவு விடுதிகளுக் கும் அளவில்லை. ஆங்கிலேயர் நடத்தும் விடுதி மிகப் பெரியது. நூற்றுக்கணக்கில் மக்கள் அங்கு தங்கலாம். கடைகளில் துணிமணிகள் எளிதாகக் கிடைக்கும். சிலவற்றைப்பெற்றுக்கொண்டோம். ஆனால் அவற்றின் வருத்தம் பின்னால் தெரிந்தது. கூடக் கொண்டுவராமல் தபாலில் அனுப்ப சொன்னதற்கு விலை கூடுதல் ஆன தன்றிக் கால தாமதமும் ஏற்பட்டது. நான்கு மாதமாகி யும் ஒருவருக்குத் தன் பொருள் கிடைக்கவில்லை.

நாங்கள் தங்கியிருந்த வர்த்தகர்களைப்பற்றி ஒரு சொல்: அவர்கள் நல்லவர்கள்என்று சொன்னால்மட்டும் போதாது. உதார குணம், மரியாதை, இவைகளில் மிகச் சிறந்தவர்கள். பெருத்த வியாபாரிகள் எனினும் மிகுந்த நன்றியுடையவர்கள். செருக்கு என்பது அவர் களிடம் கிடையாது. அன்னாரின் நட்பே தமிழரின் மேன்மைக் குணத்தைக் காட்டுகிறது.

கண்டிக்கு அருகிலுள்ள காட்சிகளைக் காணச் சென்றோம். அளவில் அடங்காத இயற்கை அழகுகள். ஆனால் எங்கள் வண்டி ஓட்டி மேட்டைக்கண்டு மயங்கிச் சினந்தான். பேசிய கூலிக்கு இந்தப் பயணம் கூடவே கூடாது என்று கர்ச்சித்தான். ஒருநாள் கூலி அதிகம் கொடுப்பதாகச் சொன்னபிறகு அவன் தாகம் தீர்ந்தது.

13. கொழும்பு நகர் அடைகிறோம்.

கண்டி கடல் மட்டத்திற்குமேல் 1,000 அடிதான் உயரம். கோவை நகரைப்போலவே அதுவும் அமைந் தது. ஆனால் கண்டியிலிருந்து கொழும்பு போகும் வழி

எத்தனையோ மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் தாண்டிச்செல்லுகிறது. அந்தக் குறிஞ்சிக் காட்சி அருமையிலும் அருமை. பாதை மிக வழவழப்பானது. வண்டி ஓடுவதும் தெரிவதில்லை. கோவையிலிருந்து எங்கள் தலைநகர் சென்னைக்குச் செல்லும் பாதைக்கு இதனை ஒத்திட்டுப் பார்த்தால் வேற்றுமை வெகு தெளிவாகத் தெரியும். இருபுறங்களிலும் மா, பலா, தென்னை, காய்கறிச் செடிகள் முதலியன வகை வகையாக முளைத்திருக்கின்றன. இடையில் வயல்களும் உண்டு. காய்கறிகளை ஏற்றிச்செல்லும் பெரும் வண்டிகள் சிறு வண்டிகள் இவைகளுக்குக் கணக்கில்லை. விநாடிக்கு விநாடி எத்தனையோ ஓடுகின்றன. ஓரிடத்தில் ஒரு விநாடித் தாமதித்தால் எத்தனையோ பின் நிற்கின்றன. ஓட்டமே இந்த நாட்டின் இயற்கை. மாட்டு வண்டியோ, குதிரை வண்டியோ இல்லை. எல்லாம் விசை வண்டிகளே ஆகும். ஓரிடத்தில் இளநீர் குடித்தோம். தென்னை விளையும் இந்த நாட்டிலேயே காயொன்று நான்கு அணுவா என்று மயங்கினேம். போகும் பாதை பாதி மலைநாடு. பாதி சம நிலம். இந்தப் பகுதியில் எங்கு பார்த்தாலும் சிங்கள மயமே காண்கிறோம். கண்டியை விட்டால் கொழும்பில்தான் தமிழைக் கேட்கலாம்.

நடுப்பகலில் கொழும்பு சேர்ந்தோம். முந்தி தகவல் இல்லாததினுல் சாப்பாடு விடுதியில் சாப்பிட்டோம். சாமான்களை விவேகானந்தர் விடுதியில் அடைக்கலப் படுத்திவிட்டு ஊர் சுற்றச் சென்றோம். அன்றும் பிறகும் பார்த்தவை இரத்தினமல வான விமான நிலையம், உயிர் வருக்க வளைவு, லெவினியா விடுதி, துறைமுகம், காட்சிசாலைகள், புத்தர் பள்ளிகள், சிவாலயங்கள், கடைத் தெருக்கள் முதலியன.

கொழும்பிலே மிக அழகான பாதை கால்விப் பாதை. அது துறைமுகத்திலிருந்து கடற்கரை ஓரமாகத்தெற்கே செல்லுவது. இருபுறங்களிலும் அழகிய மாட மாளிகைகள் உண்டு. கடற்கரைக்கும் இப்பாதைக்கும் இடையே கணக்கற்ற வீதிகளும் அவைகளில் புதுப்புது பங்களாக்

களும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் பெரும் பாலும் உயர்தர மக்கள் வாழ்கிறுர்கள். இதில்தான் வெள்ளவத்தை உண்டு. இதனில் யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வதால் இதற்குச் சிறுயாழ்ப்பாணம் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது. இதன் தெற்கில் மிருகசாலை களும், லெவேனியா ஓட்டலும் உண்டு. மிருகசாலை மிகவும் இயற்கை அமைப்பைக் கொண்டது. லெவே னியா ஓட்டல் ஐரோப்பியர்களுக்கு மிகவும் விருப்பம் தருவது. வெள்ளவத்தையில் இரண்டு பெரிய பிள்ளையார் கோயில்கள் உண்டு. தமிழ் சமயக் கூட்டங் கள் இங்கே நடைபெறுகின்றன. வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. இதில் ஒருநாள் நானும் கலந்துகொண்டேன். நமது நண்பர்கள் இதைப்போல நமது நகரத்திலும் ஒன்று அமைக்கக் கூடாதா என்கிறுர்கள். ஆண், பெண் உள்பட முன் மண்டபத்தில் அமர்ந்துகொண்டு பொறுக்கி எடுத்த தேவராதிகளைப் பாடிவிட்டு ஒருவர் ஒரு சமயப் பேச்சு நிகழ்த்த மற்றையோர் கேட்கப் பிறகு பூசை செய்யப் படும். பிரசாதமும் வழங்கப்படும். காலிப் பாதையில் வடகோட்டில் அழகிய புல் தரைகள் இருக்கின்றன. மாலையில் ஊர் மக்கள் காற்றுவாங்க வருவார்கள். காலிப் பாதையில் அளவற்ற விசை வண்டிகள் ஓடிக் கொண்டே யிருக்கும். இதில் சிற்றுண்டிச்சாலைகளும், நாடகச்சாலைகளும், ஒலி, ஒளிப்படச்சாலைகளும் உண்டு. இது உலாவவும் காற்று வாங்குவதற்கும் ஏற்ற இடம்.

துறைமுகம் மிகப் பெரியது. அது செயற்கைத் துறைமுகம். உலகில் உள்ள எல்லா கப்பல்களும் இதில் இறங்கும். வர்த்தகம் மிகுதி. எல்லா நாட்டு மக்களையும் இங்கு காணலாம். எவ்வித நாணயங்களையும் காணலாம். இரவில் துறைமுகக் காட்சி மனோரம்யமாக இருக்கும். அடுத்துள்ளவை அலுவலகங்கள் அரசியல் மாளிகைகள் முதலியன. பெரிய நிதியலுவலகங்கள் இங்குதான் உண்டு. செட்டித்தெரு என்ற கடைத் தெரு பெருத்த வாணிபம் செய்யும் இடம். இதில்

கதிரேசன் கோயில் இருக்கிறது. அது தென்னாட்டு முறையில் உள்ளது. மேட்டுத் தெருவில் விவேகானந்தர் பாடசாலை, சங்கம், இவை உண்டு. அதனருகிலே பழைய உலாந்தர் பள்ளி இருக்கிறது. அதனருகே நீதி மன்றம், நீதிக் கல்லூரி முதலியவைகள் உண்டு. இதனருகேதான் திருக்கேதீச்சரத் திருப்பணிச் செயலாளர் சிவசுப்பிரமணியம் வசிக்கின்றார்.

பௌத்த ஆலயங்கள் கிழக்கே இருக்கின்றன. அருகே கண்காட்சிச்சாலை, வானொலி நிலையம், பந்தய வட்டம் முதலியவை காணப்படும். நகர சபை மிகப் பெரியது. அதன் வடிவம் மிகக் கம்பீரமாக இருக்கிறது.

கடைகள் பகலில் 5-மணிக்கே மூடப்படும். அது வரை ஜனக்கூட்டம் சொல்லமுடியாது. துணிமணிகள் வாங்கச் சென்றோம். கணக்கில்லாத இரகங்கள் இருந்ததினால் தேடி அறியமுடியவில்லை. அப்பனுக்குப் பிடித்தது மகனுக்குப் பிடிக்கவில்லை. தகப்பன் எனக்குத் தெரியாது என்று சொல்லத் தொடங்குவார். இந்த விதத்தில் வியாபாரம் எளிதில் முடியவில்லை. பல மணி நேரம் சுற்றியும் சில சாமான்கள்தான் வாங்க முடிந்தது. இரவில் வெள்ளவத்தைக் கோயில்புறத்து விடுதியில் தங்கினோம்.

14. களனியா காண்கிறோம்.

கொழும்புக்கு வருகிற வெளிநாட்டார் எல்லோரும் கெலனியா என்று வழங்கும் கல்யாணபுரிக்குச் செல்லாமல் இருப்பதில்லை. அது வெகு பண்டைத்தலம். 2500 ஆண்டுகளுக்கு முந்திய சரித்திரப்பண்பாடுகொண்டது. மகாபுத்தரே இங்கு விஜயம் செய்ததாக சரித்திரம் கூறும். புத்தர்களால் மிகப்புனிதத்தலமாக இதுகொண்டாடப்பட்டுவருகின்றது. அது களனி கங்கையின்கரைமேல் உள்ளது. மிகவும் செழிப்பான நிலப்பாங்கில் உள்ளது. அதனைச் சுற்றிலும் தென்னை, மா, பலாத் தோப்புகள் நிரம்ப உண்டு. இத்தனை செழிப்பான

இடத்தில் ஒரு அருமையான மேட்டின்பேரில் பௌத்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே வெள்ளைப் பற் கோவில் தூபி ஒன்று உண்டு. நடுநிலையமாகப் பெரிய ஆலயம் விளங்குகிறது. அந்த ஆலயம் கருங்கல்லால் இழைக்கப்பெற்றிருக்கிறது. சுற்றுச் சுவர்களில் விநாயகர், திருமால், முருகன் முதலிய உருவங்கள் அழகு செய்கின்றன. உள்மண்டபத்தில் நீலநிற ஆகாயத்தில் புத்த சிலை மஞ்சளாடையில் நிற்கிறது. பக்கத்து அறைகளில் வேறு புத்த உருவங்கள் இருக்கின்றன. ஒரு மூலையில் ஒரு அழகிய அறையில் ஒரு யந்திரமும் திருமால் உருவமும் உண்டு. அங்கே கந்தப்பெருமான் திருவுருவமும் நிற்கிறது. அவற்றைக் கண்டோர் இதென்ன அதிசயம் என்பார்கள். பௌத்தர்களுக்குப் புத்தபகவான் ஒன்றுமட்டுமேயன்றி மற்ற இந்துக் கடவுளர்களும் உண்டு என்று அறியலாம். இந்த கட்டடங்கள் அண்மையிலே ஒரு சீமாட்டியால் கட்டப்பெற்றவை.

ஆலயத்தில் இடதுபுற அறையில் அருமையான சரிதங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. புத்த பகவான் இங்கே விஜயம் செய்தது முதற்கொண்டு இந்த நகரத்து அரசன் தன் சிசுவைக் கடலில் இட்டு அது அரசியான கதையும் அரசன் சந்தேகித்துத் தன் அரசியாலே சதிசெய்யப்பட்ட குருவை எண்ணெய்க் கொப்பரையில் எரித்த வரலாறும் மற்றும் பல சரிதங்களும் இங்கே அருமையாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் பார்த்துவிட்டு மகிழ்ந்து சென்றோம். இங்கே பண்டைக் கல்வெட்டுப் பலகையும் கணக்கில்லாத ஏட்டுப் பிரதிகளும் உண்டு. இந்தக் கல்யாணபுரி ஒருகாலத்தில் சிறந்த தலைநகரமாக இருந்தது. இப்போது புனிதத் தலமாக மட்டும் இருக்கிறது.

கோயிலுக்கு அடுத்தாற்போல மடம் ஒன்று இருக்கிறது. அம்மடத்தில் பிட்சுக்கள் வசிக்கின்றனர். அவர்கள் ஆட்சியில் இந்த ஆலயம் இருக்கிறது. இந்த நிலயத்திலும் புத்தர் உருவங்களும் நூற்சாலையும்



பேராதனை தூரிப்பாலம், மாவலிகங்கை

பேராதனைப் பூங்கா, கண்டி



திருக்கேதீச்சரம் மூலத்தானம் விமானங்கள்



திருக்கேதீச்சரம் முன் பார்வை

உண்டு. நூல்கள் பாலி மொழியில் உள்ளன. அவைகளில் இந்த ஆலயத்தின் வரலாற்று முழுதும் உண்டு. சமீபத்தில் ஒரு சிறு நூல் வெளியிட்டிருக்கிருர்கள். அதில் இந்நகரச் சரிதம் வெகு உருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நகர் சரிதத்தைப்பற்றி இரண்டு காவியங்கள் உண்டு. அவை மகாவம்சம் தீபவம்சம் என்ற பெயர்கள் கொண்டவை. அவைகளிலிருந்தே இலங்கையின் சரித்திரம் ஆராயப்பட்டு எழுதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பார்த்த சிலநண்பர்களை கொழும்பில் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. கல்வி அமைச்சர் கனகரத்தினத்தைப் பார்த்தோம். அங்கே சென்னை ஆசிரியர்கள் இருந்தார்கள். அமைச்சரிடம் என்னைத் திரு. சிவசுப்பிரமணியம் அழைத்துச் சென்ருர். அங்கே திருக்கேதீச்சரத் திருப்பணிகளைப்பற்றிப் பேசினேம். பிறகு அரசியல் செயலாளர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்களைச் சந்தித்தோம். அவர்களிடமும் திருக்கேதீச்சரம், பேராதனைக்கழகம், சைவக்கோயில் நிர்மாணம் முதலிய செயல்களைப்பற்றிப் பேசினேம். அவர் மிகுந்த அக்கறையோடுபேசினர். பிறகு நான் தனியாகக் கல்வி அதிகாரி திரு. சோமசேகரம் அவர்களிடம் சென்று பேசிவந்தேன். அவர் வீட்டிற்கு அழைத்தார். ஆனல் போகமுடியவில்லை. அன்று இரவு திரு. சிவசுப்பிரமணியம் வீட்டில் விருந்து நடந்தது. அந்தப் பெரியார் மிகுந்த அக்கறைடன் கேதீச்சரத் திருப்பணியில் வேலை செய்துவருகிருர்கள். கொழும்பில் மற்றும் பல பழைய அன்பர்களைக்கண்டு பேசிவிட்டு வந்தேன். எல்லாரும் மிகுந்த அன்போடு வரவேற்பு தந்தார்கள்.

எங்கள் நண்பர்கள் அப்போது கடைகளுக்குச் சென்று நிரம்பச் சாமான்களை வாங்குவதற்காக முயன்ருர்கள். ஆனல் இறுதியில் பெற்றது மிகக் குறைவே. இந்தத் தடவை பல புதுப் பழக்கங்களும் ஏற்பட்டன.

15. மேற்குக்கரை ஓடுகிறோம்.

காலையில் எழுந்ததும் மூட்டைமுடிச்சுகளைக்கட்டி விட்டுக் குளிர்ந்த குழாய் நீரில் குளித்துவிட்டுப் பிள்ளையார் ஆலயம் சென்று வணங்கி விடைபெற்றுக் கொண்டு அடுத்திருந்த ஒரு விடுதியில் சுடச்சுட இட்லிகளை உண்டுக் காப்பி அருந்திவிட்டு விசைவண்டியில் அமர்ந்தோம். அங்கு அருமையான பச்சநாடம்பழம் விற்றது. வாங்கிக்கொண்டு வடக்கே புறப்பட்டோம். வண்டிஓட்டி சக்திவாய்ந்த முத்துமாரியம்மனைத் தொழுதுவிட்டே மேல் செல்லவேண்டும் என்று அங்கே வண்டியை நிறுத்தினன். அக்கோயிலில் கிறிஸ்துவர்களும் வழிபடுவதுண்டாம். அங்கே வணங்கிப் பிரசாதம் பெற்றுக்கொண்டு கழனியாநதி கடந்து வடக்குச் சாலையில் சென்றோம். வழியெங்கும் அழகிய நிழல், தோப்புகள் மிகுதி. இந்தச்சாலையில்தான் தென்னைக் கீற்று வண்டிகள் தென்னைச்சிரட்டை வண்டிகள் இவைகளை எருதுகள் இழுக்கக்கண்டோம். பாதையின் ஓரமாகவே புகைவண்டித்தொடரும் சென்றது. வழியில் பல ஓடைகளும், நிலையங்களும் கண்டோம். நீர்கொழும்பு, சிலாபம் முதலிய ஊர்கள் வந்தன. அதுவரை நிலம் வெகுவாகவே செழிப்பாக இருந்தது. மக்கள் பெரும்பான்மையாளர் சிங்களவர். சிலாபம் சென்றதும் தமிழர்கள் மிகுதியாகக் காணப்பட்டார்கள். சிலாபத்தைச் சுற்றிலும் நன்செய் வயல்கள் இருக்கின்றன. இவ்வூரிலிருந்து மேற்கே உள்நாட்டிற்கு ஒரு பாதை செல்லுகிறது. இதில் ஒரு கல் சென்றோம். அங்கே ஒரு அருமையான தலம் தென்பட்டது. அதுதான் முன்னீசுவரம் என்ற ஒரு தமிழ்க் கிராமம். அதன் காட்சி சோழநாட்டுத் தலம்போலத் தோன்றிற்று. நடுவில் கோயில் சுற்றிலும் மாடவீதிகள். கோயிலின்முன் ஒரு திருக்குளம். கோயிலின் வாயிலில் திருக்கோபுரம். கிழக்குப் பார்த்த சந்நிதி. உள்ளே மூலத்தானம். சுற்றும் சிறு ஆலயங்கள். இவைகளைக்கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சிகொண்டோம். பூசை முடித்துக்கொண்டு பிரசாதம் பெற்றோம். தலபுராணம் உண்டு என்றனர். ஒரு ரூபாய் கொடுத்து ஒரு

பிரதி பெற்றுக்கொண்டோம். தமிழ் நாட்டுத் தல வரலாறுகளைப்போல் ஐதீகங்கள், கல்வெட்டுக்கள் முதலிய ஆராய்ச்சிகளைக்கொண்டது அச்சிறு நூல்.

பிறகு மீண்டும் சிலாபம் சென்று வடக்கே புத்தளத்திற்குப் புறப்பட்டோம். வழி செல்லச்செல்ல செழிப்பு குறையத்தொடங்கியது. கூட வந்த புகைவண்டிப் பாதையும் எடுபட்டுப்போய்விட்டது. கடற்கரையும் கழிகளும் உப்புமண்ணும்மணலுமே எங்கும்தோன்றின. புத்தளம் அடைந்தோம். அது ஒரு செம்படவக் கிராமம். எங்கும் மீன் நாற்றம். முசுலிம் குடிகளே நிரம்பியிருந்தனர். வறட்சியே காணப்பட்டது. கடைகளில் வாங்கித் தின்னவும் அருவருப்பாக இருந்தது. விசைவண்டி நிலையமும், வடைக்கடைகளும் சோடாக்கடைகளுமே காணப்பட்டன. சில அலுவலகங்கள் தோன்றின. இங்கிருந்து பாதை கிழக்கே திரும்புகிறது. அதிலே ஓடினோம்.

இந்த வழியில் மீண்டும் கானல்கள் தோன்றின. ஆனால் குத்துமரங்களே மிகுதி. அடர்ந்த உயர்ந்த மரங்கள் இல்லை. வண்டி நடமாட்டம் குறைவு. ஒரு பழைய விசை வணடியை ச் சிலர் வெகுவிரைவாக ஓட்டிக்கொண்டு சென்றார்கள். எங்கேவிழுந்து உடைந்துவிடுமோ என்று அஞ்சினோம். எங்கள் வண்டிக்காரன் ஒரு கதை சொன்னான்: இந்தப் பாதையில் சில மாதங்களுக்குமுன் ஒரு ஆளை கொலைசெய்து போட்டுவிட்டு கொலையாளிகள் மறைந்துவிட்டதாகச் சொன்னான். அப்படி திக்கற்ற பாதையில் நடுப்பகலிலே சென்றோம்.

வரவரப் பெரிய வனங்கள் தோன்றின. புத்த சின்னங்களும் ஏரிகளும் தெரிந்தன. அநுராதபுரம் சேர்ந்துவிட்டோம். முன் சாப்பிட்ட கிருஷ்ண விலாசம் சென்றோம். சுடச்சுட சாதம்கிடைத்தது. உண்டுவிட்டு சிறிது நேரம் எண்ணெய்க்கடையில் இளைப்பாறிவிட்டு வண்டி ஏறினோம். மதவாச்சி வரையில் வடக்கே சென்று பிறகு வடமேற்கு திரும்பினோம். மீண்டும் பெரிய வனங்கள்

குறைந்தன. 'குத்துமரங்களே தோன்றின. மடு என்ற இடத்தில் கிறிஸ்துவ ஆலயம் இருக்கிறது என்றனர். ஆனல் அந்த அற்புத ஆலயத்தைக் காண நேரம் இருக்கவில்லே. வயல்வெளிகளிலே பாதை சென்றது. பிற்பகல் 5-மணிக்கு மன்னருக்கருகில் திருக்கேதீச்சரம் அடைந்தோம்.

16. திருகேதீச்சரம் வணங்குகிறோம்.

திருகேதீச்சரம் ஈழநாட்டுப் பாடல்பெற்ற தலங்கள் இரண்டில் ஒன்று. சம்பந்தப் பெருமானும் சுந்தரரும் இதனைப் பாடிப்புகழ்ந்திருக்கிருர்கள். மாதோட்ட நன்னகரில் பாலாவிக்கரையில் உள்ளது திருகேதீச்சரம். அச் சைவசமய குரவர்கள் காலத்தில் அங்கே அரும் பொழில்கள் இருந்தன. செழிப்புவாய்ந்த நிலங்கள் இருந்தன. மக்கள் பெருக்கம் இருந்தது. தற்போது இவைகள் இல்லே. மணல் வெளி,களிமண் தரை. பாலாவியோ ஒரு ஓடையாக இருக்கிறது. நீர் தேங்கி நிற்கிறது. கோயிலும் பழுதுபடைத்து இருக்கிறது. கால மாறுதல்மட்டுமோ பறங்கியர்களின் கொடுமையும் அந்தத் தலத்தைக் கெடுத்துவிட்டது. 100 ஆண்டுகளுக்கு முன் செட்டிப்பிள்ளேகள் இலிங்கத்தைக் கண்டுபிடித்து ஒரு சிறு கோயில் எழுப்பினர்கள். அதுவும் தற்போது க்ஷீணித்துவிட்டது. இப்போது யாழ்ப்பாணப்பெருமக்கள் அதை மீண்டும் நிர்மாணிக்கத்தொடங்கியுள்ளார்கள். பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு விடுதிமட்டும் அமைத்திருக்கிருர்கள். நாங்கள் சென்றவுடன் அவ்விடுதியில் தங்கினேம். அடுத்தாற்போல் சில கூடாரங்கள் தெரிந்தன. அங்கு சென்று பார்த்தோம். பண்டைப் பொருள் ஆராய்ச்சியாளர் திரு. சண்முகநாதன் அவர்கள் அங்கே பாளேயம்போட்டிருந்தார்கள். அவர்களேக் கண்டு பேசினேம். தான் நிலத்தில் தோண்டி எடுத்த பொருள்களேக் காட்டினர். பண்டைப் பூசையில் பயன்பட்டிருந்த 1008 சங்குகளில் சில நூறு சங்குகள் கிடைத்திருக்கின்றன. அவைகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சீன, இந்தோ-சீன, பர்மா பீங்கான்கள் கிடைத்

தன. வழவழப்பான பண்டைய் நாட்டு ஓடுகள் கிடைத்தன. மேலும் கிணறுகள், கட்டடங்கள், இலிங்கம் முதலிய பூசனைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையெல்லாம் பார்த்துவிட்டு நமது நாட்டில் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, உறையூர் முதலிய ஊர்களில் இவ்வித வேலைசெய்யவில்லையே என்று வருந்திேனும்.

பிறகு பாலாவியில் சென்று குளித்தோம். சில் என்று காற்று வீசியதால் எனக்குக் குளிர் பொறுக்க முடிவில்லை. ஏனையோர்கள் நன்ருகக் குளித்தார்கள். கோயிலில்சென்று வழிபட்டோம். சுமார் $6\frac{1}{2}$-மணிக்குக் கோயில் பூசை நடந்தது. ஒரு முதியவள் நன்ருகப் பாடிஞள். மன்ஞரிலிருந்து ஒரு பெரியவர் தம் குடும்பசகிதமாகவந்து கும்பிட்டார். பூசை நடந்துகொண்டிருக்கையில் எங்கள் வண்டி ஓட்டி முகட்டில் ஒரு விட்டத்தைச் சுட்டிக் காட்டிஞர். நாங்கள் பார்த்தோம். அங்கே இரண்டு நாகங்கள் இருப்பதாகச் சொன்ஞன். இருட்டில் நன்ருகத் தெரியவில்லை. செகப்புநாகம் தலையை நீட்டி வணங்குகிறது என்ருன். எல்லோரும் அதனை ஆமோதித்து மிகுந்த ஆச்சரியத்தோடு பதில்பேசாமல் இருந்தனர். அது ஒரு அற்புதம் என்று எண்ணிக்கொண்டுப் பிரசாதம் பெற்றுக்கொண்டு விடுதி சேர்ந்தோம்.

எங்களுக்குகிடைத்த உணவை உண்டுவிட்டுத்திண்ணையின்பேரில் இளைப்பாறிேனும். சண்முகநாதர் வந்தார். அவரிடம் நாகத்தைப்பற்றிக்கூறவே, அது உண்மையென்றும், பல ஆண்டுகளாக மூன்று பாம்புகள் பூசை நேரத்தில் வருகின்றன என்றும், அவற்றில் ஒன்று கருநாகம், மற்ருென்று செகப்பு, மூன்ருவது குட்டி என்றும் சொன்ஞர். சிறிது நேரத்தில் திண்ணைக் கருகே ஒரு பாம்பு ஓடிற்று. அதனைத் துரத்திவிட்டுத் தூங்கச்சென்ரேும். பலருக்குத் தூக்கம் வரவே இல்லை. காலையில் எழுந்தோம். பாலாவியில் குளித்துவிட்டு ஆலயம்சென்று தரிசித்தோம். ஆச்சரியமாக திரு. சிவசுப்பிரமணியம் அங்கு தோன்றிஞர். அவரும் நானும்

சண்முகநாதர் கூடாரத்திற்குத் திருப்பணிப் படங்களைப் பார்த்து ஆராய்ந்தோம். முந்தி இந்தியர் ஒருவர் வரைந்திருந்த படங்களில் இருந்த குறைகளை இருவரும் கூறினோம். பிறகு சண்முகநாதர் எங்களுக்குத் தங்கள் சரித ஆராய்ச்சிக் கட்டுரைகளை காட்டினார். சில அருமையான படங்களையும் தந்தார். அவற்றில் சில கதிர்காமத்துப் புகைப் படங்கள். அவைகளைப் பெற்றுக்கொண்டு வணக்கம் செலுத்திவிட்டுத் தென்கிழக்கே வவேனியா சென்றோம். வழியில் மதகுகளில் பெண்கள் சேலைகளைக் கொண்டு மீன்பிடிப்பதைக் கண்டோம். சில மீன்களைத் தப்புவித்தோம்.

17. மீண்டும் யாழ்ப்பாணம் புகுகின்றோம்.

தென்கிழக்கே ஓடின வண்டி பாதி சென்றதும் நேராகக் கிழக்கே ஓடிற்று. பல இடங்களில் காடுகளை அழித்து உழவுநிலங்கள் ஆக்கிக்கொண்டு வருகிறார்கள். இதற்கென அரசியல் பகுதி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். பழைய ஏரிகள் பல தூற்றப்பட்டுப்போய் வனங்கள் ஆகிவிட்டன. அவைகளை மீண்டும் செய்நேர்த்தி செய்து வயல்களாக்கி மக்களுக்குத் தருகிறார்கள். ஆனால் ஒன்று தமிழர்களைக் காட்டிலும் சிங்களவர்களுக்குச் சலுகை காட்டப்பட்டு வருவதாக ஒரு வதந்தி கேட்கப்படுகிறது. நடுப்பகல் வேளையில் வவேனியா சென்றோம். அங்கே ஒரு விடுதிக்கு வண்டி ஓட்டி அழைத்துச் சென்றான். அங்கே எங்களுக்கு நல்ல உணவு கிடைத்தது. அந்த வளைவில் ஒரு சிறு மான்குட்டி இருந்தது. இளைஞர்கள் அதனோடு விளையாடினார்கள். அதனைப்போல் ஒன்று வாங்கவேண்டுமென்றும் ஆர்வம் கொண்டார்கள். நாங்கள் உண்டது ஒரு மலையாள விடுதி. மலையாளிகள் இந்த இலங்கையிலும் ஆதிக்கம் கொண்டார்களே என்று வியந்தோம். நாங்கள் தங்கின இடத்தில் ஒரு அலுவலாளர் இருந்தார். அவர் யாழ்ப்பாணத்துக் கொழும்புத் துறைவாசி. எங்களைக் கண்டதும் உடனே நட்பு பூண்டார். அவர் சித்தாந்தத்திற்கு ஒரு சந்தாதாரர் என்று அறிந்தேன்

பல தத்துவ ஞான நூல்கள் வைத்திருந்தார். யோக சுவாமிகளின் சீடர் என்றும் கூறினர். அன்று அவர் யாழ்ப்பாணம்போக இருந்ததை அறிந்து எங்களுடனே அழைத்துச் சென்றோம்.

வவேனியாவிலிருந்து பாதை வடக்கே செல்லு கிறது. இது நாங்கள் முதலில் சென்ற வழியே ஆகும். மான்குளம் என்ற ஊரின் அருகு சென்றதும் வண்டியின் ச்க்கரத்துக் காற்று இறங்கிவிட்டது. தெய்வாதீனமாக அருகே தங்கு விடுதி ஒன்றிருந்தது. அங்கே சென்று சிற்றுண்டி அருந்தினேம். அதற்குள் வண்டி சரிப்பட்டு விட்டது. உடனே புறப்பட்டோம். முந்தி தங்கின விநாயகர் கோயில் வந்தது. அங்கு வணங்கிச் சென்றோம். பௌத்த யாத்திரிகளை அங்கு கண்டோம். இந்த காலம் யாத்திரை செல்லும் காலமாம். கணக்கற்ற யாத்திரிகள் பெரிய தனி வண்டிகளை அமர்த்திக் கொண்டு ஒன்றிரண்டு பிக்ஷுக்களை அழைத்துக் கொண்டு செல்லுகிறார்கள். நாம் அரோகர என்று சொல்வதைப்போல அவர்கள் சாது சாது, என்கிறார் கள். அச்சொற்களைக் கேட்டால் எங்கள் இளைஞர் களுக்குச் சிரிப்பு. மேலும் கால்நடையில் செல்லும் கதிர்காம யாத்திரிகளும் இப்போதே செல்லத் தொடங்குகிறார்கள்.

மாலை ஆறு மணிக்குக் கொழும்புத்துறை அடைந் தோம். புது நண்பர் எங்களை நேராகச் சுவாமிகளின் விடுதிக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் கை கால் சுத்தம் செய்துகொண்டு அவர்கள் முன்னிலையில் அமர்ந்தோம். அப்போது மூன்று மங்கையர்கள் யோகத்தைப்பற்றிய நூலை ஓதிக்கொண்டிருந்தார்கள். இடையிடையில் அவர்கள் சில கருத்துக்களை விவரித் துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குடும்ப நலத்தைக் கேட்டார். அவர்கள் தங்கள் தாயின் உடல் நலமின்மையைப்பற்றிக் கூறினர்கள். அது விரைவில் நலம் ஆகிவிடும் என்று சுவாமிகள் சொன்னதும் அவர்கள் விடைபெற்றுக்கொண்டுசென்றுவிட்டார்கள்.

பிறகு எங்களை விளித்து விவரம் கேட்டார். சில ஆண்டுகளுக்குமுன் கோவை வந்திருந்ததாகவும் சொன்னார். பிறகு சில நன்மொழிகளை அருளினார். திருக்குறள், திருமந்திரம், சொக்கநாத வெண்பா இவைகளிலிருந்து மேற்கோள்களைச் சொன்னார். பிறகு 'எல்லாரும் உயர்வு அடைவதே நன்று. நீங்களும் அடைவீர்களாக. அதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்வீர்களாக' என்று உரைத்தார். பழங்களைப் பிரசாதமாகத் தந்தார். நாங்கள் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் கலா நிலையம் சென்றோம்.

இருண்டு வெகுநேரம் ஆகியும் எங்களை மிகுந்த அன்போடு நவரத்தினம் தம்பதிகள் வரவேற்று உணவு தந்தார்கள். நாங்கள் இளைப்பாறத் தொடங்கினோம். இதற்குள் ஆச்சரியமாய் திரு. சிவசுப்பிரமணியம் தோன்றினார். அவர்களுக்குக் கடவுள் அன்பு எத்துணை சிறந்தது. தான் கொண்டுவந்த திருக்கேதீச்சரப் படங்களை எனக்கும் நவரத்தினத்திற்கும் காட்டி அபிப்பிராயம் கேட்டார். நவரத்தினம் தன் கருத்துக்களைச் சொன்னார். அவைகளோடு என் கருத்துக்களும் ஒன்றி இருந்தன. இரவில் வெகுநேரம் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டு தூங்கினோம்.

18. திரும்பி ஊருக்குப் பறக்கிறோம்.

விடிவதற்கு முன்னமே எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கேணியில் நீராடிவிட்டு மூட்டை முடிச்சுக்களை வண்டி ஏற்றினோம். எங்கள் அன்பர்கள் தந்த சிற்றுண்டியை முடித்ததும் சென்றோம். அத்தனை நேரத்திலேயே உண்டியைத் தயாரித்துக் கொடுத்த அம்மையாருக்கு நாங்கள் என்றும் நன்றி செலுத்துவோம். திருவிழா நாட்களில் எங்களை உபசரித்ததுமன்றி பின்னரும் வந்தபோது உபசரித்ததைக் குறித்தும் நாங்கள் எப்பொழுதும் மறக்கவேமாட்டோம். எங்களில் இளைஞர்கள் மீது அந்த அம்மையாருக்கு

அளவுகடந்த பிரீதி. அவர்களும் அந்த அம்மாளை எப்போதும் மறக்கவேமாட்டார்கள். கலாநிலைய வாசம் எங்களை எப்போதும நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

கூடிய விரைவில் வான விமான அலுவல் நிலையத்திற்குச் சென்றோம். அங்கே எங்கள் சாமான்களை அந் நிலையத்தாரின் வண்டிகளுக்கு மாற்றிவிட்டோம். எங்களுக்கு மிகுந்த சௌகரியத்துடன் எல்லா இடங்களையும் காட்டின வண்டி ஓட்டியிடம் விடை பெற்றுக் கொண்டோம். சிறிது நேரத்திற்குள் நாங்கள் பாலாலி நிலையத்திற்குச் சென்றுவிட்டோம. பயணச் சீட்டும் பெறப்பட்டது. சாமான் நிறுத்தம் ஆள் நிறுத்தம் முதலிய சடங்குகள் நடத்தப்பட்டன. கொழும்பிலிருந்து வான ஊர்தி வந்தது. அதில் ஏறினோம். சிலர் முருங்கைக்காய், குடைகள் முதலிய சாமான்களையும் கொண்டுவந்தார்கள். $10\frac{1}{2}$-மணிக்கு விமானம் பறந்தது. எப்போதும் போலவே விமானப் பெண் எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தாள். இடுப்பைக் கட்டுதல், காதுகளுக்குப் பஞ்சடைத்தல், மிட்டாய், காபி தரல், தாள் செய்திகளைப் படிக்கக் கொடுத்தல் முதலிய சடங்குகள் நடந்தன. வந்தபோது பார்த்த காட்சியே திரும்பினபோதும் பார்த்தோம். எவருக்கும் யாதொரு தொந்தரவும் ஏற்படவில்லை. ஒரு மணி நேரத்திலே திருச்சி நிலையம் சேர்ந்தோம். அங்கே சாமான்கள் சோதனை நடந்தது. புதுத் துணிகளுக்குச் சிறிது துகை கொடுக்கவேண்டி வந்தது. உடனே விசை வண்டியில் புறப்பட்டுத் திருச்சிப் புகைவண்டி நிலையத்திற்கு நடுப் பகலில் வந்துசேர்ந்தோம். அங்கே உணவு அருந்தி விட்டுச் சிறிதுநேரம் இளைப்பாறினோம். பிற்பகல் 4 மணிக்கு ஈரோட்டு வண்டி வந்து நின்றது. அதில் ஏறி அமர்ந்தோம். வண்டி நெருக்கம் இன்றி தாராளமாக இருந்தது. ஈரோடு இரவில் சேர்ந்தோம்.

எனது நண்பர்களில் ஒருவருடைய முகக்கண்ணாடி எங்கேயோ விட்டுவிட்டார். அதைத் தேடிக்கொண்டிருந் தார். மற்றவர்களையும் தேடவைத்தார். அது கிடைக்க

வில்லை. தன் மகன் எச்சரிக்கையாக இருக்கவில்லை என்று நொந்துகொண்டார். மகனுடைய மனம் எவ்வாறு இருக்கும்! இது சில்லறை விஷயம். ஆனால் வெறும் உபத்திரமும் மனத் தாங்கலும் தரும். ஆனால் ஒன்று சொல்லுவேன்; இவ்வித சில்லறைச் செய்திகள் நேராவிட்டால், பயணம் சப்பையாக இருக்கும். அதனை நீக்குவதற்குச் சில்லறை ஊடல்கள் வேண்டியதுதான். சிறிது நேரத்தில் இவ்விதச் சிந்தனைகள் மறந்துவிடுகின்றன. என்றாலும், ஒரு பயணத்தில் இவ்வாறு சில சாமான்கள் கூடப்போவது சகசம்தான். ஈரோட்டில் வண்டி மாற்றினோம். வெகு நெருக்கடியாக இருந்தது. இரவு 1-மணிக்குக் கோவை சேர்ந்தோம்.

இந்த வகையில் 18-நாள் பயணம் முடிந்தது. எல்லாரும் சுகமாக வீடுவந்து சேர்ந்தோம். இதுவரையில் அனுபவியாத அனுபவங்களை முற்றும் வெகு எளிதில் அனுபவித்தோம். கூடியவரையில் பார்க்க வேண்டியவை முழுதும் பார்த்துவிட்டோம். நாங்கள் முதலில் போட்ட அட்டவணையில் ஒன்றிரண்டு இடங்களைத் தவிர மற்றவை எல்லாம் குறிப்பிட்டபடியே பார்த்தோம். விட்டுப்போனது சிவனடி பாதம் ஒன்றேதான். அது வெகு தொலைவு, ஏறுவது கடினம் என்று விட்டுவிட்டோம். போனாலும், இன்னும் இரண்டு நாள் அதிகம் ஆகும்.

நாங்கள் பார்க்காமல் அட்டவணையிலேயே விட்டது தென் கோடிக்கரை ஆகும். அங்கே காலி மாத்தரை என்ற இரண்டு ஊர்கள் உண்டு. மற்றும் இரத்தினபுரி பார்த்திருக்கலாம். அதையும் விட்டுவிட்டோம்.

பொதுவில் எங்கள் பயணம் மிகவும் குறைவான செலவில் நன்றாக முடிந்தது. நாங்கள் எழுவரும் மிகுந்த அன்னியோன்ய பாவத்தோடும் மிகுந்த மகிழ்ச்சியோடும் பிரயாணம் செய்தோம். இறைவன் கருணையால் எண்ணின காரியம் முடிவுபெற்றது. இத்துடன் எங்கள் பிரயாண வரலாற்றுச் சுருக்கம் முடிந்தது.

இலங்கைப் பயணம்

தினசரி

25—4—51 முதல் 14—5—51 வரை.

ஏப்ரல்-மீ

தேதி	25	புறப்பாடு — கோவை
,,	26	திருச்சி—வான ஊர்தி—பிற்பகல்—யாழ்ப்பாணம்
,,	27	யாழ்ப்பாண வட்டம் — கீரிமலை முதலியன
,,	28	,, இராமநாதன் திருநாள்
,,	29	,, தமிழ்விழா முதல் நாள்
,,	30	,, ,, இரண்டாம் நாள்

மே-மீ

தேதி	1	அநுராதபுரம்
,,	2	திருக்கோண மலை (மிகிந்தலை, கனியா)
,,	3	டம்பளை, சீயகிரி, பொலன்னறுவை
,,	4	மட்டக் களப்பு — காரைத்தீவு
,,	5	திருக்கோயில் — கதிர்காமம்
,,	6	பண்டாரவளை, நூரளை, கண்டி
,,	7	கண்டிக் காட்சி
,,	8	கொழும்பு — வான நிலையம்
,,	9	,, காட்சிகள், கடைகள்
,,	10	,, நண்பர்களைக் காணுதல்
,,	11	முன்னீசுவரம், திருக்கேதீச்சரம்
,,	12	யாழ்ப்பாணம்
,,	13	வான ஊர்தி — திருச்சி
,,	14	கோவை சேருதல்

உ

எழுவர் நாங்கள்

(செய்யுட் பகுதி)

பொருளடக்கம்

		பக்கம்
1.	எழுவர் நாங்கள் தழுவ நின்றோம் ...	1
2.	பயணப் படுவழி வயணம் நினைத்தோம் ...	2
3.	மயக்கம் தோன்றத் தயக்கம் கொண்டோம் ...	4
4.	இடமும் மலரக் கடமை கொண்டோம் ...	5
5.	செய்தி வருமெனும் செய்தி பெற்றோம் ...	7
6.	எண்ணில் பெருமை நண்ணிக் கொண்டோம் ...	8
7.	சுங்கத் தீர்வையிற் பங்கப் பட்டோம் ...	10
8.	தடுப்பு மருந்தை எடுப்பில் கொண்டோம் ...	11
9.	போம்வழி யாதென ஆம்வழி குறித்தோம் ...	13
10.	வளமை விளம்ப உளமை கொண்டோம் ...	14
11.	தடைகள் மறையவே தருமகிழ் வேற்றோம் ...	18
12.	நாங்கள் பறக்கிறோம் உலகை மறக்கிறோம் ...	21
13.	கலாதி நிலையம் அலாதி என்போம் ...	23
14.	விருந்து தந்தவர் திருந்த பண்பினோர் ...	24
15.	தளிகளைக் கண்டதும் அளிதனைப் பெற்றோம் ...	26
16.	சிறிய செயலிலும் நெறியை உணர்ந்தோம் ...	28
17.	நூற்றாண்டு விழாவைப் போற்றியாம் மகிழ்ந்தோம்	29
18.	தமிழ்விழா வயர்ந்தோம் அமிழ்தெலாம் உண்டோம்	31
19.	பெரியோர் இணக்கம் உரியோம் ஆனோம் ...	32
20.	தென்முகப் பயணம் நன்முகம் கொண்டோம்	34
21.	வழியில் அற்புதம் பொழிலில் கண்டோம் ...	35
22.	புனிதப் பாறைப் பொலிவடி தாழ்ந்தோம் ...	37
23.	தம்பளைக் குகையொடு சீகிரி கண்டோம் ...	39

			பக்கம்
24.	பழநகர் புலனரிப் பழமை நினைந்தோம்	...	40
25.	புலனரிச் சின்னமும் பொன்விழா மகிழ்ந்தோம்		42
26.	கீழ்க்கரை நாட்டின் கெழுதகை தேர்ந்தோம்	...	43
27.	அடிகள் பிறப்பிடக் கொடிநிலை கண்டோம்	...	45
28.	நீரர மகளிர் சீரிசை வேட்டோம்	...	46
29.	தென்பால் இயல்வளம் தெளிந்திடச் சென்றோம்		48
30.	கதிர்கா மத்துக் கனிநிழல் சேர்ந்தோம்	...	49
31.	இயற்கை வனப்பில் மயக்கைத் தெளிந்தோம்		51
32.	மலைநாட் டிடங்களில் கலைநாம் கண்டோம்	...	52
33.	சிகர மலைகளின் செழுநகர் பார்த்தோம்	...	54
34.	கண்டிப் பெருநகர் எண்டிசை அறிந்தோம்	...	55
35.	கொழும்புப் பாதையின் அழும்புகள் உணர்ந்தோம்		57
36.	துறைமுகக் கொழும்பின் நிறைவளம் துய்த்தோம்		59
37.	நிலையம் பலமிசை கலையினை நுகர்ந்தோம்	...	60
38.	சமய நிலைகளின் அமைவை அறிந்தோம்	...	62
39.	மேற்கட லோரமும் மிளிர்தளி தொழுதோம்	...	63
40.	திருக்கே தீச்சரத் திருத்தளி தொழுதோம்	...	65
41.	திரும்பிக் கிழக்கே விரும்பிச் சென்றோம்	...	66
42.	மீண்டும் யாழ்ப்பாணம் வேண்டிட மிதித்தோம்		68
43.	கடல்மேல் பறக்கிறோம் காசை இறைக்கிறோம்		69
44.	எங்கள் நகரம் இனிதே மீண்டோம்	...	71
45.	படிப்பினை நன்குறு முடிப்பெனக் கொண்டோம்		72

ஈழுவர் நாங்கள்.

(செய்யுட் பகுதி)

1. ஈழுவர் நாங்கள் தழுவ நின்றோம்.

ஈழுவர் நாங்கள் இணக்கம் கொண்டோம்,
உழுவல் அன்பில் உறுதி பயந்தோம்;
குழுவில் பயணம் கூட்டி இலங்கத்
தழுவிச் சென்றோம் தழைக்கும் நெஞ்சில்.

அங்கண் முயன்ற அருமைப் பயணம்
துங்கச் செழிப்பில் துளங்கி விளங்க
எங்கள் குழுவோர் எல்லோம் மகிழ்ந்து
பொங்கும் இயல்பை புகல இசைத்தார்.

பத்தோ டெட்டு படர்ந்த நாட்கள்
முத்தோடி யைந்த முந்நீர் இலங்கை
அத்தோ டெல்லா அகங்கள் களிக்க
ஒத்தோர் பயணம் உரைக்க முயன்றேன்.

கதையைக்கூறக் களிசெய் தலைப்பு
விதையைப் போன்று வீறும் விளங்க
சதையும் மினுக்கும் சார்பும் கொள்ளத்
துதையும் அமைப்பைத் தோற்ற நினைத்தேன்.

இதனை என்றன் இதயத் துன்னி
எதனைத் தலைப்பாய் எடுத்தல் சிறப்பென்
றதனைக் கொளவே ஆர்வத் தாழ்ந்து
புதனை வென்ற புலமை நுழைந்தேன்.

சொல்லின் மதிப்புச் சொல்பேர்க் கவிஞன்
நெல்லின் கனிகள் நிகழ்கை யுறல்போல்
அல்லிம் மலர்நேர் ஆங்கில மொழியில்
மெல்லப் புகன்றான் மிளிர்நல் தலைப்பை.

அந்தக் கவிஞன் அறைந்த கவியில்
உந்திக் கண்ட ஒருபா அதனை
சிந்தை தெளியச் சிறந்த தலைப்பை
விந்தை என்ன வேட்டுக் கொண்டேன்.

சின்னஞ் சிறிய செழியள் ஒருபெண்
முன்னர் விளித்தோள் மொழியைக் கேட்க
அன்னம் வெளிறில் அறையும் அவளோ
'இன்னம் யாங்கள் எழுவர்' என்றுள்.

'எண்ணிச் சொல்வாய் என்ன' அவளோ
'நண்ணும் ஐவர் நாங்கள் இங்கும்
மண்ணுள் உறங்கும் மற்றோர் இரண்டும்
திண்ணம் எழாய்த் திகழ்வோம்' என்பாள்.

'சொல்லின் மதிப்பர் சொன்ன உணர்வில்
இல்லை எங்கள் எழிற்சி' என்பேன்
நில்லும் பெயரில் நிரப்பல் ஒன்றே
எல்லைத் தலைப்பாய் இயக்கிக் கொண்டேன்.

2. பயணப் படுவழி வயணம் நினைத்தோம்.

பயணம் என்றால் பலர்க்கும் விருப்பம்
வயணம் கேட்கின் வகைகள் கூறுர்,

எல்லும் பகலும் எங்கும் என்றும்
நில்லும் காட்சி நிலையாய் இருப்பின்,

கண்டு பழகும் காரண ஆட்கள்
பண்டு முறையே பயப்பார் ஆயின்,

எந்த உடலும் எந்த நெஞ்சும்
மந்த முற்று மடங்கும் சலிப்பில்.

காட்சிப் படங்கள் காட்டும் ஆடல்
ஆட்சி தாரா அளவில் செல்லும்.

மாறுதல் என்ற மாட்சிமைப் பண்பே
ஆறுதல் அளிக்கும் அகத்திற் கென்க.

ஆங்கில நாட்டில் அமைந்த படிப்பில்
தேங்கிய பண்பில் தெளிவை அடையார்;

சாலையில் படிப்பைச் சால்புற முடித்தோர்
ஓலையில் கண்டவை உலகினில் காண்டிடப்

பிறநாட் டகங்கள் பேணிச் சென்று
அறநாட் டிடவே அலைவர் பன்னாள்.

இந்திய நாட்டிலோ இவ்வா றிலையென
சிந்திய மூக்கினில் செப்பினன் ஒருவன்.

"எந்தமா மரத்தடி இயங்கினன் பாட்டன்
அந்தமா மரத்தடி அமருவன் பேரனும்."

என்றொரு கூற்றை எழுதின அவன்மொழி
தொன்றுதொட் டதனை தூற்றிப் படித்தனம்.

ஆனால் உண்மையை அவனோ அறியான்,
மேனாட் டவர்வழி மேனாள் இருந்தது.

இந்நா டகத்தும் எண்ணருங் குரவர்
முன்னாள் வாழ்வினும் மொழியினும் காண்போம்.

மாறுதல் ஒன்றோ மதஅறி வொன்றோ
ஆறுதல் அனைத்தும் அளிக்கும் பயணம்.

'ஆங்கில நாட்டினும் அகம்விட் டகலா
தேங்கிய மக்கள் திகழ்ந்தனர்' என்று

போற்கோல் லன்பெயர் பூண்ட புகழ்க்கவி
நிற்கும் அங்கத நெறியில் கூறினன்.

'நிலப் படுக்கையின் நின்றும் சிவப்பிடைக்
கோலப் பயணம் கொண்டது குடும்பம்'

என்று கூறிய இங்கிதச் சொல்லை
நின்று காண்மின் நிலைத்த பண்பென.

தென்பால் புலவர் சேர்ந்துள பண்பில்
அன்பாய்ப் பயணம் ஆற்றலொன் றறிவீர்.

3. மயக்கம் தோன்றத் தயக்கம் கொண்டோம்.

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்'
அழகன்று அம்மொழி, ஆனால் உண்மை;

பார்த்ததைப் பார்த்தல் பழஞ்சோ றென்பர்
ஆர்த்தலும் வியத்தலும் அதன்கண் இலதாம்.

இலங்கையை ஐம்முறை இனிதுறப் பார்த்திடின்
சலங்கையர்ச் சிறுமியும் சலிப்பைக் கொள்ளாதோ!

முதன்முறைப் பயணம் முடிந்தது முக்கால்
அதன்முறை செப்பில் அகங்களி கூரும்;

நால்வர் நண்பர் நட்பில் இணைந்தேம்,
சால்பில் சென்று சலிப்பிலா தார்ந்தேம்;

சொந்தச் செலவில் சூழ்ந்தஅப் பயணம்
சிந்தும் பெருமை சீருறக் கொண்டிடும்.

பின்னர் என்றன் பிரயா ணங்கள்
நன்னர்ச் செலவினை நாடிலன் யானே.

யாழ்ப்பா ணத்தின் இயற்றமிழ்ச் சைவர்
ஏழ்ப்பால் இசையில் இன்மொழி தந்தே

எழிற்சபைத் தலைமை இருவேம் எமக்குக்
கழிபே ருவகையில் கணித்துத் தந்தனர்.

இன்னும் ஒருமுறை இன்றமிழ்ச் செல்வர்
மன்னும் இலங்கை மாபெரும் இளைஞர்

மாநா டதற்கு மதிப்பொடு அழைத்துத்
தேனு டெல்லாம் தெளிவுறக் காண

ஊர்க்கண் தோறும் உரைகள் செப்ப
தேர்க்கண் விழாவில் தீந்தமிழ் மொழியக்

கதிர்காமத்துக் கலியுக வரதன்
புதிர்போல் அமைந்த பூசையைக் காணப்

பன்னாள் சுற்றிப் பயணம் கழித்தேன்.
பின்னால் சைவர் பெருஞ்சமாசத்தின்

ஆண்டு விழாவை அகமகிழ்ந் தேற்றுக்
காண்டிடச் சென்றேன் கலியாழ்ப் பாணம்.

ஐந்தாம் முறையில் அரும்பெருங் கொழும்பில்
நயந்தார் பேரவை நனிபே ரமைச்சர்

உட்படத் தமிழர்; ஒழுங்காய் வானில்
நட்புறச் சென்றேன்; நனிமிக்ச் சுற்றி

நாடெலாம் கண்டும் நன்முகத்துடனே
காடெலாம் திரிந்தும் காட்சிகள் வரைந்தேன்.

இவ்வா றைம்முறை இலங்கையைக் கண்டும்
எவ்வா றின்னும் ஏகுவன் என்றேன்.

ஆனால் எங்கள் அருமைத் தோழர்
ஊனார் முன்சொலை உறுத்தினன் செய்வேன்.

4. இடமும் மலரக் கடமை கொண்டோம்

நான்காம் தடவையில் நடந்ததோர் பேச்சை
ஈங்கண் உரைத்தல் எடுப்பாம் என்பேன்.

இலங்கையின் இயற்கை எழிலைஎம் தமிழர்
அலங்கலில் முத்தென அதையறிந் திருந்தார்.

யானும் கண்டுஅதை இயம்பிடும் முறையில்
வானுள் இதைப்போல் வளமிலை எனச்சொலிக்

கடலின் கண் உளவொரு கடிமுத்தென அதை
மடலில் வரைந்து மண்மிசை விடுத்தேன்.

யாழ்ப்பா ணத்தின் இன்றமிழ் கேட்டோர்
ஊழ்ப்பால் மடியா உயர்வதில் மதிப்பார்.

சைவப் பழங்கள் சாத்திரக் கனிகள்
தெய்வக்காவில் தென்படும் விளைந்துளனத்

தென்னாட் டவர்கள் தெளிந்துஅவை உண்ணப்
பன்னாள் காத்துப் பலன்பெற இருந்தனர்.

அத்தகை நினைவுகள் அடிபடு நாளில்
முத்தமிழ்ச் சைவ முடிபுகள் காண்பான்,

கொழும்பில் சமாசம் கூட்டுவார் என்று
எழும்பிய செய்தியும் எங்கும்வீ சிற்றே.

அதனைக் கோவை அறிஞரும் அறிந்தார்,
இதனைவிடாமல் ஏற்போம் என்றார்.

என்னகத் தோழர் இருபேர் நாளும்
முன்னுறச் செல்ல முனைப்பினுள் நின்றனர்.

யானும் இசைந்தேன் எழிலெலாம் காட்டித்
தேனும் பொழிநல் தீவினுக் கேக;

அனுமதித் தாள்கள் அனைத்தையும் பெற்று
நனிமதி ஆர்வம் நகைசெய இருந்தனம்.

கூட்டம் உறுநாள் கூடி வரவர
வாட்டம் உற்றார் வரவிருந் தோர்கள்.

வாணிபத் தலுவல் வளர்ந்து தடையாய்க்
கோணியில் சிக்கின குற்றெலி ஆக்கும்.

இலங்கை ஏகிலர் இந்தத் தருணம்;
நலங்களைக் கண்டோம் நானும் பிறரும்.

ஆனால் முந்திய அன்பர் எண்ணினர்
'போனாற் போகுது போவோம் பின்' என

நெஞ்சில் அழுத்தம் நிரப்பிக் கொண்டனர்;
தஞ்சம் தந்த தன்மையில் நின்றேன்.

அதுமுதல் நண்பர் அடிக்கடி நினைவுறுத்
திதுவரை நின்றனர்; என்மனம் அதனை

நிறைவேற் றிடுமோர் நெறியினில் நின்று
கறைவே றின்றிக் கனவுகள் காணுமே.

5. செய்தி வருமெனும் செய்தி பெற்றேம்

அடுத்த ஆண்டே அமைச்சர் குழாங்கள்
தொடுத்துவிட்டனர் தொடர்பாய் நடத்தச்

செந்தமிழ் விழாவைச் சீர்கெழு இலங்கையில்.
அந்தநற் செய்தி அணைந்ததும் கோவையில்,

எங்கள் பங்தெறி இனிமை விடுதியில்
தங்கும் ஞானத் தரு வதன் சார்பில்

மாலைப் பொழுதில் மகிழ்கொள் மூத்தோர்
வேலைக் கவலை விடுத்துல் லாசப்

பேச்சை நிகழ்த்தலில் பேசிக்கொண்டே
ஓச்சி விட்டனர் உவந்ததற் கேகவே.

செய்தித் தாள்களச் செய்தியைத் தெரிக்கவே
தெய்தி யாதெனத் தெரிய விரும்பினர்.

க்ழகங் களி லெலாம் கடைத்தெரு வெல்லாம்
பழகின பேச்சில் பழமை பேசினர்.

இலங்கை என்றல் இயற்கை அழகோ,
கலங்கரை விளக்கமும் களிவா ணிபமும்,

தேயிலை இரப்பர் திகழ்கொப் பரையும்,
வாயுற வாழ்த்த வனக்கதிர் காமமும்,

மற்றும் வியப்புகள் மலிந்து கிடக்கும்,
சுற்றி வரலாம் சூக்குமச் செலவில்,

என்ற பேச்சே எங்கும் படர
சென்ற இடமெலாம் செழித்ததந் நினைவே.

இந்த வகையில் எங்கள் நண்பர்
தந்தமுன் வாக்கைத் தணிக்கை செய்தனர்.

என்மனப் பான்மை இணங்கிற் றிலது;
கன்மனம் கொள்ளவும் கண்விட வில்லை,

கேகயன் செல்வி கிடைவரம் மீட்க
ஆகவும் போகவும் அகமிடம் தாராத்

தயரதன் நிலையில் தயங்கிற் றென்மனம்.
வயதினன் எனினும் வாக்கினைக் காத்தல்

அறமெனக் கருதி அன்பர்ப் பொருட்டு
திறமது கொண்டு தேர்ந்தனன் உடன்செல.

செந்தமிழ் விழாவின் செய்திகள் உறுதியில்
முந்துற வரவிலை, முட்டுப் பாட்டில்

தவணை பற்பல தள்ளிச் செல்லக்
கவனம் குறையக் காலம் சென்றது.

ஆனல் பலபேர் ஆணை பெறவும்
நானு விதத்தில் நாட்டம் கொளவும்

தீவிர முயற்சி தேர்ந்தனர், அதனை
நாவிலும் நடையிலும் நாடி நின்றனர்.

6. எண்ணில் பெருமை நண்ணிக் கொண்டோம்.

ஓராண் டளவில் உறுதிகள் பெற்றுச்
சீரார் இலங்கை செல்ல நினைத்தோர்

பள்ளித் தோழமை பயின்ற பண்டைப்
புள்ளி ஆட்களின் புதன்மை உறவினர்.

இருவர்தம் தந்தையர் என்னுடன் முன்னுள்
ஒருவர் வடபால் ஒருவர் தென்பால்

பயணம் செய்துப் பலன்மிகப் பெற்றவர்;
வயணம் இலையோ வளமவர் மக்களும்

அதுபோல் யாத்திரை ஆர்ந்தும் உவந்தும்
பொதுவாய்ச் செல்வதில் பூரித் ததுவே?

முதன்முறை இலங்கை முனைந்துடன் வந்தோன்
சுதன்முக மிளிரச் சூழ்தலும் முறையே.

முன்னர் நாடுகாண் மோகம் கொண்டோர்
பின்னர் அவர்சுதர் பேணல் இயல்பே.

இருபேர் இணங்கி இலங்கை செல்லத்
திருவேர் எண்ணம் திகழ்ந்து கூர,

இருவர்தம் மதலைகள் இருவர் கூட
பெருவளத் திலங்கை பேணி நின்றனர்.

இந்தச் செய்தி எங்கும் படரச்
சொந்தத் தம்பியர் சூழ்ந்து நின்றனர்.

இறுதியில் ஆறுபேர் என்னோடுடன்வர
உறுதியில் ஏழாய் உற்றனம் யாங்கள்.

ஏழு பெயரில் இலங்கிய தொகுதி
சூழு முறையில் சொலித்திடும் நன்றே.

எந்தச் செயற்கும் எடுப்பாய் உள்ளது
சிந்தைக் கடங்கும் சேர்க்கை அஃது ஆகும்.

எண்ணத் தொகையோ ஏறிக் கிடக்கின்
திண்ணம் அதன்செயல் தெளிவாய் நிற்கா.

சமயல் செயப்பலச் சமயலாள் சேரின்
அவியல் ஆக்கி அடிசிலைக் கெடுப்பர்.

குறுகிய எண்ணில் கூடின் எதுவும்
நறுமையில் வெல்லும் நலமும் தருமே.

எங்கள் குழுவில் ஏழுபேர் சேரப்
பங்கம் இன்றிப் பயன்பல பெற்றோம்.

இந்த நினைவே இறுதி வரையில்
சிந்தை களிக்கச் செழித்து நின்றதே.

பயணம் நன்கு படர்ந்து மிளிர
நயனம் சிமிட்டி நர்த்தனம் செய்தோம்.

எழுவர் நாங்கள் என்ற எண்ணம்
தழுவி நின்ரும் தழைத்த நெஞ்சில்.

7. சுங்கத் தீர்வையிற் பங்கப் பட்டோம்.

நாட்டை விட்டயல் நாடு புகுதலோ
கூட்டை விட்டுயிர் குழிகொளல் போலாம்.

எந்த நாட்டிலும் எந்த நாளிலும்
இந்தக் கடுமை இருந்தது என்க.

கடிய விதிகள் காட்டி அதன்படி
கொடிய இறைகள் கொண்டது அரசும்.

வாணிபத் துறையில் வளம்பெறு மக்கள்
சேணிய நாடுகள் செல்லல் இயல்பே.

பண்டம் மாற்றப் பலசரக் கேற்றிக்
கொண்டு செல்லல் கூடிய முறையே.

பலனும் பெறுவார் பலனில் பகுதி
நலனும் எண்ணி நாட்டிற் களிப்பார்.

நாட்டின் அரசும் நல்கும் காப்பும்
ஈட்டின் இறையும் இயல்பே அன்ரு ?

இந்த வகையில் இயங்கும் சுங்கம்
சிந்தித் தறியின் சீற்றம் கொள்ளேம்.

ஆனல் புனிதம் ஆர்ந்த இடங்கள்
போனல் ஏனே புகும்வரி கேட்பார் ?

பேரா சையினல் பெறப்பேர் அரசுகள்
ஆரா வமுதாய் அள்ளுவர் அப்பணம்.

இந்நாள் போல இறந்தகா லத்தும்
இன்ன செய்தது இழிவைச் சுங்கம்.

சுங்கம் தீர்த்த சோழன் ஒருவன்
பங்கம் நீக்கிப் பயணம் தந்தான்.

அந்தச் செயலை அமரர் செயல்போல்
சொந்தப் பெயர்ருக்கு சூட்டினன் விதாய்.

தமிழர் மன்னன் தந்தஅப் புகழை
அமிழ்தென இந்நாள் அமைப்போர் இல்லை.

இலங்கைக் கேகின் இருபெருஞ் சுங்கம்
துலங்க இருத்தல் துன்பம் தருமே.

பண்டச் சோதனை பலிக்கும். ஓர்வரி,
சிண்டை பிடித்துச் சேர்க்கும் ஆள்வரி.

உடல் நலம் அனுமதிக் கோரைம் பொன்னும்
இடமது மாற்றற் கெழிற் பொன்னிரண்டும்

தந்தால் போதா, தடைபோம் அனுமதி
வந்தால் சரியென வார்ப்பதற் களவிலை.

ஆக இவ்வகை ஆளும் சரக்கும்
போக இருப்பின் பூக்கும் பலஇறை

இவையெலாம் பெற்றேம், ஏழுநாள் திரிந்தே,
கவையிலாக் கொம்பில் காட்சி தந்தோம்.

8. தடுப்பு மருந்தை எடுப்பில் கொண்டோம்.

இலங்கைத் தீவின் எழிற் பெயர் தம்மில்
இலங்கும் ஒன்றாய் ஈழம் எனும் பேர்.

ஈழம் என்றால் இனிய பொன் ஆகும்
ஆழப் பொருளாய் அதனைப் போற்றுவர்.

நாட்டின் வளமும் நகுவா ணிபமும்
காட்டிச் செல்லும் காரணப் பெயராய்.

நீரும் நிலனும் நெறிசெய் வகையும்
ஊரும் செழித்தல் ஒன்றே அன்றும்.

மக்கள் உடல் நலம் உறுதிப் பாடும்
தக்க முறையில் தங்கியும் உண்டாம்.

பூமகன் மேனி பொன்மேனி யாகெனல்
கோமகன் நாளில் கொண்டதோர் வழக்காம்.

என்னும் தமிழ்மொழி ஏற்ற பொருளோ
பொன்னில் உடல் நலம் பொதிந்த பொருளாம்.

இலங்கை மக்களோ ஈழம் என்றால்
துலங்கும் உடல் நலம் தொடர்பாம் என்பர்.

அதைத்தான் வற்புறுத் தமைத்தல் எண்ணி
எதைத்தான் செய்யார் இயலர சியலார்?

பிறநாட் டாட்கள் பேணி வந்திடின்
மறநாட் டிடுநோய் மடியாய்த் தடுப்பார்.

அவ்வகை விதிகளை அளந்து பொறித்துத்
தெவ்வுறு முறையில் தெரிந்து வைப்பார்.

அந்நா டிலதோ அவ்வகை நோய்கள்
சொல்நா அறுப்பர் சொன்னால் போதும்.

வாந்தி பேதி வாரா வண்ணம்
சாந்தி செய்ய சலாக்குநீர் ஏற்றியும்

அம்மை நோயும் அண்டா வகையில்
உம்மும் மருந்தை ஒட்டி விடவும்

விதிகள் இயற்றி வெறுக்கச் செய்வர்.
கதிகள் எண்ணிக் காசுகள் எறியும்

மக்கள் உளரே, மருந்தை ஒருமுறை
தக்க வரிகள் தாங்கில் அஞ்சோம்.

பங்கீ டிங்கு படர்ந்த உடனே
எங்கும் இலஞ்சம் இயங்கின தறிவீர்.

அம்முறை யாக அம்மை வகைக்கும்
தெம்முறை கொண்டனர் தெரிவி லாதார்

ஆனால் நாங்கள் அமைதி பெற்றே
தேனார் மகிழ்வில் தேர்ந்தோம் மருந்தை.

மேனிகள் காய்ச்சல் மேவா தாக
வானிதம் வழங்க வந்தது மகிழ்வுமே.

9. போம்வழி யாதென ஆம்வழி குறித்தோம்.

இலங்கைச் செலவுக் கிருவழி உண்டு;
கலங்களில் ஏறிக் கடல் கடப்ப தொன்று,

வான ஊர்தியில் வளமுறல் மற்றது,
ஆன இரண்டிலும் அணைந்தனம் ஊர்தியை.

குருவிபோல் பறப்பது குதூகலம் தருமெனும்
உருவமே நெஞ்சினில் உற்றனர் சிறுர்கள்.

பறந்தால் என்னமோ பயந்தான் எனவாய்
திறந்தார் பெரியவர் திடமெல்லாம் விட்டே,

ஆவி ஓடம் அருவருப் பலேச்சல்
மேவி இடுமாம் மெல்வயிற் றிடையே,

சுங்கக் கடுமை சுட்டிக் கொளுத்தி
பங்கப் படுத்திப் பயணம் கெடுக்குமாம்

ஓரிர வோடே ஒருபகல் முழுதும்
சீரழி வோடே செல்லல் வேண்டுமாம்,

வான வூர்தியோ வனப்பஞ் சமளிபோல்
தான வமைப்பில் தளுக்கில் செலுமாம்,

ஒரு மணி அளவில் ஒடிப் பறந்து
திருமலி இலங்கைத் திசைசேர்த் திடுமாம்,

சுங்கச் சூடும் சூக்குமம் எனஉரைத்(து)
எங்கட் குழுவோ ஏந்திற் றிதையே.

எங்களில் சிலரோ இலங்கை நூல்ஒரு
திங்களில் படித்துத் தேர்ந்தனர் முழுதும்

சில பேர் ‘ தீவின் சிறப்பைக் காண்கையில்
நலமாய் படிப்போம் நாங்கள் ’ என்றார் ;

மற்றும் சிலரோ ‘ மாண்பினைக் கண்டபின்
கற்றுக் கொளலாம் கதை நூல் ’ என்றார் ;

இவ்வகை வெவ்வே றியல்புகள் கண்டு
செவ்வகை மீன்கள் செயல்கதை நினைத்தேன்.

வருமுன் காப்போன், வரவரக் காப்போன்,
வரும்பின் காப்போன், எனக் குணப்பெயரின்

மூன்று மீன்கள் முந்நீர்க் குளத்தில்
தோன்றி வளரத் துறையில் வலைஞன்

வரவை அறிந்து வாய்ப்பறை அடித்த அம்
மரபை அறிவோம், வடநூல் விளம்பிய

அக்கதை ஒட்டி அன்பர் மிளிர்ந்தனர்.
‘ அக்கறை முழுவதும் அதனால் அறிந்தோம் ’

என்று யானும் இன்புற்றிருந்தேன்,
சென்று யாவும் செழிப்பில் ஊட்டுவம்

பின்னர் மற்றது பேசிக் கொள்ளுவோம்
என்னும் முடிவில் யாங்கள் நின்றோம்.

10. வளமை விளம்ப உளமை கொண்டோம்.

கல்வியில் கேள்வியே கனச்சிறப் பென்பர்
செல்வியர் அங்ஙனம் செழிப்பும் கண்டார்

‘ இலங்கைச் செழிப்பினை எழில் பெற விளம்பில்
அலங்கலின் அதனை அணிகுவம் ’ என்றார்

எம்மிடைச்சிறார்கள் இன்முகம் மலர்ந்து
விம்மிடும் இயற்கையை வினவி நின்றார்

இயற்கை வளத்தினை இனிதுற விளம்பிச்
செயற்கை அதனுடன் சேர்த்தியும் விழைந்தேன்

குரங்கினங்கள் குதூகலத்தில்
கொம்பரிடைக்குதிக்கும்

குட்டியதை ஏந்திமுலைக்
கொடுத்துதவிப்பதுக்கும்

மரங்களிடை நெருங்கிவரும்
மலையரவின் ஈட்டம்

மறைந்திருளில் நீர் அருந்தும்
மான்வரவைத் தீட்டும்

கரங்களிடை அடிமரத்தை
கைத்தடிபோல் தூக்கும்

காசுபணம் ஈட்டிதரும்
கரிகள் மிக வேர்க்கும்

சுரங்க மிடை அயம்வழிகள்
சுடர் ஒளியில் செல்லும்

சுடர் சகடம் நடைவழியும்
சூழ்வளைவுள்வெல்லும்.

என்று கூறி இனிஅரும் அருவியும்
குன்று படரும் குளிர்தரு பண்ணையும்

மற்றும் வாணிபம் மலிநலன் யாவும்
கற்றுக்கொள் எனக் காட்சியை நவின்றேன்.

நிலமதனை முத்தமிட
நீர்வீழ்ச்சி பாயும்

நெடுந் தொலையும் ஒலிபடர
நிறையருவி வீழும்

தலமதனை தேயிலையும்
தகை காப்பி தோய

தரை மெழுகி இரப்பர் மரம்
தண்ணிழலை யீய

கலமதனில் அறுசுவைகள்
கலக்குமணச் சரக்கும்
கண்கவரப் பிறநகர்கள்
களிப்புதரக் கறக்கும்
நலமதனில் ஐம்புலற்கும்
நாட்டமுறும் அவையே
நகைமுகத்திம் மகர்களிக்கும்
நாட்டமதும் சுவையே.

நாட்டு நிலைகள் நன்கே அறிந்திடப்
பாட்டும் புதிரும் பகரல் வேண்டிச்

சமய நிலைகள் சாற்றும் படிக்கும்
அமயமும் தருமென ஆற்றுக என்றார்.

அதனைக் கேட்டும் அகமகிழ்ந் திங்ஙன்
இதனைப் பெறுவீர் என்று விளம்பி

புனிதத் தலங்கள் பூத்த பெருமை
மனிதன் மகிழ மாற்றமும் சொன்னேன்.

சமயமதன் சார்பினிலே
சான்றாண்மை மிளிரும்
சாக்கியமும் சைவமதும்
சால்புடனே ஒளிரும்
இமயமுடன் வாதாடும்
எழுமலைபோல் ஓங்கும்
எண்டிசையும் மணித்தூபி
இரும்விண்பால் வீங்கும்
கமயமுடன் கானவரும்
கலியுகத்து வரதன்
காலடியை வழுத்திவரும்
காட்சியதும் சரதம்
தமயனுடன் தம்பியரும்
தங்கையரும் தாயும்
தகப்பனுடன் தமரினமும்
தலம்வணங்க ஏகும்.

இவையெலாம் மகிழ்ந்தே 'இனியும் சிற்சில
அவை யெலாம் போற்றுமா றருளுக' என்ருர்.

வாணிபச் செம்மை வளம்பெற நிற்க
காணிய விவரம் கருத்துடன் கேட்டார்.

அதனை விரித்தும் அன்புடன் சிலசொல்
பதனில் ஏற்றும் பண்பினில் உரைத்தேன்.

தோணியில் அடைந்த தொல்செல் வாக்கும்
காணிடல் வேண்டிக் கதைத்தனன் யானும்.

'வாணிபமோ வகைவகையாய்
வளர்ந்துவரும் அதற்கோ
வனப் பொருளும் நிலப்பொருளும்
வாரிவரும் நகர்க்கோ.
காணியிலே விளைந்துவரும்
கதிர்மணியின் குவியல்
கடைகளெலாம் நிறைந்திருக்கும்
காட்சியதும் அவியல்.
தோணிகளில் ஊனுடைகள்
தொடர்ந்து வரும் வகையில்
தொலையிலுள சிறுகுடிலும்
துய்த்திடுமாம் மிகையில்,
பேணிவரும் மக்களுக்குப்
பிடிப்பெதிலும் உண்டே
பிரேமையுடன் எப்பொருளும்
பெற்றுவரும் கொண்டே.'

கல்வியும் கேள்வியும் காட்டாள் கூடச்
செல்விச் செல்வரும் செறிதல் விரும்புவர்.

செழிப்பதில் இருந்ததைச் சிருர்கள் கேட்க
ஒழிப்பது மின்றி உரைத்தனன் எல்லாம்.

'கல்வியிலே மக்களெலாம்
கண்களிக்கப் படிக்க
கலைக்கூடம் மூலையெலாம்
காட்சிதரும் குடிக்கண்.
செல்வியரும் இலவசமாய்
செழுங்கணக்கின் வாய்ச்சி
செப்பிவரும் ஆசிரியர்
செலவுதவும் ஆட்சி.
நல்விதத்தில் அலுவலகம்
நாடிவரும் பெரியோர்
நலங்கருதும் நாணயமும்
நகுமணமும் உரியோர்.
பல்விதத்தில் இலங்கையதன்
பண்புகளைத் தூண்போல்
பயணமதில் வெகு விரைவில்
பலவளத்தில் காண்போம்.'

இந்த முறையில் எழில்தரும் இலங்கை
உந்து மெழிலை உளங்களி கூரத்

தீவின் செழிப்பில் திண்மையில் சிலவும்
தாவிச் சொன்னேன் தழுவும் இசையில்.

குறமகள் இசையில் கூட்டி உரைக்க
உறவினர் எல்லாம் உற்று வியந்தனர்.

இந்தப் பாடல் எளிதில் சிறுரை
விந்தையில் விட்டு வியப்பில் வைத்தன.

11. தடைகள் மறையவே தகுமகிழ் வேற்ரும்.

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ,
கழப்பின் வாரா கையுற வுளவோ?"

என்ருெரு வினவை எழுப்பிச் சென்ருர்
அன்றெம் பட்டினத் தடிகள் உறுதியில்.

யாங்கள் எண்ணிய யத்தன மதற்குத்
தீங்கும் தடையும் திரண்டு வந்தன.

ஆயினும் இறைவன் அருளால் யாவும்
போயின மறைந்தே புதிதெதும் தோன்றில.

ஊக்கி முயன்ருல் உருத வுளவோ,
தாக்கி நின்ருல் தகராத வுளவோ,

நடந்தவை முற்றும் நவின்றேன் ஒருமுறை
தொடர்ந்தவை இங்கு தொகுத்துரைப்பேனினி.

'ஆத்திரப் பட்டு நாங்கள்
அவசர உருவாய் நின்ருேம்,

காத்திர வேலை முற்றும்
கனவெனச் சென்ற தன்றே;

'பாத்திர மறிந்து பிச்சை
பகிர்ந்திடல் நன்றே' என்ருல்

சாத்திர முறையும் காணல்
சரியெனும் சொல்லும் உண்டே.

ஈழநாட் டழைப்பை எண்ணி
இன்றமிழ் விழாவைக் காண

ஆழநீர் தாண்டிச் செல்லும்
ஆர்வமும் பொங்க நின்ருேம்;

தோழனர் பலரும் சேர
துணைவராய்ப் பறக்க எண்ணிச்,

சூழவந் தணுகி நின்ற
சொல்வலான் நம்பி நின்றேம்.

குறித்தநாள் வான வூர்தி
கொடுப்பதாய்க் கூறிச் சென்ருேன்

பொறித்தசீட் டதனை விட்டும்
புதிதென வந்தோர்க் கீந்தான்;

முறித்தசொல் அதனைக் கண்டு
முனிவுடன் எங்கள் நண்பன்

நெறித்தடை கண்டு மீண்டும்
நிலைதனை மாற்றி வைத்தான்.

இவ்வணம் ஏமாற் றங்கள்
இந்நிலம் அதனில் காணில்

எவ்வணம் சகிப்போம் நாங்கள்?
இந்தநாள் மக்கள் எல்லாம்

செவ்வணம் பூண்டார், என்றல்
சிறிதுமே நம்ப வேண்டாம்,

ஔவியம் பூணும் சொல்லே
அதிகமாய் இலங்கும் அந்தோ!

கவலைகள் கொண்டு பன்னாள்
கனவிலும் ஊக்கம் இன்றி

அவலைகள் நெறியில் கூடி
அலைச்சலும் கொண்டோம், பின்னர்ச்

சவலமும் இல்லார் ஆனோம்,
சார்வது நலமே ஆகும்

விவரமும் எதிர்பார்த் துள்ளோம்,
விமலனார் துணையுண் டன்றோ!'

இவ்வணம் இலங்கிய இடைத்தடைக் கவலை
எவ்வணம் மறைந்ததென் றியம்பிடல் வேண்டாம்.

சென்னைக் கிருமுறை சென்றவண் முயல
முன்னைத் தடைகள் முறிந்து மறைந்தன.

எங்கட் குறுதியில் எடுத்த அனுமதி
திங்கள் தண்ணொளி திகழ்தல் போல

வந்து கிடைத்தது, வளமைப் பயணம்
உந்தித் தொடங்கினம் ஊக்கம் உற்றே.

12. நாங்கள் பறக்கிறோம் உலகை மறக்கிறோம்.

கோவையை விட்டுக் குதூகல உணர்வில்
தேவைமுட் டின்றித் திருச்சி சென்றோம்.

காலையில் எழுந்து கடன்களை முடித்து
வேலையில் இறங்கி விமானமும் அடைந்தோம்.

வேண்டிய நண்பர்கள் விடைபெற வந்தனர்;
கூண்டினில் ஏறிக் குதுகலத் தமர்ந்தோம்.

எங்களில் பலர்க்கோ இதுதான் முதன்முறை,
துங்க நல் நெஞ்சிடை துடிப்பும் கொண்டனர்.

வான வூர்தியில் வதிந்த பின்னர்
ஆன வுணர்ச்சிகள் அனைத்தும் மறைந்தன.

முன்னர் எழுதிய முனைப்புகள் இங்கே
சொன்ன முறையில் சூட்டி வைப்பேன்.

'பறக்கிறோம் விண்ணில் நாங்கள்
பறவையின் விசையும் மீறி,
சிறக்கிறோம் கலையில் மிக்கு
செழிப்புறும் காட்சி காண;
மறக்கிறோம் அச்சம் முற்றும்
மகிழ்ச்சியில் போத லாலே,
கறக்கிறோம் ஆவின் பால் போல்
கணக்கிலா ஆசைப் பாலை.

பொன்னியா றோங்கிப் பாயும்
பொலிவுறும் திருச்சிப் பாங்கர்,
உன்னியாங் குற்ற காலை
உறுதியில் வான வூர்தி,
மன்னியாம் பகர ஒண்ணாப்
பாடலின் மகிழ்ச்சி போல

முன்னியாம் ஏறிச் சென்றோம்
மொழி கிலாப் பொறியின் மீதே.

வானுலாம் பொறியின் மீதே
வளமுடன் அமர்ந்த காலை,

தேனுலாம் சிறுதின் பண்டம்
தேர்ந்திடும் அன்போ டீந்தாள்

மீனுலாம் மாழைக் கண்ணி,
மிகுத்திடும் அச்சம் நீங்க

ஊனுலாம் இடுப்பைக் கட்டும்
உறுதியில் பூட்டிச் சென்றாள்.

புவியினில் படரும் தோட்டம்
பொலிவுடன் சித்ரம் போன்றும்

கவியினில் வரைவு போலும்
கணக்கினில் காணும் என்க;

செவியினில் ஓசை மங்க
செழிப்புறும் பஞ்சு கொண்டோம்,

அவியலின் சாமான் போல
அமர்ந்திடும் மேகம் எல்லாம்.

ஒருமணி நேரம் செல்ல
உற்றது கரையும் மெல்ல,

உருவமும் தெரிய நன்றாய்
உதித்திடும் பனைகள் கூட்டம்,

தெருவினில் அமைதி கண்டோம்
திகழ்ந்திடும் யாழ்ப்பா ணத்தின்

பெருவயின் குறித்து நின்றோம்
பேறிதில் வேறே துண்டே.'

இசைந்த இப்பாட்டில் இயம்பிய தனைத்தினும்
அசைந்தது கண்டிலம் அடைந்தனம் முற்றும்.

யாழ்ப்பா ணத்தின் இன்முக அன்பர்
தாழ்ப்பாள் திறந்ததும் தந்தனர் வந்தனம்.

பலாலி நிலையம் பார்த்ததும் அலுவலர்
துளாவி விட்டனர் தொடர்ந்த எம் சாமான்.

ஈழக் கரையினில் இனிமைகள் எம்மைச்
சூழச் சென்றோம் சொல்லொணு மகிழ்ச்சியில்.

13. கலாதி நிலையம் அலாதி என்போம்.

அம்பிகை பாகர் அழைத்தனர் வந்தே
எம்பிகை நலமென ஈந்தனர் வந்தனம்.

விரைவுச் சகட்டில் வீற்றிருந் தமரத்
தரைமிசைப் பயணம் தந்தனர் உடனே.

வெய்யிற் கொடுமை வேர்த்துக் கொட்ட
கையில் குடிநீர் களித்திடத் தந்தார்.

உப்புநீர் ஆயினும் உற்றிய தாபம்
ஒப்புநீர் ஆகி உவப்பினைத் தந்தது.

கலைநிலை யத்தைக் கண்டனம்; அதையே
தலைநிலை யாக்கிடத் தந்தனர் எமக்கே.

தங்குதற் குரிய தகுதி முற்றும்
மங்குத லின்றி மலிந்ததந் நிலையம்.

தொட்டிக் கட்டில் தொடர்ந்திடும் அதனை
ஒட்டி யுள்ளது கொட்டம் ஒன்று.

படுக்கவும் இருக்கவும் படிக்கவும் வாய்ப்புகள்
நடுக்கணும் வெளியிலும் நல்கிடும் அதுவே.

என்னெஞ் சதனிடை இழுத்துச் சென்றது
நன்னர் அமைந்த நன்னூ லகமே.

நிரம்பப் பண்டை நெறிநூல் பலவும்
வரம்பும் மீறி வாய்ப்பது கொண்டது.

வாயிற் புறத்தில் வளமரம் ஒங்கும்
கோயிற் புறத்தைக் கொண்டிடும் கூடம்.

பின்புறம் மா பலா பெருகி வளர
முன்புறம் அவையே முளைத்து நிழல்தரும்.

நாக லிங்கமோ நளின மலர்களை
ஏக் ரீதியில் எதிரெதிர் உதிர்க்கும்.

மாவின் பிஞ்சுகள் மலிந்து சிதறி
ஏவி யழைக்கும் இளைஞர் தொகுதி.

வான்செல் பலாவோ வளம்பெறு காய்கள்
தான்செல் அடிமரம் தழைத்துத் தொங்கும்.

கேணி ஒன்று கிடைநீர் முழுதும்
ஏணி ஏற்றம் இறைத்துக் கொடுக்கும்.

குளிக்க வசதி கூடி இருக்கக்
களிக்க வேறேன் காணவும் வேண்டும்!

வெய்யோன் கொடுமை வெளியில் நிற்கும்
ஐயோ, அவன் வால் ஆட்டான் இவ்வண்.

நகரின் இறைச்சல் நாடா வகையில்
பகரினம் இதனைப் பன்னக சாலையாய்.

இவ்வண் அமைதி இயங்கும் நிலையம்
செவ்வண் தங்கி செழித்தனம் சின்னாள்.

14. விருந்து தந்தவர் திருந்த பண்பினோர்.

கலைநிலை பெறுமெனில் கவினதில் உளதெனில்
அலைநிகர் ஆற்றலில் அறிவும் அமையுமே.

கலை நிலை யந்தனில் கவினதைக் கண்டனம்
தலை நிலை ஆசான் தலைமையில் நடத்தலால்.

ஆசான் அவரும் அருகே உறைதலால்
பேசாப் பெருமை பெறுமந் நிலையம்.

ஆசான் இருப்பும் அரியதோர் கலைவளர்
தேசார் இடமாய் திகழ்ந்ததும் கண்டோம்.

பன்மொழி பொலிந்த பயன் தரு ஞானம்
நன் மொழி நூலகம் நனியுள தங்கண்.

ஞானம், தத்துவம், நலந்திகழ் சமயம்
கானம், ஓவியம், கண்மகிழ் சிற்பம்,

போற்றும் பனுவலில் புதியதும் பழையதும்
சாற்றும் நூல்கள் சகலமும் கண்டோம்.

நற்கலை சிறக்கும் நல்லிசைக் கருவிகள்
பொற்கலை வாணியின் பொலிவினைக் காட்டும்.

ஆடற் கடவுள் அருந்திரு வுருவம்
கூடம் நடுவில் கொள்ளை கொள்ளும்.

மற்றபல் உருவமும் மகிழ்தரு நிலையில்
அற்ற நல் உயிர்க்கும் ஆருயிர் ஊக்குமே.

ஆனந்த குமாரர் அருங்கலை நூலகம்
வானந் தவழ்ந்து வந்ததோ இங்கண் ?

அன்றி, அன்னார் அனைய ஓர் அறிஞர்
நின்றிவ் வில்லம் நேர்ந்தனர் ஆமோ ?

நவ ரத்தின மெனும் நல்லா சிரியர்
விவரம் உணர்ந்த வியப்பினர் அவராம்.

இவ்வரும் இல்லத் தினிமைத் தலைமை
செவ்வையில் கொண்டு செழித்தோங் குவரே

அன்னார் இல்லக் கிழத்தியும் அவர்போல்
பொன்னார் நற்கலை போற்றிடும் கற்பினர்,

இன்னிசை வீணையில் கியற்படிப் புடையார்
பொன்னம் பலனார் புதல்வியின் புதல்வியர்

மாகே சுவரியார் மாபண் டிதையார்
ஈகை விருந்தினில் இணையில் லாதார்;

எங்கட் கிவர்கள் இட்ட நல் விருந்தோ
துங்கத் தேவரும் துய்த்திலர் என்கோ!

இந்தப் பண்புடை இல்லற மக்களின்
விந்தைக் கிடனும் விருந்தின ராகி

எழுவர் நாங்களும் இனிதுற நாட்கள்
தழுவி நின்றனம் தாங்கொணு அன்பிலே.

15. தளிகளைக் கண்டதும் அளிதனைப் பெற்றும்.

நாடு கண்டு நலந்திக டறிந்திடல்
ஏடு காணு எழில்கள் அனைத்தும்

பருகிடல் எங்கள் பயண நோக்கு ஆதலின்
ஒருதனி இயங்கியில் ஓடிடல் அமைத்தோம்.

முதல் நாள் யாங்கள் முடித்துக்கொண்ட
இதம் நேர் புனித இடங்களும் பலவே.

உத்திர திக்கில் உவர்க்கடற் பாங்கர்,
சித்திர வரையில் செழுமைகொள் தடத்தில்

முந்நீர் உடனே முகந்து புணரும்
நந்நீர்க் கலப்பில் நனி முழுக் காடி

கிட்டும் பரமனைக் கீரி மலை யனைச்
சொட்டும் அன்பில் சூழ்ந்து பின் உண்டும்,

மாவிட்ட புரத்தில் மாபிணி தீர்த்த
நோய்விட் டகற்றின நூபுரத் தண்ணல்

கழலடி வணங்கியும், காங்கையன் துறையில்
அழலெரி கலங்கரை அகல் விளக் கோர்ந்தும்,

கந்தவனக் கடவில் கலியுக வரதன்
சுந்தரத் தாளினைச் சூட்டிக் கொண்டும்,

வல்லி புரத்து வரமிகு திருமால்
தொல்லரும் திருவடித் தோத்திரம் புனைந்தும்,

தொண்டமான் நதிமேல் தொல்பதி ஒன்றில்
அண்டை வீற் றிருக்கும் அருந்தளி தன்னில்

செல்லச் சன்னிதிச் சீர் தரும் கந்தனை
அல்லல் தீர அடிதனை வணங்கியும்,

அன்றை வெள்ளியில் அடியார் குழாங்கள்
தொன்றுதொட் டுகந்த தொன்மை வழக்கில்

அலகு குத்தி அறைவாய்ப் பூட்டி
உலகு மதித்ததை உகந்து வேட்டு

நம்ப இயலா நாட்டம் கொண்டே
இம்பர் மக்கள் இயல்அன் போர்ந்தோம்.

யாழ்ப்பா ணத்தின் எல்லை அடைந்தே
ஏழ்ப்பால் உண்டி இன்புடன் நுகர்ந்தோம்.

மாலைப் பொழுதில் மகிழ் தீபங்களைச்
சாலை ஓரம் சார்ந்து கண்டும்

இரவினில் நல்லூர் இறைவனைத் தொழுதும்,
பரவின பூசை பண்பினில் போற்றிக்

கந்தப் பெருமான் கருணையந் தாளினை
உந்தும் நெஞ்சில் உணர்ச்சி பொங்கத்

தொழுது விட்டும் தொல்நகர் அடைந்தும்
பழுதொன் றின்றிப் பாங்கினில் அமர்ந்தோம்.

16. சிறிய செயலிலும் நெறியை உணர்ந்தோம்.

சினனஞ் சிறிய செயல்கள் நிலவி
பென்னம் பெரியவை பிணங்கச் செய்யும்.

நீண்ட வாழ்வை நிறுத்தி அளத்தலில்
காண்டற் குரிய களிசெயல் தோன்ரு.

இடையிடை ஒரோர் இமிளழிற் சியதே
கிடையிடை மணிபோல் கிளம்பி மிளிரும்.

பாலை வனத்தில் பரவிடும் எடாரியில்
சோலை ஈஞ்சொரு தொகுதியே எழில்செயும்.

எங்கள் முதல் நாள் எழுந்த சுற்றில்
திங்கட் பொலிவில் தேர்ந்த தொன்றிரு

சின்னச் செய்திகள் செழிப்பைத் தந்து
முன்னம் நிலைத்து முனைந்து நின்றன.

கீரிமலையில் கெழுதகு இருநீர்
ஏரி ஆடி இறைதளி வணங்கி

வெளியே போந்ததும் வேட்டுக் கொணர்ந்த
எளிமை உணவை ஏற்க எண்ணினம்.

அங்கொரு விடுதி அணைந்தோம், ஆனல்
துங்கத் தூய்மை தோன்ற வில்லை.

கிணற்றடிப் பனைக்கீழ் கிட்டிய நீரொடு
மணத்துண வருந்தி மகிழ்ச்சி உற்றேம்.

மாளிகை சூளிகை மதிப்புடன் அமர்ந்தோர்
கூளிகை நிணம் போல் கொட்டிய கையில்

வெட்ட வெளியில் வெறும்பனைக் கீழ்நின்
றெட்டிக் குளிர்ந்ததை உண்ணல் என்னே!

நிலையோ மாறின் நேர்வது அறியோம்,
இலையோ என்கேல் எடுத்துக் காட்டுகள்.

மேலும் கலங்கரை விளக்கம் கண்டுச்
சாலப் படங்கள் சார்ந்தே எடுத்தபின்

அடுத்த கடைக்கண் அருந்தியே தேநீர்
விடுத்தனம் இயங்கியை விரைவில் முன்னர்.

புகைப்படப் பெட்டி போகையில் காண்கிலம்.
நகைமுகம் வீழ்ந்தது நலிந்தார் முதல்வர்.

உடனே திரும்பி ஓட்டிப் பார்த்தோம்;
கடையாள் சிங்களன் களிப்பில் தந்தான்.

இல்லையென் றெளித்திடில் யாதும் செய்திலம்.
நல்லை அவன் குணம், நன்றி செலுத்தினம்.

பயணம் தன்னில் பழகின பேரும்
வயணம் இன்றி மறத்தல் கூடும்.

சீறின் சினக்கின் சேரும் கவலை,
ஆறி அமரின் அமுததே ஆகும்.

17. நூற்ருண்டு விழாவைப் போற்றியாம் மகிழ்ந்தோம்.

ஈசல் போல எழும்பிடும் மக்கள்
ஊசல் ஆடி உயிர்விட் டழிவர்.

ஆயிர மாயிரம் ஆண்பெண் பிறவிகள்
போயின வழிகளைப் போற்றினர் எவரே?

நூரு யிரமாய் நுவலும் வாழ்வினில்
பேருய் நின்ருர் பெயரும் எத்தனை?

நூற்ருண் டளவில் நூற்றுச் சொல்லின்
கூற்ருல் செகுத்த குடிகளில் எத்தனை

பேர்கள் நினைவில் பெருமையில் நின்றே
ஊர்கள் போற்ற உரிமை பெற்ருர்!

ஓரிரு பெயரே உண்மை உயர்வில்
சீரிடு புகழில் செழித்தார் என்க.

இலங்கை முழுதும் எடுத்தா ராயின்
அலங்கலே அணியும் அருமையில் திகழ்ந்தார்

யாழ்ப்பா ணத்தின் இயற்றமிழ்த் திருமகன்
ஊழ்ப்பால் சிறந்த உத்தம வள்ளலே.

வீரர் பொன்னம்பல விராம நாதன்
தீரர் மெய்காத்த தீன தயாளர்

ஒருநூற் ருண்டாய் உலகினர் போற்றிய
திருநீ ருண்ட திரள்வாழ் வினரே.

அன்னூர்ப் பெருநாள் அறிந்த தமிழர்
பொன்னூர் விழாவாய்ப் போற்றி நின்றூர்.

அவர்திரு வுருவிற்கு ஆற்றினர் திருவுலா,
தவத்திரு மகிழ்வில் தாங்கினர் பவனி.

திருநெல் வேலித் திகழ்கல் லூரியில்
தருநன் கமைந்த தண்கா வணத்தில்

மாபெரும் சென்னை மன்றத் தலைவர்
பேர்பெரும் தலைமையில் பேணி அமரப்

பன்மொழிப் புலவர் பாராட் டளிக்க
நன்மொழி இயம்பி நடத்தினர் பேரவை.

கல்விச் செழிப்பும் களிநாட் டன்பும்
செல்வத் திரட்டும் சேவையின் முனைப்பும்

இதயத் தீரமும் இயற்றனி வீரமும்
உதயத் திறத்தில் உற்றிடும் குணமும்

ஒவ்வொன் ருக உரைத்த வகையில்
தெவ்வரும் ஏற்றுத் தெரித்திடப் புகழைப்

பலபெயர் பெரியார் பகன்றனர் அன்றே.
நலமிதன் மேலும் நாட்டம் உண்டோ,

எனப்புகன்றிடவே எழிலவை நடக்க
மனம்பொலி வடைந்து மகிழ்ந்தனம் யாமே.

18. தமிழ்விழா வயர்ந்தோம் அமிழ்தெலாம் உண்டோம்.

கடல்கள் இரண்டும் கலந்தார்த் தாற்போல்
அடல் கொள் இருதமிழ் அகங்கள் இணைந்தவோ,

அப்பர் சம்பந்தர் அந்நாள் கூடிட
ஒப்ப அவரவர் உடனடியார் குழு

செப்ப ஒண்ணுச் செழிப்பிலு முவப்பிலும்
எப்படி கலந்தார் என்பதை ஒத்ததோ,

கங்கையும் யமுனையும் கலந்திடும் சீரிலே
தங்கைத் தமிழினைத் தமக்கை கண்டளோ,

இலங்கைத் தமிழரை இந்திய தமிழர்
கலங்கரை அன்பில் கலந்து களித்தே

இருபெரும் உறவுகள் இனிதுறக் கூடிட
திருபெரும் தமிழ்விழா தேர்ந்தனர் என்கோ!

ஈழநன் ருட்டு எழிற்கலை எல்லைகள்
சூழலூர் இடத்தில் சுடர்விட் டோங்கின்

கடற்கரை மட்டக் களப்பொடு கதிரை
அடற்கரை மாத்தரை அகநகர் கண்டி

கொழும்பொடு மன்னர் குழுகுழு வாக
எழும்பி வந்தன எழிலவை காண.

இலங்கைத் தமிழர் எல்லையில் கூடி
அலங்கலை இட்டார் அன்னைத் தமிழ்க்கே.

தென்றமிழ் நாட்டில் தெரிந்தபற் பகுதிகள்
நின்றெழு மக்கள் நிரம்ப வந்தனர்.

பரமே சுரனார் பயிற்கலா சாலைச்
சிரமோ அலைகடல் சீரில் செழித்தது.

நற்கலைக் கூடம் நகைத்தது ஒருபால்,
முற்கலை அறிவு முகிழ்ந்தது மறுபால்;

நல்லுரை யகங்கள் நாடின ஒருபால்,
செல்லுறு சகடுகள் செழித்தன மறுபால்;

காவணத்திடையே களித்தனர் அறிஞர்
ஆவணம் காட்டி அருள் மொழி இயம்பினர்.

திருமறை ஓதுவார் தேர்ந்தனர் நல்லிசை
அருமணம் தோற்றின ஆட்டப் பொம்மைகள்.

இன்னிசைச் செல்வம் இழுந்தது இரவெலாம்
முன்னிசைப் பெரியோர் மொழிந்தனர் கலையெலாம் ;

இயலிசை நாடகம் எழிலொடு துலங்க
கயலிணைக் கண்ணியர் காட்டினர் ஆர்வம்.

மூன்றுநன் னாட்கள் முத்தமிழ்ச் செல்வம்
தோன்றிப் பொலிந்தது தூயயாழ்ப் பாணமே.

மங்கையர் பகுதி மகிழ்வுடன் ஏற்றது.
தங்கையில் கடமையைத் தழைத்தது ஆர்வம்!

19. பெரியார் இணக்கம் உரியோம் ஆனேம்.

நான்காம் தமிழ் விழா நன்கு நடந்ததில்
அங்காங் கிருந்த அன்பர் புகழ

அடுத்த விழாவை ஆப்பிரிக் காவினர்
தடுத்தாட் கொள்ளத் தகவல் தந்தார்.

மற்றும் பல்லோர் மன்ரு டியதில்
பெற்றுக் கொளலாம் பெருமை என்றனர்.

பேச்சுப் பேசிய பெரியார் குழுவோ
இச்சுக் குரலும் இசுகுசு மழலையும்

வாய்க்கப் பெற்றும் வளமை குன்ருப்
போக்கை நகைதனில் போற்றி நின்றது.

கொச்சைத் தமிழும் கொழுமைத் தமிழும்
மெச்சும் வகையில் மீரு திருந்தது.

சென்னைப் பல்கலைச் செந்தமிழ் ஆசான்
முன்னை வராமல் மோகத் திருந்து,

தவழ்ந்து வந்து "தனிப் பெருந் தமிழோ
எவர்க்கும் காத்திரா" தெனச் சொலிப் பிழைத்தார்.

என்மொழி நிகழ்ச்சியில் இல்லா திருந்தும்
நன்மொழி சிலசொல நாட்டம் தந்தனர்.

ஈழநன் ஞடோ இயற்றமிழ் நாட்டொடு
கூழுடை உறவும் கொளல் நன் றென்றேன்.

இந்த முறையோ யாழ்ப்பா ணத்தில்
பந்தம் கிடைத்தது பலபேர் அறிமுகம்.

'சும்மா இரு' எனும் சுவாமிகள் ஒருவர்
பெம்மான் அருளில் பிறங்கிடும் முதியோர்

யூரோப் பாவின் யூதத் துறவியர்
ஆரா அன்பில் ஆனுர் நண்பர்.

இலக்கியத் தமிழில் எங்கெங் கச்சொல்
நிலைக்கொளல் உண்டென நேரில் கேட்டுக்

குறித்துக் கொண்டார், கூடிய பொருளின்
நெறித்தன் மையினை நிரப்பிக் கொண்டார்.

யோக சுவாமிகள் யூபக் குடிலுக்
கேகக அவர்தம் எழில்சொல் பருகினம்.

அரிய மொழிகள் அணுகிப் பெறலில்
உரிய ஆசிகள் உற்று மகிழ்ந்தோம்.

இலங்கை முற்றும் இயங்கியைக் கொண்டே
துலங்கிடும் காட்சி துய்க்க எண்ணி

ஏற்பா டனைத்தும் எளிதில் பெறலில்
காற்பால் கவலை கழித்துக் கொண்டோம்.

நல்லூர்க் கந்தர் நற்ருள் பணிந்துப்
பல்லூர் சுற்றும் பயணம் தொடங்கினோம்.

20. தென்முகப் பயணம் நன்முகம் கொண்டோம்.

வண்டிப் பாதை வழவழப் புற்றுச்
சண்டித் தனமாய்ச் சகமார்க் கத்தே

புகைரதப் பாதை பொலிந்திட அதன் துணைத்
தகைவுடன் ஓடிச் சமமாய்ச் செலுமே.

பாதையின் இருபால் பனையும் தெங்கும்
ஓதையு மின்றி உயர்ந்தோங் கிடுமே.

அடிக்கடி ஊர்கள் அலைமோ திட்டுப்
படிப்படி யாகப் படர்ந்தெதிர் படுமே.

ஊரார் சிறார்கள் உகந்திடும் பள்ளிகள்
தேரா நிற்கும் தென்னைத் தொழும் பிடை

வயல்கள் இடையிடை வளம்செய் தமர,
அயல்களி லெல்லாம் அருவிநீர் ஓடும்.

ஓரோ ரிடத்தும் உலர்வாய் நனைக்க
நீரூர் தேநீர் நிரம்பக் கிடைக்கும்.

தாழ்நில மாகத் தடமெலாம் சென்றும்
யாழ்நிலம் யானை இரவு மட்டும்

அதன்பிற கீழத் தகல்நிலம் பரவித்
துதைவனம் எங்கும் தோற்றம் தருமே.

இருபுறம் வான்தோய் இணையிலா பைம்பொழில்
பெருகிட விலங்கினம் பிறங்கிட வளரும்.

பிள்ளையார் கோயிலும் பித்திகை மடமும்
அள்ளையூர் கேணியும் அமைவிடம் கண்டோம்.

சிங்களர் யாத்திரை செல்சக டருகே
தங்கினம், தொழுதனம், தளிகையும் உண்டனம்.

மேலும் செல்ல மெய்த்தரு வொன்றில்
சாலைப் பிள்ளையார் சார்புரு கண்டோம்.

வண்டி ஓட்டி வழங்குமோர் கதையை
விண்டனன், அதுவோ வியப்பைத் தந்தது.

இயற்கை உருவம் எனினும் வஞ்சனைச்
செயற்கை வெளிவரச் செய்ததஃ தென்றான்.

ஞாயிறு மேற்பால் நழுவத் தொடங்கப்
போயினம் அனுராத புரத்தின் பாங்கர்.

விவேகா நந்தர் வியன் பெயர்ப் பள்ளியில்
செவேலென யாங்கள் செழிப்புடன் தங்கியே

நன்னீ ராடி நறுமுண வருந்தித்
தொன்னீர் பௌத்தத் தூய் நிலம் சுற்றிப்

பிற்பகல் தூபிகள் பெருவனம் ஏரிகள்
எற்படும் வரையில் இயங்கினம் முற்றும்.

ஈசுர முனியும் இறைவன் கோயிலும்
தேசுறச் சுற்றித் தெளிந்தனம் பலவும்.

21. வழியில் அற்புதம் பொழிலில் கண்டோம்.

குணக்கு வெளுக்கக் குளிர்கால் செழிக்கக்
கணக்கு முடித்துக் கதிரவன் எழுமுனம்

கிழக்கு நோக்கிடக் கிளம்பும் ஒளிதனை
வழக்கு தொடுத்து வரவேற் றினமே.

ஐந்து கற்கள் அகமகிழ்ந் தோடி
மைந்தன் மிகிந்தன் மலைத்தொடர் மீதே

போதிக் கிளையால் புதுமதி விடுத்து
ஆதி அரசனை ஆற்றுப் படுத்திப்

புத்த சமயம் புகுத்தின தலத்தின்
சத்தியைத் தெளிந்துச் சரிவுகள் ஏறிச்

சைத்தியம் தூபிகள் சகலமும் தொழுதுத்
துய்த்துப் பானமும் தொடர்ந்தோம் பயணம்.

இருண்ட வனத்தின் இடைசெல் பாதையில்
மருண்ட கடுவன் மந்தியைத் தழுவிச்

சகட்டைக் கண்டு சடிதியில் தருக்களின்
தகட்டைப் பிடித்துத் தாவும் காட்சி

கண்டும் மகிழ்ந்தும் கல்பல தாண்டி,
அண்டர் போற்றும் அருமை வெப்பக்

கிணற்றிடை வெந்நீர் கிளம்ப ஆடி
உணர்த்திய களிப்பில் உவந்து நின்றோம்.

கேணிகள் கன்னியா கிளம்புநீர் ஆடிப்
பேணிய களிப்பில் பெரிதுவந் தமர்ந்தோம்.

இராவணன் அன்னைக் கிமைச் சடங்கைப்
பராவின கிணறெனப் பகரும் புராணம்.

இயற்கை அற்புதத் தேழை அறிவினர்
செயற்கைக் கதையை சேர்த்தின ததுவே.

குன்றுகள் இடையே குழிகள் வாய்ந்து
நின்றிடா வகையில் நிலத்தடிச் சூடு

பொங்கி மேலே பொழியும் குதிநீர்
இங்கு தோன்றிற் றிதிலோர் வியப்பிலை.

வடமலைப் பாங்கர் வதரித் தளியிடை
திடமென வீழும் திரள்பனி நடுவில்

சோற்றையும் சமைக்கும் சூட்டைக் கொண்ட
ஊற்றுநீர்ச் சுனைகள் உண்டாம், வியப்பில்லை.

இந்த இயற்கையின் ஏழு வாவிகள்
நந்தம் குளிப்பில் நாட்டம் கண்டுச்

சிங்களர் விடுதிகள் சீருடன் அமைத்தே
அங்கு நல் உணவை அருந்தத் தருவர்.

இயற்கை இடங்களை யூரோப் பியர்கள்
செயற்கை வாணிபம் செழிக்க விடல்போல்

சிங்களர் பணத்தைத் திரட்டுவர், ஆனால்
எங்களில் தமிழர் இமியும் செய்வரோ?

22. புனிதப் பாறைப் பொலிவடி தாழ்ந்தோம்.

வெப்ப ஊற்றினை விட்டுச் சகடு
செப்ப ஒண்ணுச் சீருடைக் கீழ்க்கரை

நடுப்பகற் பொழுதில் நாடி ஓடி
எடுப்பினில் கோணத் தெழில்மலை சேர்ந்தது.

இராம கிருட்டினர் இயற்றமிழ்ச் சாலையில்
குராமரத் தயலறை குந்தித் தங்கினம்.

நடராச ரடிகள் நல்வர வளிக்கத்
தொடராசி பெற்றுத் தூயுண வருந்தினம்.

பிற்பகல் பள்ளிப் பிள்ளைகட் கோருரை
பற்பல முறைதனில் பகர்ந்தேன் யானும்.

மாலைப் பொழுதில் மலையரண் நுழைந்து
சோலைம் மானினம் சூழ்தலை வியந்துக்

கடற்கண் நீண்ட கரும்பெரும் பாறை
உடற்கண் நடுக்கம் உறும்வணம் குனிந்துக்

குளக்கோட்டன் கட்டின கோணேசர் உறையும்
வளக்கோட்டைக் கோயில் வான்றோய் தலத்தைத்

தொழுது வியந்து தொடுத்தனம் வணக்கம்.
பழுது செய்த பறங்கியர் செயலைக்

கண்டனம் செய்துக் கண்ணீர் ததும்ப
விண்டனம் தலத்தை விட்டே ஊர்ப்பால்.

கோட்டையின் வெளியே குளிர்க்கட லிடையே
நாட்டின சாரம் நடுவே குதித்து

நீந்திடும் வெள்ளையர் நிலையைக் கண்டு
தாழ்ந்திட நின்றனம் தகாத பொறுமையில்.

நமது வீரர் நாட்டம் இங்ஙனம்
நமது நாட்டிடை இலையே என்றனம்.

உலகில் பெரிய உவர்க்கடற் றுறைமுகம்
இலகி இருப்பதை இறங்கிக் கண்டோம்.

மலைத்தொடர் சுற்றி மறைந்திடும் குடாக்கள்
அலைத்திடர் இடையில் அமைந்த நாவாய்

உயர்ந்தெழு வானொலி உரைசெய் கம்பிகள்
அயர்ந்திடும் எண்ணெய் அமர்கொப் பரைகள்

இவையெலாம் கண்டும் எழில்படம் பிடித்தும்
சுவையெலாம் துய்த்தும் சுடர்முனைத் தொடரில்

போர்க்கா லத்தில் பொங்கின வெடியால்
வேர்க்கால் மட்டும் விபத்துக் கிடமாய்

நூறு யிரத்தில் நொருங்கிப் பாழ்பட
சீறு நின்ற சிறுஜப் பானிடக்

கடுஞ்செயல் இடத்தைக் கண்டும் ஊர்க்கண்
கொடுஞ்செயல் இலங்கணிக் கோயில் சார்ந்தேம்.

23. தம்பளைக் குகையொடு சீகிரி கண்டோம்.

பழமைப் பெருமையைப் பார்த்து மகிழும்
கிழமை இதோ வெனக் கிளம்பி, இளங்கதிர்

எங்கள் முகத்தில் இனிய முத்தம்
தங்கத் தந்திடும் தண்மை விடியலில்.

அடிக்கடி மேடுகள் அடிமரத் தொகுதிகள்
தடித்தன மாகத் தடுத்தன கதிரினை.

பத்துக் கற்கள் பரவின பின்னர்
முத்துப் பனிநீர் முகிழ்ந்ததோர் பெருங்குளம்.

ஆடக சௌந்தரி அமைந்த கண்டழாய்
காடகத் திடையே கண்டனம் பரக்க,

பெண்கள் கட்டையும் பேணிக் கண்டு
விண்கள் வரை படர் வியன்நீர் பார்த்தோம்.

தம்பளைக் குன்றடி தமியங்கியை விட்டு,
உம்பரும் மெச்சிடும் உயர் ஓவியங்கள்

கூடிய பாறைக் குகைகளுள் நுழைந்து,
நாடிய புத்தர் நல்லுரு வங்களைக்

கண்டு வணங்கிக் களித்து வியந்து,
'உண்டு கொல்லோ உம்பர் நாட்டினும்

இவ்வகைச் சிற்பம்' என்று வியந்து,
செவ்வணம் இதயம் செழிக்க நின்றனம்.

மஞ்சட் பூச்சினில் மலிந்தபல் மேனிகட்
கஞ்சுனைத் தாமரை அடித்தாள் சேர்த்தித்,

தொழுது திரும்பித் தொலைக்கல் ஓடிப்,
பழுது கூறாப் பழமைச் சீய்கிரி

மலையரண் ஏறி, மா அரும் ஓவியம்
தலையரண் பக்கல் தண்மையில் வியந்துக்,

காசிபன் கட்டிய கண்திகை மதிலும்
கூசிடும் உயர்வில் கோட்டை வாயிலும்

சியத் தாள்களின் சீரிய வடிவும்
தீயச் செயலோன் தீட்டிய தெல்லாம்

வாயங் காத்து வனப்புகள் மெச்சிப்,
போயங் கிருந்துப் போற்றித் திரும்பினம்.

உயர இருக்கையில் ஊர்இரு நாட்டின்
நயமும் நாட்டமும் நாடிப் பின்னர்

மின்னேரிவாவி மேவிப் பாதையில்
பன்னெறி வளமும் பரவிய வாவிகள்

கடந்தும், புலனரிக் கானல் நகரம்
அடர்ந்த சோலையும் அளவிலா ஏரியும்

அருகில் பண்டை அருஞ்சின் னங்கள்
பெருகிக் கிடக்கப் பேணி அடைந்தனம்.

24. பழநகர் புலனரிப் பழமை நினைந்தோம்.

பகு பராக் கிரம பாதுச் சமுத்திரம்
வெகுபரா மரிப்போடு வியப்பில் அமர,

அதன்கரை மீதோர் அழகிய பவனம்
மதன்கன வமர்ந்த மாளிகை போல்வது.

புலனரி படரும் புண்ணிய மக்கள்
நலனது துய்க்க நாடுவர் அதன்பால்.

மதகிடை உதிக்கும் மதம்பெறு கால்வாய்
மிதமினை மீறும் மிளிர்ஆ றெருக்கும்.

சுற்றிலும் நன்செய் சூழ்ந்து பாய்ந்து
முற்றிலும் பொன்மணி முளைப்பதில் மிளிரும்.

இந்தப் பெருநீர் ஏரியைப் படைத்த
சிந்தை கமழும் சீரிய மன்னன்

பராக்கிரம பாகுப் படைவெல் மார்பன்.
தராதலம் ஆண்டு தண்வெண் குடைக்கீழ்

எண்ணூ ருண்டுகள் எண்ணம் ஆமுன்
கண்ணேட் டத்தில் காட்டினன் செங்கோல்.

இன்று அவன் உருவம் எழில்கல் அதனில்
நின்று விளங்கிடும் நினைவினை ஊட்டியே.

அப்பெரு மன்னன் ஆற்றிய நற்செயல்
எப்பெரு மன்னன் இயற்றினன் கொல்லோ ?

மன்னவன் தலைநகர் மாண்புறு வகையில்
உன்னிய திருத்தம் ஊக்கிடும் முன்னம்.

இராஜ ராஜனும் இராஜேந்திரனும்
வியாஜ மொன்றினை விரும்பிக்கொண்டுத்

தமிழர்தம் பண்பினைத் தாங்கி வளர்த்தி
அமிழ்த மழையை ஆங்கண் பொழிந்துச்

சைவத் திருத்தளி சார்கல் வெட்டுடன்
மெய்வந் திடவே மேல்மேல் தந்தனர்.

அந்த நாளில் அழகிய ஈழம்
சொந்த நாடெனச் சூழ்ந்தது தமிழகம்.

புலனரிப் பழநகர் புதுமை பூத்து
நலனனி பெற்று நாடிடும் பொலிவினை.

கடக்க இயலாக் கானகத் துட்பால்
அடக்கம் உற்றே அமைந்த நகரை

எவ்வண் சோழர் எதிர்ப்புகள் வென்றுச்
செவ்வண் கொண்டனர் செப்ப இயலுமோ ?

சோழசாம் பிராச்சியம் சொலிப்பினை உற்று
வாழையடி வாழையில் வளம் பெற்றூர்கலி

தாண்டி வாகையைத் தரித்து விளங்கி
ஆண்டுள சிறப்பை யாரே அளந்தார் ?

25. புலனரிச் சின்னமும் பொன்விழா மகிழ்ந்தோம்.

உழவியல் பண்ணைக் குரிய தலைவர்
மழவர் தலைமை வகிக்கும் நிபுணர்

சதாசிவப் பெயரினர் சைத்யோ பசாரம்
உதார குணமுற உதவினர் எமக்கே.

அன்னூர் இனிய அகக்கிழத் தியரும்
பொன்னூர் நலமுறப் புரிந்தனர் இன்மொழி.

முன்பின் அறிமுகம் மூளா திருந்தும்
அன்பின் உறவுகொண் டாற்றினர் வரவை.

நன்னீ ராடி நல்விருந் தயர்ந்ததும்,
மன்னர் பண்டை மாளிகை இடங்களும்

துறவியர் போற்றும் தூபா ராமமும்
அறவியர் வசிக்கும் அமரா ராமமும்

கல்விகாரம் காட்டும் காட்சியில்
பல்விதத்தில் பரவும் உருக்களில்

'நின்றான் இருந்தான் நீண்டு கிடந்தான்'
என்றே வியங்கள் எடுத்த நிலைகளும்

போதி நீழல் புனிதன் தாள்களில்
ஆதிக் கமலம் அருச்சித்திட்டும்

எல்லாச் சின்னமும் எழிலுறக் கண்டும்
பொல்லாப் பின்றிப் போற்றினம் யாமே.

புத்தர் மடத்தில் பூருவ சரிதை
ஒத்த நிலையில் ஓவியத் தெழுதி

விசையன் முதலாய் விக்கலன் இறுதியாய்
திசையர் மன்னவர் தேதியும் செயலும்

அழகிய ஓவியத் தாற்றி யிருக்க
எழுதிய அருமையை யாங்கள் உணர்ந்தோம்.

இருட்டு வந்தது எங்கும் மின்னொளி
திரட்டிப் பரப்பினர் தினகரன் செயலில்.

பருத்த காவணப் பாங்கர்ப் பெருவிழா
நிருத்த முறையில் நெறியிசை இயங்கும்.

பௌத்தத் துறவிகள் பண்ணொடு திருமுறை
சுவைத்திட எழுப்பச் சூழ்ந்தனர் சடங்குகள்.

ஆயிர மாயிரம் அன்புடைக் குழாங்கள்
சேயுடன் தாயுடன் சிறந்த உடையில்

சுற்றி வீற்றிருந்த சூழ்நிலை க்ண்டும்
உற்று நோக்கி உவப்புற்றிருந்தனர்.

இதுபோல் நல்விழா எமக்கு வாய்த்த
விதி போற்றிட்டு வெற்றியின் குறியாய்

இலங்கை பெற்ற எழிற்சி உரிமை
துலங்கிடக் கண்டோம் தொடர்ந்தனம் விடுதியே.

26. கீழ்க்கரை நாட்டின் கெழுதகை தேர்ந்தோம்.

புலனரி விட்டோம் புலர்ந்த பொழுதே,
நலனது தந்திடும் நகைசெயும் இளவெயில்.

இதுவரை கண்ட எழில்வனத் தடர்த்தி
குதுகலம் மறையக் குறைந்து நின்றது.

குத்துச் செடிமரம் கூடிய கானல்
சத்துக் குறைய சலிப்பே தந்தது.

இருப்புப் பாதை எமக்குத் துணையாய்
விருப்பஃ தின்றி வெறுமை செய்தது.

வண்டிப் பாதையும் வளமை குன்றித்
துண்டுக் கல்லொடு துதைநீர் படிந்தது.

வாழைச் சேனை வந்ததும், வளமுறும்
கிழைக் கடலடி கிட்டினம்; அதன்பின்

பாதை தெற்கே படர்ந்தது; தமிழின்
ஓதை கேட்டனம் உற்ரோம் தமிழகம்.

கீழ்க்கரை நாடு கெழுதகைத் தமிழர்
வாழ்க்கை மலிந்த வளநா டாகும்.

தென்னை மா பலா திரண்டிடும் காட்சி
முன்னைத் தமிழின் முயற்சியைக் காட்டும்.

மக்கட் தொகுதியும் மாறுபா டளிக்கும்.
பக்கம் எங்கும் பழமை தோற்றும்,

சிற்றண் டிக்குடிச் சித்தன் கோயில்
நற்ரு மரைபோல் நாட்டம் அளித்தது.

சுற்று மண்டபம் சூழும் தூண்களில்
முற்றும் அறுபான் மூவரின் திருவுரு

ஈழநன் ஞட்டில் இதுபோல் அடியார்த்
தோழமைக் காட்சி தோன்றின தில்லை.

பேர்பெறும் கந்தப் பிரானை வணங்கிக்
கார்பெறும் மட்டக் களப்பினைக் குறுகினம்.

குடிவளம் பெற்ற கோட்டையும் பேட்டையும்
முடிவளம் பெற்று மொய்த்ததவ் வளநகர்.

பண்பாடு முற்றும் பழந்தமிழ் மயமே.
மண்பா டதுவும் மாண்வளம் காட்டும்.

கல்லடி உப்போடைக் கழியைக் கடந்து
செல்லவும் வெண்மனல் செழிப்பறக் காணும்

விபுலா நந்தர் விரும்பிப் படைத்த
சிவாநந்தர் செழுஞ் சாலையில் தங்கி

வாவிநீர் குளித்து வளவுண வருந்தித்
தாவியே சென்றனம் தற்சக டதனில்.

காரைத் தீவில் கனமிகும் அடிகள்
சீரைப் புரக்கும் செழிப்பது காணவே.

27. அடிகள் பிறப்பிடக் கொடிநிலை கண்டோம்.

தென்னம் பொழிலிடைத் தெருக்கள் திரண்டு
நன்னர் குடிவளம் நாட்டிடும் காரையில்

எங்கட் கரும் விருந்து ஈந்துப சரித்தார்
அங்கண் விபுலர்க்கு அக்கை மகனார்.

அடிகள் அமைத்த ஆண்பெண் பள்ளிகள்
கொடிகொண் டுறவினர் கூட்டுவர் பெருக்கியே.

கல்வித் துறையில் கண்ணூர் சேவை
செல்வச் சிறப்பில் செய்து வருவார்.

தாயகத் திற்குத் தக்க சேவையை
ஓய்வித மாக உதவுமக் குடும்பம்.

விபுலா னந்தர் வியன்செயல் கண்டு
பிபிலார் தருவினில் பேரொலி கேட்டனம்.

காரைத் தீவினில் கண்ணகிக் கோயிலும்
சீரைக் காட்டும் சிலம்பின் பழைமையை.

சுற்றிலும் நீர்வளம் சொக்கிப் படர
முற்றிலும் மருதம் முனைப்பே தோன்றும்.

வழியெலாம் தென்னையும வயலும் செழிக்க
பழியிலாத் தொழிலில் பாரார் விளங்குவர்.

சோனகர் சிற்சில சோலையுள் வாழ்வதில்
மீனவற் கியும் மென்மை உணவே.

கோக்குடி மரத்தைக் குறைக்கலோர் வேடன்
நற்குடி கொள்கிற நாட்டம் தோற்ற

அரிய தலமாய் அங்கொரு கோயில்
பெரிய கழிக்கரை பேணிட எழும்பிடும்.

'பொன்னி நாட்டுப் புனல் தளிக் கோகுடி
என்ன இங்கும் எழுந்ததோ' என்றேன்.

ஓடை இரண்டினை உவப்புறத் தாண்டினம்
கூடை மீன் பிடிக் குடிகளைக் கண்டனம்.

மட்டக் களப்பு மறுபடி அடையவே,
இட்டப் படிக்கெனை இட்டுக் கொண்டுபோய்

'கழுவிற் கேற்ற' கதையினன் இவனென
உழுவில் அன்பினில் உறுத்தினர் அவைக்கண்.

ஊர்கோ லத்துடன் ஓரவை நிறுவி
சீர்கோ லத்தில் செலுத்தினர் வரவை.

நால்வகைத் துறைகளும் நாட்டில் உளதெனச்
சால்புடன் புகழ்ந்தார் சான்றோர் ஒருவர்.

இரவினில் தெருக்கூத் தியற்றி எனக்குப்
பரவின முகமனைப் பாராட் டினரால்.

இந்தநன் முறையில் எழிலெலாம் பருகிடத்
தந்தனர் அலுவலார் தட்சிண மூர்த்திகள்.

28. நீரர மகளிர் சீரிசை வேட்டோம்.

யாழ்நூல் என்றோர் எழில் நூல் தன்னில்
வாழ் நூல் எதிலும் வழங்கா அரும்பொருள்

தேடிக் கொடுத்த திருவரு ளாளர்
பாடிக் காட்டின பண்பெவர் அறியார்?

கல்லடி ஓடையில் கலங்காப் பரப்பில்
மெல்லடி தோய்ந்து மிதந்திடப் படகில்

நிறைமதி நாளில் நீரர மகளிர்
திரை பெரு நிலையில் தேம்படு பாடல்

எவ்வித மகிழ்ச்சியை இயற்றின தென்று
திவ்விய நூலில் தெரிவித் துளரே.

அன்ன இன்னிசைக் கடையாளமாகச்
சின்னஞ் சிறிய சிரமைத் துள்ளார்.

"நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்.

சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொ டாடுவோம்.

நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரொ டாடுவோம்."

நிசரி காகமா மபத நீநிசா
சரிக மாபதா பதநி சாசரி
ரிகம பாபதா தநிச ரீரிகா
கமப தாதநீ நிசரி காமமா."

என்ற இன்னிசை எழிலர மகளிர்
இன்னும் பாடுவர் என்றருள் செய்துளார்.

மேனாட் டவரும் மிகவியப் புடனே
ஊனார் பாட்டின் உண்மை அறிந்திலர்.

மீன்கள் பாடின மேன்மை இசையென
ஊன்களி உரைகளும் உலகோர் சொல்வர்.

எங்கள் நண்பர் இதனை அறிந்திடத்
துங்கநீர் ஓடைபால் தொடர்ந்து நின்றனர்.

ஆனால் அவர்கள் அருந்திலர் எதையும்
போன பொழுதோ பூர்ணிமை யன்றால்

இன்னிசை கேளா தெமதிடம் வந்து
நன்னிசி அதனில் நற்கன வேற்றார்.

அந்த வியப்பினை அறிந்த யானே
சொந்த முறைதனில் சூட்டினேன் பாவும்.

கட்டுரை ஒன்றும் கழறி யுள்ளேன்;
விட்டதை இங்கு விளித்தெழு திடுவேன்.

"வனிதை மார்பினர் வளங்கருங் குழலினர்
இனிமை முகத்தினர் இன்னிசை நாவினர்

இடைக்கீழ் மீனினத் திரட்டை வாலினர்
உடைக்கோர் அமைதியும் உருஅம் மணத்தினர்

அன்னவர் நீந்திட ஆடலில் படிந்திட
பொன்னமர் மேனியில் புனலிடை அசைந்திடக்

கூந்தலும் கரங்களும் கூடிப் படர்ந்திடும்
காந்தியர் அவர்களே கவின் அர மகளிராம்.''

29, தென்பால் இயல்வளம் தெளிந்திடச் சென்ருேம்.

குணக் கடலோரம் குளிரிளங் காலையில்
மணற்கரை மீது மாண்புறத் தென்றிசை

வண்சக டேறி வளர்த்தனம் பயணம்.
திண்சமர்க் குமரனுர் திருக்கோ யிலின்கண்

நீல மயில்மேல் நின்றருள் வள்ளலைக்
கோலப் பணிவுடன் குலாவினம் வணக்கம்.

பின்னும், தென்றிசை பேணிப் புத்துவில்
மன்னும் வெண்மணல் மாண்திடர் மீது

விடுதியொன் றங்கு விருந்தினர் அயர
உடுதிகழ்ந் தன்ன உவப்புடன் இருக்க,

அதனுழை சென்றங் கரியசிற் றுண்டி
பதனுளக் கண்டுப் பருகினம்; கடலிடைத்

தொலைவிலாபோர் நாவாய் தொடர்வது கண்டங்
கலையது வீசவும் அரும்படம் எடுத்தனம்.

புத்துவில் பாங்கர் போந்திடும் பாதை
மெத்தநல் பசப்புற மேற்பால் திரும்பிடும்.

ஈண்டு வேருய் இயற்கை மாறி
மீண்டும் வளங்கள் மேன்மேல் படரும்.

அடர்ந்த மரங்கள் அலையலை யாகப்
படர்ந்து செல்லும் பார்த்த இடமெலாம்.

கீரியும் உடும்பும் கிண்டல் செய் குரங்கும்
தூரியில் ஆடிடத் தோன்றிடும், கரியொடு

பெருமரம் தூக்கிடும் பேழ் வயிற் றுனைகள்
ஒருமருங் கினிலே உறைந்தன ஏழாய்.

பாகன் மார்கள் பணத்திற் காகத்
தாகம் கொண்டனர் தருபடம் பிடிப்பதில்.

குட்டி யானைக் குடைவனப் பாதையை
விட்டுச் சென்றோம் வெள்ளை வாயல்.

வெண்ணெயும ரொட்டியும் வெளிப்புறம் அருந்திக்
கண்ணைப் பிசைந்த கடைசித் தம்பியைத்,

தேற்றிப் பின்னர் தெற்கே திரும்பிய
வாற்றில் திசைமா ராமம் அடைந்தோம்.

அரும்பெரும் ஏரியில் ஆற்றினம் களைப்பைச்,
சுரும்பினம் படர்ந்து சும்மெனும் வனத்தே.

புனிதத் தலத்தினில் பூவொடு பணிய
இனிதெம் இதயம் இழுத்துச் சென்றது.

உலகம் போற்றும் உறுதியைத் தரும்தலம்,
திலகப் புனிதம் தோர்ந்திடும் பெருந்தலம்,

கதிர்கா மத்தின் காட்சியை அன்றே
எதிர்கா ணாத இனிமையில் பெற்றோம்.

30. கதிர்கா மத்துக் கனிநிழல் சேர்ந்தோம்.

'வனமுறை வேடன் அருளிய பூசை
மகிழ்கதிர் காமம்' எனத்திருப் புகழில்

அருண கிரிநாதர் அருளிய பான்மையில்,
கருணை வள்ளல் கந்தப் பெருமான்

தெய்வக் குஞ்சரம் தீந்தமிழ் வள்ளியும்
சைவம் திகழச் சார்ந்தரு கமரக்,

கதிரை மலையின் கவின்சார் பிணிலே
எதிரொன் றில்லா இனியநீர்ப் பெருக்கின்

மாணிக்க கங்கை மாண்பினில் ஓடக்
காணிக்கை தந்துக் கணக்கிலா அடியவர்

வேண்டுதல் புரிந்து வியந்திடும் வகையில்,
ஆண்டுகள் ஆண்டுகள் அருள்பெற வேண்டிக்,

கால் நடை யாகவும் காவடி எடுத்தும்
பால் நனி தந்தும் பலதவம் புரிந்தும்

முருகனைப் பணிந்து முடிப்புகள் தந்தே,
அருகினில் மற்றை ஆலயம் தொழுதும்

இவ்வகைப் பண்டை எழில்நாள் முதலாய்த்
திவ்வியப் புனிதம் தேர்ந்திடும் தலமாய்த்

திகழ்ந்திடும் நன்னிலம் தீண்டும் பெருமை
உகந்திட எம்நெஞ் சுற்றதே அம்மா!

மாணிக்க கங்கைமேல் மாட்டிய கம்பியின்
ஏணித் தூரியை எளிதில் தாண்டி,

இனியநீர் ஆற்றில் எழில்நீர் ஆடிப்,
புனிதக் கோயிற் புறம்வலம் செய்து,

மூத்தப் பிள்ளையார் முருகனர் தேவிமார்க்கு
ஏத்தும் பூசையை இனிதுறக் கண்டு,

மற்று முள்ள மணியா லயங்கள்
சுற்றித் தொழுதுச், சோற்றுக் கடையில்

வெற்றுண வருந்தி, விடுதியில் தங்கினம்.
மற்றுமெம் நாட்டார் வந்தது முணர்ந்தோம்.

மறுநாட் காலை மாவிருள் போமுன்
குறுகா நின்றோம் குளிர்நதிப் பாங்கர்

நன்னீ ராடி நலம்தரும் கோயில்
முன்னே நின்றோம்; முதற்பூ சையினை

ஆற்றிடக் கண்டோம். 'அரகரா' வென்றே
போற்றி நின்றோம். புனிதன் தீர்த்தம்

பெற்றுத் திரும்பினோம். பெரும்தலம் காணும்
பெற்றியை நாங்கள் பெற்றநல் வாய்ப்பை

எண்ணி எண்ணி இதயம் பொங்கப்
பண்ணும் பயணம் பலித்ததே என்றோம்.

31. இயற்கை வனப்பினில் மயக்கைத் தெளிந்தோம்.

கதிர்கா மத்தில் கப்பு றளன்
புதிர்கொள் பூசை புரிவது மேனோ,

சிங்களப் பௌத்தர் செழிப்புடன் வந்து
மங்கலப் பூசை மலிவதேன் கொல்லோ?

அடுத்துறும் தெய்வ யானை யம்மையை
தொடுத்திடு வடக்கர் தொழுதலு மேனோ,

ஆரியத் துறவிகள் ஆதிக்க முற்றுப்,
பேரியல் மகிமை பெற்றதேன் கொல்லோ?

உலகம் போற்றும் உத்தம தலத்தில்
உலகத் தூய்மை உணராத தேனோ,

அப்படி இருந்தும் அறிவில் சிறந்தோர்
செப்புரு அன்பில் சேர்தலேன் கொல்லோ?

ஆயிர மாயிரம் ஆண்டுகள் ஆகியும்
கோயிலின் பெருமை குறையா ததேனோ,

ஆங்கிலப் பண்பில் அலைமோ தினரும்
ஓங்கிய திரை மிசை உணர்வதும் யாதோ?

ஆடித் திங்களில் அளவிலா மாந்தர்
தேடித் தொழுதிடும் திட்டமும் யாதோ?

இவையெலாம் எண்ணிஎம் எழுச்சியைத் தணிக்கச்
சுவையிலாப் பண்பிடை சூழ்ந்தனம் அல்லோம்.

கதிர்கா மத்தில் கதைத்திடும் அற்புதம்
புதிர்போல் எண்ணிப் போந்தனம் தென்மேல்.

திசைமா ராமம் திசைவாய்த் திரும்பி
விசையாய் வடக்கே வெள்ளை வாயில்

மீண்டும் அடைந்தேம். மேன்மலைப் பாங்கில்
காண்டகு செழிப்பில் கனிந்தமு தூறும்

பற்பல தோட்டப் பண்ணைகள் கண்டும்
சிற்சில இடங்களில் செழுபடம் எடுத்தும்

காப்பித் தேயிலை கசிந்திடும் இரப்பர்த்
தோப்பின் வரிசைத் தோற்றம் கண்டும்

வெள்ளை இரப்பர் வெண்பால் குடங்கள்
கொள்ளை கொள்ளும் குவியல் கண்டோம்.

இருந்தாற் போல எழிலெலாம் திரண்ட
கருந்தாள் மலைக்கண் கலிநீர் வீழ்ச்சி

கண்முன் தோன்றக் கவினைப் பருகி
விண்முன் அன்புறும் வியப்பில் அமர்ந்தோம்.

திருவார் வீழ்ச்சித் தியாத லாமை
தெருமேல் உயரடி திரள்அறு நூறில்

திவ்வியக் காட்சி திகழ்ந்திடக் கண்டு
செவ்வியல் உணர்ச்சியில் தெரிந்தனம் இயற்கையே.

32. மலைநாட் டிடங்களில் கலைநாம் கண்டோம்.

மலைகள் முடிகள் மாண்புறு சோலைகள்
அலைகள் போல அமைவுற் றிருந்தன.

பாதையில் ஒருபால் பள்ளத் தாக்கும்
வாதையில் மறுபால் வளர் செங்குத்தும்

கண்கள் திகைக்கச் காட்சி அளித்து,
விண்களி கூரும் வியப்பைத் தந்தன.

படிப்படி யாகப பள்ளமும் மேடும்
அடிப்படை யாகும் அங்கிலப் பான்மை.

கணவாய் களிலே கவினுர் காட்சி
மணமாய்த் திகழும் மலிபொழில் களிலே.

பனிபடர் பெயல்கள் பன்மலை முடிகளைக்
கனிபடர் சோலையால் காத்து மறைக்கும்.

பள்ளத் தாக்கில் பைம்மரச் சோலைகள்
உள்ளங் குளிர ஊற்றுகள் விளைக்கும்.

மேட்டுச் சரிவில் மிளிரும் தோட்டம்
வீட்டுக் கரும்பொருள் விளைத்துக் கொடுக்கும்.

மலைத் தொடர் முற்றும் மலைபடு பொருள்கள்
தலைத் தொழில் தந்து தாங்கிடும் செல்வம்.

இந்த முறையில் எழில்இலங் கையிற்கண்
சிந்தை இன்றிச் சிரித்தது வருவாய்.

தோட்டப் பண்ணையில் தொழில்செய் ஆட்கள்
ஈட்டிக் கொணர்ந்தவர் இந்தியர் ஆவர்.

ஆனால் அன்னுர் இழிநிலை காணில்
ஏனோ இங்கே வந்தார் என்போம்.

மலைவழி முற்றும் மலைச்சார் புகளிலே
தலைதிகைப் புறவே தாங்கிச் செல்லும்.

இடையிடை ஊர்கள் ஏற்றங் களிலே
கடையிடை கூடிக் கவின்கொண் டிலங்கும்.

எங்கும் தமிழ்மயம் இயங்கி இருக்கத்
தங்கிச் சுகிக்க தடைகள் இல்லை.

கடைக்கோச லாந்தை கடந்து செல்லச்
தடைசெயும் அப்புத் தலையினை அடைந்தோம்.

சிவனார் கோயில் செழிப்பில் இருந்தும்
எவனும் இன்னுண விட்டனன் அல்லன்.

பண்டார வளையில் பண்டகச் சாலைகள்
வண்டார் குழல்போல் வளமாய் இருக்கச்

சோற்றுக் கடையில் சூட்டுச் சாதம்
ஏற்றுண் டனமே, இல்லா வகையில்.

புதுமதி நாளில் புனிதத் துணைவைக்
கதிவழி இன்றிக் கண்டனம் இலமே.

33. சிகர மலைகளின் செழுநகர் பார்த்தோம்.

மட்டக் களப்பில் விட்டு வந்த
கட்டுக் கடங்கிய செட்டுப் புகைவழி

பண்டார வளையில் கண்டார் வியக்கத்
துண்டாய் வந்து திண்டா டியதே.

படிப்பில் கண்ட படிப்படி வயல் நிலம்
துடிப்பில் கண்டனம் தொலைவில் இங்கே.

ஊரைச் சுற்றி உயர்ந்த முடிகளில்
தாரை பெற்றுத் தங்கிடும் வழிகள்

எங்கும் தங்கிய இயல்புல் தரைவாய்
மங்கி யெழும்பும் மழைவரக் கண்டோம்.

இருந்தாற் போல இறங்கிய பெயலோ
பொருந்தா வண்ணம் பொழிந்தெமை நனைத்தது.

சற்றுப் பொழுது சாடிய மழையோ
அற்று மறைந்தது அனைவரும் மகிழ.

ஏறியும் இறங்கியும் ஏற்றம் முற்றும்
சீறிச் சென்றது சீரிய சகடும்.

ஹொக்கலைப் பூங்கா எளிதில் அடைந்தது,
வற்கலை ஈனும் வளமரம் கண்டோம்.

சீதா குண்டச் சீதள அருவியில்
வேதா விளைத்த விளையாட் டயர்ந்தோம்.

பாறை அடிக்கீழ் பதுங்கிச் செலும் நீர்
ஊறல் இன்றி உற்றதும் எங்ஙனம்?

அருகே சீதை அமர்ந்த அசோகம்
கருகிப் புகைந்த கண்டன் கோட்டை

இருந்த இடங்கள் எமக்குக் காட்டினர்.
திருந்த முறையில் தேர்ந்திலம் அவைகளை.

நூரளை மலைநகர் நுழைந்தோம் பின்னர்,
ஊரரு கிருக்கும் ஊருணி ஏரி

குதிரைப் பந்தயம் கூடும் வட்டம்
நிதியைத் திரட்டி நிரப்பிடும் பவனம்

மற்றும் பற்பல மாளிகை கண்டும்
பற்றி நிற்கப் பவனமோ கிட்டிலம்.

குளிர்மிக மீறக் குன்றுவிட் டிறங்கிக்
களிமிகும் செழுமைக் கண்டியை அணுகத்

துணிவுடன் ஓட்டி தொடர்ந்தனன் பயணம்.
அணிமையில் பற்பல அருவி வீழ்ச்சிகள்

தேயிலைப் பண்ணைகள் திரண்டிடும் ஆலைகள்
வாயினில் நின்று வளங்களைக் கண்டனம்.

ஓரிடம் அட்டையின் உபத்திரம் பெற்றுச்
கோரிய கண்டி கூடினம் இரவில்.

34. கண்டிப் பெருநகர் எண்டிசை அறிந்தோம்.

கண்டிப் பெருநகர் கண்ட பொழுதே
உண்டிச் சிறப்பினை உள்ளம் கருதிடும்.

வள்ளுவர் காட்டிய வள்ளற் றன்மை
உள்ளிடின் அவண்தான் உண்டென் றியம்புவல்.

விருந்துப் பண்பின் விளக்கம் முற்றும்
அருந்தின யாங்கள் அங்ஙன் அறிந்தோம்.

பழைய காட்டின் பழைமை அன்பு
குழையச் செய்தது கூட்டுப சரிப்பே.

இரவினில் பத்தடி இடித்தால் என்ன,
இரவியின் பன்னிரண் டிடிப் பால் என்ன,

கடையை மூடிக் கதவடைத் திருப்பினென்,
தடையொன் றின்றித் தாழ்ப்பாள் திறந்திடும்.

ஒருநாள் முழுதும் உடனிரு பொழுதும்
திருநாள் போலத் தேர்ந்தனம் இன்பமே.

கண்டித் திருநகர் காட்சிகள் முற்றும்
எண்டிசை சுற்றி இனிதுறக் கண்டனம்.

பேரா தனையின் பேர்பெரும் பூங்கா,
ஆரா தனை செயும் அரும்பல் கோயில்,

பல்கலைக் கழகம் பயில்புதுக் கட்டடம்,
சில்கலைச் சிற்பமும் செழிமையில் கண்டனம்.

குலநகர் சுற்றிக் கோட்டை வளைவெனப்
பலமலைத் தொடர்கள் படுத்துத் தூங்கும்.

குடமலை மீதோ கூடிடும் சோலைகள்,
வடமலை மீதோ வைப்புறும் பூங்கா,

இடைதாழ் அடியில் ஏரிநீர்ப் பரப்பு,
புடைசூழ் நற்றடம் போந்திடும் பொதுவழி,

மன்னவன் மாளிகை மதிப்புறும் கலையறை,
அன்னதன் அருகில் ஆண்டவன் கோயில்,

பண்டக சாலைகள் பாப்புறு விடுதிகள்,
அண்டரும் பெற்றிடும் அலைகடல் மணிவகை,

சிவபிரான் கோயில் சீர்மால் மண்டபம்,
தவபிரான் சின்னம் தங்கப் பணிவகை,

இவையெலாம் கண்டே இன்புற நின்றேம்.
சுவையெலாம் பருகிச் சூழ்ந்தனம் விடுதி.

மாவலி கங்கை மலையிடை ஓடிக்
காவலு மாகிக் காத்திடும் நகர்பால்.

வெள்ளம் பெருகி விரைவொடு செல்ல
அள்ளைக் கரையில் அமர்வன முதலைகள்.

எங்கு நோக்கினும் இனிய நீர் நிலைகள்
தங்கு மலைநிலை தண்ணெனச் செய்யுமே.

35. கொழும்புப் பாதையின் அழும்புகள் உணர்ந்தோம்.

சரக்கின் விலைகள் சரசமென் றெண்ணி
உரக்கப் பேசி உடன்வந் தோர்கள்

நிரம்ப வாங்க நேர்ந்ததில், பின்னர்
வரம்புக் கடங்கா வகையில் சிக்கினர்.

விலையில் குறைந்து விற்றவை சிலவே,
தலையில் சுமந்தது தாங்காச் சுங்கம்.

ஆனல் துணிரகம் அகப்படும் மிகவே,
'போனல் போகுது போற்றிக் கொள்வோம்'.

என்ற துணிவில் எடுத்தனர் சரக்கை.
சென்ற பின்னர் செறிந்தது சங்கடம்.

திங்கள் பல செலும், தீர்ந்ததோ இல்லை.
எங்கள் விதியும் இருந்தவா றென்னே!

கண்டியை விட்டுயாம் காலையில் புறப்பட
எண்டிசை தோன்றும் எழில்களைப் பருகினம்

அழகிய நிலத்துயர்(வு) ஆயிரம் அடிதான்;
பழகிய சரிவில் பாய்ந்தது எனினும்,

எத்தனைக் குவடுகள் எத்தனை அருவிகள்
எத்தனைப் பொழில்கள் எத்தனை ஊர்கள்,

அத்தனை காண ஆரு யிரம்போல்
சித்தமும் மயங்கச் செழுமையே காண்போம்.

வழியெலாம் இயங்கிகள் வகைவகை யாகப்
பழியிலாப் பாதையில் பறந்து சென்றன.

நிமிடம் கழியுமுன் நெறிசெல் இயங்கிகள்
அமிதம் என்ருல் அதிகம் அல்ல.

காய்கறி சுமப்பவை கணக்கில் ஏகும்.
பாய்களும் படர்களும் பறப்பன அங்ஙனே.

வண்டி ஓட்டியின் வழக்கம் குறையின்
கண்டி ராதவெங் காலன்வாய்ச் செல்வன்.

ஒன்றைக் கடக்க ஒருமணி ஆகின்
துன்றும் வரிசைத் தோற்றம் சொலவோ!

இந்த நிலையில் யாங்கள் முயன்றே
உந்திக் கொழும்பை உற்றனம் நடுப்பகல்.

பருவ நிலையோ பலவாய் மாறி
உருவம் நினையா உருக்கம் தந்தது.

இனிய காற்றை ஏற்பது விட்டு
நனிவெங் காற்றை நணுகினம் கொழும்பில்.

இயற்கைப் பண்பை இழந்து விட்டுச்
செயற்கைத் தன்மையில் சேர்ந்து நின்ருேம்.

அமைதிப் பண்பை அகற்றி விட்டுச்
சுமைதிரி ஓதைச் சூழ்நிலை உற்ருேம்.

36. துறைமுகக் கொழும்பின் நிறைவளம் துய்த்தோம்.

வாணிபத் துறையின் வளமையில் ஒப்பிலா
தோணியின் வர்த்தகம் தொடர்வது கொழும்பே.

உலகில்எந் நாடும் உடைய நாவாய்கள்
அலகிலாச் சீரில் அடையுமித் துறைமுகம்.

எத்துறை முகமெனில் எத்தொலைக் கப்பலும்
இத்துறை முகத்தில் இறங்கா தேகா.

எந்நா டாயினும் ஏற்றும் சரக்குகள்
இந்நாட் டகத்தில் இறங்கியே செல்லும்.

மாந்தரும் அங்ஙனே மதிப்போடு தங்கி
ஆந்தனை மகிழ்வும் அடைந்தே செல்வர்.

பன்மொழி கேட்டுப் பசப்பினில் நிற்போர்
இன்மொழிக் கொழும்பில் இணைத்தல் வேண்டும்.

எங்கும் கூட்டம் எங்கும் இறைச்சல்,
எங்கும் ஓட்டம் எங்கும் துணிச்சல்;

இந்த நெறியில் இயக்கம் செல்லச்
சிந்தைக் கிடமோ சிறிதும் இலதே.

பத்தாண் டளவில் பத்து மடங்கில்
அத்தோ மீறி அகன்றே ஆளும்.

பலபல தொகுதிகள் பலபல வகைகளில்
கலகல வெனவே காட்சிகள் பெருக்கிடும்.

மேற்கரை யோரம் மெச்சிய மையம்
தோற்க லாகாத் துறைமுகம் ஆகும்.

அதனைச் சுற்றி அகலுறும் நகரோ
பதனை மீறிப் படர்ந்திடும் முத்திசை.

வடபால் சிலாபம் வரையில் ஊரே.
திடமாய்ப் பத்துகல் தேர்ச்சியும் பெறுமே.

தென்பால் காலித் திசையில் ஏகின்
இன்பாய் இரத்தின மலைவரை செல்லும்.

கிழப்பால் எல்லை கிளப்புவர் இல்லை.
வாய்ப்பாய் பெருகும் வளமது மீறும்.

நடுவில் நெருக்கடி நாடிக் கிடக்க
நெடுவில் விரவி நிரம்ப விரியும்.

கடற்கரை ஓரம் காட்சிகள் சிறக்கத்
தடக்கரைப் பாதை தழைத்துச் செல்லும்.

அன்பர் குழாங்கள் அமைதியில் வாழ
இன்ப மாளிகை எழில் கொண் டிலங்கும்.

வெள்ள வத்தை விரும்பும் புறமாய்
உள்ளம் மகிழ உறைவர் தமிழர்.

சிறுயாழ்ப் பாணச் சீர்ப்பெயர் அதுகொளப்
பெறுமாம் அதற்கண் பிழைப்பும் மிகுமாம்.

37. நிலையம் பலமிசை கலையினை நுகர்ந்தோம்.

பிற்பகல் நாங்கள் பேணிக் கண்ட
பற்பல நிலைகள் பண்பா டுள்ளவை.

இரத்தின மலத்து ஏரோ நிலையம்
தரத்தினி லுயர்ந்த தன்மை வாய்ந்தது.

லேவினிய விடுதியும் லேசன் றென்க,
புவியினில் மதனன் பூத்திடும் பவனம்.

பல்லுயிர் வாழ்க்கை பயின்றிடும் வளைவோ
தொல்லுயிர் இயலைத் தோற்றும் கலைநிலை.

வெள்ளை வத்தை விநாயகர் நற்றளி
அள்ளிடும் கூட்டா ராதனைப் பயிற்சி.

பண்டைக்கலைகள் பழுத்திடும் சாலை
தொண்டை விளக்கும் தொல்கலைக் கூடம்.

காவியச் செழிப்பைக் கவிமுறை தன்னில்
ஓவியச்சாலை உறுதியில் காட்டும்.

நகர மாளிகை நவிற்றிடும் பெருமை
அகர எழுத்தில் ஆட்சியைத் தருமே.

பந்தய வட்டம் பயன்றிடும் பயிற்சி
விந்தையை ஊட்டும் வெறுமையு மல்ல.

புத்தப் பள்ளியில் பொன்மயச் சித்திரம்
சித்தம் தெளியச் செப்பிடும் அறமே.

செட்டித் தெருவில் சீரிய கோயில்
குட்டித் தொழுகை கூட்டிக்கொள்ளும்.

கதிர்வேல் ஆலயம் கனம்மிக விளங்கி
எதிர்ப்போர் இல்லா இனிமையில் செழிக்கும்.

பொன்னம் பலனர் புதுவா லயமோ
இன்னம் பலவாய் எழிற்பணி கோரும்.

செந்தமிழ் நாட்டுச் செழிப்புறு சிற்பம்
முந்துறப் பேணி முனைந்திடும் அத்தளி.

விவேகா நந்தர் வெற்றிக் கழகம்
செவேலென் றியங்கிச் செம்மையை விளைக்கும்.

கழனியக் கங்கை காட்டும் தோற்றம்
உழவியல் செழிப்பை ஊக்கிக் காட்டும்,

அருகினில் கைத்தொழில் ஆலை முளைத்துச்
சொருகிடும் வருவாய் சூழ்ந்தோர் மாட்டே.

பறங்கியர் படைத்த பண்டை மன்றம்
இறங்கிய நிலையில் இன்னும் உளதே.

அலுவ லாளர் ஆற்றிடும் சாலைகள்
கொலுவில் உள்ளோர் கொள்கையைக் காட்டும்.

கொழும்பு நகரம் கொண்டிடும் இவைகள்
எழும்பிய நிலையில் ஏற்றமே காட்டின.

38. சமய நிலைகளின் அமைவை அறிந்தோம்.

இலங்கைத் தீவின் ஏறிய பொருள்களின்
பலன்களைப் பெருக்கப் பார்ப்பர் ஆட்சியர்.

ஆனால் தமிழரோ அகம்புறம் இரண்டிலும்
தேனார் சமயத் திரட்சியே காண்பர்.

வெள்ள வத்தை விநாயகர் கோயிலில்
உள்ளம் உருகும் உறுதிப் பாட்டில்

அலுவ லாளர் ஆண்பெண் உட்பட
கொலுவதில் நின்றுக் கூட்டுப் பிரார்த்தனை

செய்யும் முறையில் செழிக்கக் கண்டோம்,
எய்யும் பலனும் இனிதுறக் கண்டோம்.

அன்றொரு சிற்றுரை அளித்திட எனக்கும்
மன்றிடை வாய்ப்பை மதிப்புறத் தந்தனர்.

கல்வியில் தோய்ந்த கணவரும் மனையரும்
செல்வியர் ஆகியும் சீருடன் வணங்கினர்.

இம்முறை தென்னா டேற்றிடல் நன்றென
எம்மனம் தெளிந்தது இந்நாட் சூழலில்.

திருக்கே தீச்சரத் திருப்பணி முற்றும்
சுருக்கிச் சொல்லில் சுகத்தில் மலரும்.

வழக்குரை மக்களும் வளம்பெறும் அலுவற்
பழக்கம் பூண்பரும் பரிபா லிப்பரால்.

சைவச் சபைகளும் சரித்திரக் குழுக்களும்
தெய்வ விழாக்களும் சேவை நிலைகளும்

படித்த மக்களே பரிபா லிப்பதில்
எடுத்த பண்பில் இயங்கு வார்கள்.

புத்தச் சங்கமும் புத்தத் தருமமும்
புத்தச் சமயமும் புனிதம் பெற்றே

சுத்தச் சமயிகள் துதிப்பது மன்றி
ஒத்தக் கல்வியர் உவந்து போற்றி

உறுதி யுடனே உதவி செய்வதில்
இறுதி வரையில் இயக்கத் தாழ்வார்.

கழனிய கங்கைக் கனமிகு விகாரம்
பழனம் சூழ்நிலை பயக்கப் பெற்றது,

புத்தத் துறவிகள் பொறுப்பில் உள்ளது,
சித்தம் மகிழ்ந்தோர் செல்வாக்குற்றது,

பண்டைச் சரிதம் பயிலப் பெற்றது,
இண்டைப் பெருமை ஏற்றம் கொண்டது.

சைவக் கோயில் சார்ந்த முறையில்
தெய்வத் தோவியச் சிற்பம் பூண்டது,

அதன்சிறப் புக்களை ஆர்ந்து கண்டோம்.
மதன்முறை மிளிர மகிழ்ந்தனம் அன்றே.

39. மேற்கட லோரமும் மிளிர்தளி தொழுதோம்.

வெள்ள வத்தை விடுதி தன்னில்
கள்ளங் கபடு கண்டறி யாதேம்

விடியல் முன்னர் வெறும்நீர் குளித்து
நொடியில் சாமான் நூக்கி வைத்துக்

காப்பிக் கடையில் கனியோடு இட்டலி
ஏப்பம் விடும்வரை ஏற்றிக் கொண்டு,

வண்டி ஓட்டி வகுத்த முறையில்
சண்டிக் கோயில் சார்ந்தனம் அங்கண்.

முத்து மாரி முதல்வியைத் தொழுது,
ஒத்த வகையில் உத்தர வேற்றுக்,

கொழும்பு நகர்க்குக் கொடுத்து விடையைக்,
கழனி கங்கையைக் களிப்பில் தாண்டி,

மேற்கரை வழியே மேவினம் வடதிசை.
தோற்க லாகா துணையென அயவழி

எம்முடன் போந்தது; இடையில் ஊர்மிகச்
செம்மையில் படரச் சிலாபம் மட்டும்

தென்னை மாபலா திரண்ட பொழில்கள்
முன்னை நிலம்போல் முகத்திற் பொலிய,

முன்னீச் சரத்தை முதற்கண் தொழுது,
நன்னீர்த் தீர்த்தம் நல்கப் பெற்றனம்.

நாட்டுச் செழிப்போ நலியத் தொடங்கிக்
காட்டுத் தடமாய் காணும் அதன்மேல்.

அயவழி கூட அகற்றப் பெற்று
தயவது மாறித் தயங்கும் மணலாய்.

புத்தளம் என்னும் புன்மைச் சிறூர்
சுத்தமில் மீன்மணம் சூழ்ந்தது நாறி,

எவ்வுண வேனும் ஏற்கேம் ஆகி
அவ்விடம் விட்டே அனுராத புரத்தை

நோக்கிப் பறக்கையில் நுழைவழி முற்றும்
பாக்கிய மில்லாப் பாழ்த்தடம் ஆகப்

போகும் பாதையில் புள்ளும் இலதாய்ச்
சாகும் வினைகளும் சனிக்கும் வனமாய்க

கண்டும் கேட்டும் கடைசியில் பௌத்தர்ப்
பண்டைத் தலைநகர்ப் பாங்கர் அடைந்தே

உண்டனம் சோற்றை உற்றதோர் கடைதனில்
விண்டனம் அதனை விரைவில், வழியில்

மதவாய்ச் சியினில் வடமேற் காகச்
சதமாய்ப் புனிதம் சனிக்கும் திருக்கே

தீச்சரம் காணும் எண்ணம் பலிக்க,
ஆச்சரி யத்தே அமர்ந்தனம் அதனல்.

40. திருக்கே தீச்சரத் திருத்தளி தொழுதோம்.

எற்படும் முன்னர் எம்குழு கேதுவின்
முற்படு தொழுகைகூர் முதற்றலம் அடைந்தோம்.

புதுமடம் ஒன்றில் புக்குப் பிறகு
பதுமமோ அறியாப் பாலா வியிலே

குளிர்நீர் படிந்துக் கூடிய விரைவில்
ஒளிநேர் கோயில் உறுவலம் வந்தனம்.

பழுதோ பட்ட பான்மையில் அத்தளி
விழுதோ ஊன்று வெறுமையில் நின்றது.

திருப்பணி நினைப்பதைத் தெரிந்த ஆட்சியர்
உருப்படி கலங்கா துளவறி வண்ணம்

ஒவ்வா அடிமணல் உறுத்தி அகழ்ந்ததில்
துவ்வாக் கேணிகள் தொடர்ந்த கட்டுகள்

பண்டை யிலிங்கம் பல நூறு சங்குகள்
உண்டைக் கலங்கள் ஒருபா டெடுத்தனர்.

எங்கள் நாட்டில் எழிலார் கோற்கை
துங்கப் பூம்புகார் தொலைபாழ் உறையூர்

இந்த இடங்களில் இயக்கம் இலையே.
எந்தப் புதை பொருள் இயலும் வரவிலை.

சண்முக நாதர் சாற்றினர் எமக்கு
மண்முகத் தகழ்ந்த மகிமைகள் முற்றும்.

மாலைப் பூசை மாட்சியில் தொடங்க
மூலை முடுக்குகள் முகங்காட் டினவே.

யாங்கள் சென்றே இறையை வழிபட்டு
ஓங்கும் புகழினை உரைத்துத் தொழுதோம்.

அப்பொழு தெங்கள் அருஞ்சக டோட்டி
தப்பெது மின்றித் தந்தனன் ஒருரை.

மண்டபத் தோரம் மாட்டிய விட்டத்
துண்டெனச் சர்ப்பம் ஊக்கிக் காட்டினன்.

மூன்றுநல் நாகம் முழுவழி பாடு
தோன்றிய பொழுது தொழுதிடும் நிலையில்

தொங்கும் அந்தத் தொடர்பினை இன்னும்
இங்கண் காணலாம் என்றனன்; அப்பொழு

தனைவரும் கண்டதை அதிசயித் தார்கள்.
தினைவிழும் ஒலியும் தோரா திருந்துப்

பூசை முடிந்ததும் போற்றிடும் நீற்றினை
ஆசை கனிய அகன்றனர் விடுதிபால்.

அங்குமோர் பாம்பினை அலறியே கண்டு
பங்கமோ பட்டுப் பலரும் தூங்கிலர்.

ஆனால் அற்புதம் அதுவொன் றெண்ணி
மேனாள் நினைவில் மேவி மகிழ்ந்தனர்.

41. திரும்பிக் கிழக்கே விரும்பிச் சென்றோம்.

பொழுது புலர்ந்தது புற்றுவிட் டெழும்பிப்
பழுது நினையாப் பாம்பென உதிக்கும்

குணவயின் ஞாயிறு கூடிய ஒளியில்
மணலு நீருமே மண்ணெலாம் காட்டும்.

ஞானசம் பந்தனார் நவிலுமா தோட்டமும்
போனதிசை எங்கே? பொழில்களில் மாபலா

இருந்ததும் எங்கே? எழில்நகர் குடிவளம்
பொருந்தின தெங்கே? பொங்கின கடல்தான்

நன்னகர் அதனை நசித்தது என்கோ!
மன்னவர் உட்பட மக்களைத் தளிதனைப்

பரங்கியர் அழித்தனர் பாழுற என்கோ!
தரங்கமும் மணலும் தவிரவே றிலதேன்!

என்றெலாம் எண்ணி இளங்கதிர்க் காலையில்
நன்றென ஆற்றில் நன்னீ ராடிக்

கோயில் அணுகிக் குதூகல நெஞ்சில்
வாயில் யணைந்து வழுபா டியற்றினம்.

வணங்கி விட்டு வழங்கிய உண்டி
இணங்கி அருந்திட் டெமைப்பின் தொடர்ந்த

சிவனடித் தொண்டர் சிவசுப்ர மணியர்
தவநிலை மெச்சித் தந்தனம் வந்தனம்.

சண்முக நாதர் சாலையில் சென்று
மண்முக மெடுத்த மறைபொருள் கண்டோம்.

திருப்பணித் தொண்டரும் திரள்புதைக் கலைஞரும்
பருப்பணிப் படத்தைப் பார்த்தா ராய்ந்தனர்.

பற்பல மாறுதல் பகர்ந்தனர், பிறகு
தற்சில புகைபடம் தந்தனர் எமக்கே.

இருபெரி யார்கட் கீந்ததும் விடையினைத்
தெருவழி யாகத் திரும்பினம்; பின்னர்

பாதையின் இருபுறம் பரந்த வெளிகளில்
ஓதையொன் றில்லா உடைமரம் தோன்றும்.

பின்னர் குளங்களும் பிரிவாய்க் கால்களும்
நன்னர் வயல்களும் நகைசெய் திலங்கின.

ஓடிய மதகிடை ஓரிரு மகளிர்
கூடிய சேலையில் கொண்டனர் மீன்களை.

தப்பின சிலமீன் தரையில் துள்ளின.
அப்பொழு தவற்றை அகற்றினேன் நீருள்.

வவேனியா வாய்ந்ததும் வகுத்ததை உண்டுச்
செவேலெனும் இருக்கை சேர்ந்தனம்; ஒருவர்

நட்பினைத் தேர்ந்தனம், நாடினம் இணக்கம்;
தட்புறு பாதையைத் தாண்டினம் செலவே.

42. மீண்டும் யாழ்ப்பாணம் வேண்டிட மிதித்தோம்.

தற்செய லாகத் தழைத்த நட்பு
சற்செயல் பலவும் சமைத்துக் கொடுத்தது.

உணவு விடுதியில் உற்ற நண்பர்
குணமும் பண்பும் கொண்டவர் அறிந்தோம்.

சித்தாந் தத்தின் சந்தா தாரர்,
வித்தாய் நிற்பவர் வியன்யோ கியர்க்கும்;

கொழும்புத் துறையில் குடிகொண் டிருப்பவர்,
எழும்பும் தோழமை இயற்றிக் கொண்டனர்.

எங்கள் சகட்டில் ஏறிப் போந்துத்
தங்குருக் காட்சி தந்திட எண்ணினர்.

இவ்வணம் உதவி எங்கட் கிழைக்க
எவ்வணம் நன்றி இயற்றுவம் என்றேம்.

வடவழிப் பாங்கர் வளர்த்திச் சென்றதில்
தடவழி மான்குளம் தங்கி நின்றேம்.

இயங்கியின் காற்றே இறங்கிப் போக
மயங்கிலம் வேறுருள் மாற்றிச் சென்றனம்.

பாதையில் பௌத்தர் பயணச் சகடுகள்
ஓதையில் சென்றதை உற்றுக் கண்டனம்.

கதிர்கா மத்தைக் காணச் செல்வோர்
புதிர்போல் நடந்து போகக் கண்டோம்.

இறுதியில் கொழும்புத் துறையினில் இறங்கி
உறுதியில் நண்பர் உபசரிப் பேற்று

யோக சுவாமிகள் உத்தமக் குடிலில்
தாகம் தீர்க்கும் தண்மதி கேட்டோம்.

எடுத்துக் காட்டுகள் இறைத்துக் கொட்டித்
தொடுத்துச் சென்றனர் தூய்மை நெறியை:-

'எம்மைப் போல இகத்தை அறிவீர்,
சும்மை இன்றிச் சூழ்வீர் உயர்வே'

என்ற பொன்மொழி ஏற்றுக் கொண்டு
சென்று கிட்டினம் சீர்கலா நிலையம்.

திரு. நவ ரத்தினம் திகழ் மனை வியரும்
பெரு நல வுணவைப் பேணித் தந்தனர்.

கேதீச் சரத்துக் கிழமை யாளரும்
யாதோ அறிகிலம் எங்ஙனே வந்துத்

திருப்பணி வேலை திரும்பியா ராயப்
பருப்பணி வேட்டிப் பறந்துவந் திருந்தனர்.

அன்னார் முயற்சி அளவு கடந்தது.
பொன்னார் எழுத்தில் பொறிக்கத் தக்கது.

இரவில் வெகுவாய் எடுத்தா ராய்ந்தோம்,
பரவிப் படுத்தோம் பன்னிரண் டளவில்.

43. கடல்மேல் பறக்கிறேம் காசை இறைக்கிறேம்.

விடியலின் இன்னர் விழித்தெழுந் திட்டு,
நொடியதில் கடன்கள் நொக்கித் தள்ளிக்,

கேணி ஊற்றைக் கிளப்பி இறைத்து,
மாணிக் குளிப்பில் மகிழ்ச்சி பெற்றுத்,

தம்பதி விருந்தினர் தந்தருள் உண்டியை
உம்பரின் உணவிலும் உயர்வென உண்டு,

நண்பர் களிக்க நன்றியைக் கூறித்
தண்பத விடையினைத் தாங்கித் தந்துச்,

சகட்டினில் ஏறிச் சாமான் துறுத்தித்
தகட்டு நிலையம் தாண்டிச் சென்று,

வேறொரு நிலையம் விரைவில் நெருங்கி,
ஏறிடு நிலையத்(து) இயங்கி அடையச்,

சாமா னுடனே சகலமும் நூக்கிப்
போமா றனுமதி பொறித்துக் கொண்டு,

வான வூர்தி வந்து நிற்க,
ஆன மகிழ்வில் அணுகி ஏறினம்.

எழுவர் நாங்கள் ஏறி யமர
நழுவி வந்தனள் நாரி மணியள்

பந்தப் படுத்துப் பாசம் இணைத்துத்
தந்தம் இடத்தில் தகைவாய் இட்டனள்.

ஒன்பதும் அரையும் உரத்தி அடிக்க
நன்பதப் பலாவி நகர்ந்து பறந்தது.

ஒருமணி யாகுமுன் உயரப் பறந்துத்
திருசிராப் பள்ளியைத் தேர்ந்து நின்றது.

பறக்கையில் யாதும் பாயவும் இல்லை.
திறக்கையில் கதவு தெரியவும் இல்லை.

பறப்பது மறக்கப் படித்திடத் தந்தாள்.
சுறப்பது போலச் சுட்டினள் தினத்தாள்.

வாயினில் சுவைக்க வளமுறும் திண்டித்
தேயிலைக் காப்பி தெரிந்து தந்தாள்.

இந்த வகையில் எங்கள் விமானம்
சிந்தை இன்றி செழிப்பில் வந்தது.

திருச்சி நிலையம் சேர்ந்ததும் மீண்டும்
அருச்சனை போலும் ஆடிச் சென்றது.

சோதனை முற்றச் சுறந்தனர் காசை,
வாதனை நீங்கி வந்தனம் ஊர்ப்பால்.

திருச்சிச் சந்தி தேர்ந்ததும் உணவை
அருச்சித் ததனை அருந்தினம் உடனே.

நான்கு மணிவரை நனிஓய் வெடுத்தே
தாங்கி நின்றனம் தனிரத விடுதியில்.

44. எங்கள் நகரம் இனிதே மீண்டோம்.

தெரிந்தோர் அறிவர் திருச்சி வெயிலை,
திரிந்தோம் அல்லோம் தேர்ந்தோம் அஃபர்வே.

நான்கு மணிக்கு நகர்ப்புகை வண்டியில்
பாங்கில் அமர்ந்து படுத்தோம் நாங்கள்;

ஈரோ டளவும் இனிமையில் சென்றதும்,
தேரோ என்ன திகழுமவண் கூட்டம்.

மறுவண் டியிற்கண் மாறிச் செல்லக்
குறுகிய இடமே குந்தக் கிடைத்தது.

கோவை செலும்வரை கொண்ட சங்கடம்
ஓகை முற்றும் உதறிவிட் டிடுமே,

நடுநிசி யதனில் நாடினம் எம்மனை,
நெடுநினை வகல நேர்ந்தனம் உறக்கம்.

இந்தப் பண்பில் இயற்றிய பயணம்
தந்த இன்பம் தழைத்திடும் என்றும்.

பதினெட்டு நாட்கள் பாரதக் கதைபோல்
விதிநமக் கிருக்க விளையாட் டெனவே,

இலங்கை முற்றும் இலகுவில் சுற்றிக்,
கலங்கிய நெஞ்சோ கணமெனும் இன்றி

நாங்கள் எழுவர் நலத்துடன் திரும்பி
ஈங்கண் வந்ததும் இறைவன் அருளே.

இரண்டொரு செய்தி இயம்பல் வேண்டும்,
திரண்ட தொலைவிடம் தேர்ந்த காலை

சகட்டின் ஓட்டி சலித்துக் கொண்டு
பகட்டுடன் நின்று பரிசுகள் விரும்பி

முட்டிக் கொண்டு முணுமுணுத் தனனே,
தட்டிக் கொடுத்தும் தலையில் இடித்தும்

தணித்தனம் செருக்கைத் தடைகள் நின்றன,
பணித்தலை போன்றனன் பணிந்தனன் சடுதியில்.

எங்கள் நன்னிலை இறுதியில் அறிந்தான்,
மங்கல் இன்றி மனத்தினி துற்றான்.

எழுவர் குழுவினர் யாங்கள் என்றால்
நழுவியும் வராதோ நலிவுகள் என்பீர்.

பழுதெதும் வராதது பரமன் அருளே.
விழுமிய நிலையே வேட்டினம் அன்றோ?

மற்றும் கருத்தும் மாறுபா டுற்றால்
உற்றுக் கொண்டோம் உண்மை நடுநிலை.

ஒருவர் மட்டும் ஒவ்வா தெனச்சொலத்
தருவர் ஒரேவிடை 'தனக்குத் தெரியா'

தென்றொரு சொல்லே; இதன் பொருள் உணர்ந்தே
சென்றனம், அதற்கண் சிறிதும் தளர்ச்சி

தந்தனம் இன்றித் தாங்கினம் நட்பே.
எந்த எதிர்ப்பும் இதற்கண் மறைந்ததே.

45. படிப்பினை நன்குறு முடிப்பெனக் கொண்டோம்.

நோக்கம் ஒன்றே நுழையின் எவர்க்கும்
போக்கும் ஒன்றாய் பொலிந்து தோன்றும்,
சாக்கும் சொல்லார் சலிப்பும் கொள்ளார்,
ஊக்கும் செயலும் உறுவோம் வெற்றி.

குறிக்கோள் கொண்டு கூட்டும் செயலோ
நெறிக்கோல் சிறப்பில் நிமிர்ந்து செல்லும்
பொறிக்கோ அன்றி புலன்கள் தமக்கோ
நெறிக்கோர் வழியும் விதியா காதே.

பலவே ருகும் படைப்பில் உயிர்கள்
சிலவே ஒன்றிச் செழித்தல் தோன்றும்
குலவே ருகிக் கூடும் எல்லாம்
தலவே ருகித் தன்மை மாறும்.

மக்கள் தம்மை மதித்துப் பார்க்கின்
ஒக்க குணத்தின் ஒருமைப் பாடு
தக்க முறையில் தாங்கார் அவரில்
மிக்க மாற்றம் மேவும் என்க.

முகத்தின் உருவை முகந்து பார்க்கின்
சகத்தில் ஒன்ருய்ச் சார்தல் எளிதே,
அகத்தின் ஒளியை அளந்து காணில்
நகத்தின் பிரிவில் நாட்டம் இருக்கும்.

உந்திக் கிடக்கும் உயிர்வேற் றுமையில்
சிந்தை வேண்டாம் சிறிதே அவர்பால்
குந்தச் செய்யின் குறிக்கோள் ஒன்றை
முந்தி இருந்த முனைப்பும் ஏகும்.

எழுவர் நாங்கள் இதயப் பண்பில்
தழுவல் உளதோ, தணிக்கை வேண்டாம்.
உழுவல் அன்பில் ஊக்கும் நோக்கம்
வழுவொன் றின்றி வளர்த்தோம் என்க.

ஈழ நாட்டின் எழிலைக் காண
ஆழம் அளக்க ஆர்ந்து நின்ருேம்.
தாழ வேண்டும் தகைமை இன்றி
வேழப் போக்கில் வென்று வந்தோம்.

இயற்கைப் பயனை ஏற்றுக்கொண்டு
செயற்கை முனைப்பில் செழித்துப் போந்து
நயக்கை பூண்டு நலமே கருதி
முயற்கைச் செயலால் முனைப்பில் வென்றோம்.

இந்தப் பயிற்சி எமக்குக் கிடைக்க
எந்த இதத்தை இயற்றி யுள்ளோம்!
சிந்தை மகிழச் சிறப்பும் பெற்றோம்
எந்தை யீசன் இச்சை என்கோ!

அருஞ்சொற் குறிப்புக்கள்.

பக்கம்	சொற்கள்	குறிப்புக்கள்
1.	'எழுவர் நாங்கள்'	We are seven.
2.	'சொல்லின் மதிப்பர்'	Wordsworth.
3.	'எந்த மரத்தடி'	Lee Warner Citizen of India.
	பொற்கொல்லப் பெயரோன்	Goldsmith.
	"நீலப்படுக்கை"	Vicar of Wakefield.
5.	'கடலின்கண் முத்து'	'யான் கண்ட இலங்கை' யானெழுதிய ஒரு நூல்.
7.	பந்தெறி இனிமை விடுதி	Cosmopolitan club.
	ஞானத்தரு	Wisdom tree.
8.	கேகயன் செல்வி—கைகேயி	தயரதன் தந்த வரம்.
11.	சுங்கம் தீர்த்த சோழன்	குலோத்துங்கன் I (1073–1118)
13.	வான ஊர்தி	Airoplane.
14.	மூன்று மீன்கள்	பஞ்ச தந்திரக் கதை.
15.	'குரங்கினங்கள்'	5 பாடல் - குறத்தி இசை.
18.	'உழைப்பின் வாரா'	பட்டினத்தார் 11-ம் திருமுறை
21.	பொன்னியாறு	காவிரியாறு.
23.	பலாலி	வான ஊர்தி நிலையம்
	அம்பிகை பாகர்	வைத்தீசுவரர் கல்லூரித் தலைவர்.
25.	கலா நிலையம் அதிபர்	திரு. நவரத்தினம், தென்னிந்திய சிற்ப நூல் ஆசிரியர்.
	மாகேசுவரியார்	அவரது இல்லக்கிழத்தியார்—வீணை நூலாசிரியர்.
	ஆனந்த குமாரர்	டாக்டர் ஆனந்த குமார சுவாமி.

பக்கம்	சொற்கள்	குறிப்புக்கள்
26.	கீரிமலை	வடகடலோரம் ஒரு தலம்.
	மாவிட்டபுரம்	அங்கு ஒரு கந்தர் கோயில்.
	கந்தவனக் கடவு	ஷை
	வல்லிபுரம்	திருமால் கோயில்.
	செல்லச் சன்னிதி	கந்தர் கோயில்
29.	கலங்கரை விளக்கம்	Light House.
	நூற்றுண்டு விழா	Centenary.
30.	இராமநாதன்	சர் பொன்னம்பல இராமநாதன்.
32.	பரமேசுவரன் கல்லூரி	ஆண் கல்லூரி, திருநெல்வேலி–யாழ்ப்பாணம்.
	இராமநாதன் கல்லூரி	பெண் கல்லூரி, சுன்னுகம்.
34.	யானை இறவு	Elephant pass.
35.	அனுராதபுரம்	பண்டைத் தலைநகர் அதனிடைக் காட்சிகள்.
36.	மிகிந்த மலை	பௌத்தசமயம் புகுத்தின இடம்.
	கன்னியா	வெப்ப வாவிகள்.
37.	திருக்கோண மலை	கல்லூரித் தலைவர் நடராச அடிகள்.
39.	தம்பளை	நடுநாடு–குகைக் கோயில் களில் புத்த உருவங்கள்.
	சீயகிரி	ஓவியங்கள் கொண்ட மலையரண்.
40.	புலனரி	Pollunnaruva–பண்டைத் தலைநகர்.
	பராக்கிரமபாகு	பேரரசன் (கி. பி. 1153–86)
	சமுத்திரம்	அவன் உண்டாக்கிய பெரிய ஏரி.
42.	சதாசிவனர்	உழவியல் பண்ணைத் தலைவர் திரு. இராமசாமிமகனர்.

பக்கம்	சொற்கள்	குறிப்புக்கள்
43.	வாழைச்சேனை, சிற்றாண்டிக்குடி	கீழ்க்கரை ஊர்கள்.
44.	மட்டக்களப்பு	Batticolao. கீழ்க்கரைத் தலைநகர்.
	உப்போடை	நீரர மகளிர் இசை கேட்கும் நீர் நிலையம்.
	காரைத் தீவு	விபுலாநந்தர் பிறப்பிடம்.
46.	தட்சிணாமூர்த்திகள்	மாகாண அலுவலாளர்.
	யாழ் நூல்	விபுலாநந்தர் இயற்றிய இசை நூல்.
47.	நீரர மகளிர்	Water nymphs.
48.	திருக்கோயில், புத்துவில்	தென்கிழக்குக்கரை ஊர்கள்.
49.	திசைமாராமம்	Tissa maharama–ருகுணை மாகாணம்.
	கதிர்காமம்	அருணகிரியார் பாடல் 'அகரமுமாகி'—திருப்புகழ்.
50.	மாணிக்க கங்கை	கதிர்காமத்து ஆறு.
51.	கப்புராளன்	புத்தசமயப் பூசாரி.
	ஆரியத்துறவி	பால்குடி பாபா மாணாக்கர்.
52.	தியாதலாமை	Dyatalama–600 ft. அழகிய நீர் வீழ்ச்சி,
54.	கொசலாந்தை, பண்டாரவளை, ஹெப்புத்தளை	மலைநாட்டு ஊர்கள்.
55.	ஹெக்கலை	பூங்கா—சீதா குண்டம்.
	நூரளை	Newara Elaya. கோடைக் காலத்துத் தலைநகர்.
	கண்டிப்பெருநகர்	சிங்களர் இறுதித் தலைநகர்.
56.	பழைய காட் கம்பனி	தமிழ்நாட்டு ஜவுளி நிலையம்.
	பேராதனை — பூங்கா	கண்டியருகு.
57.	மாவலி கங்கை	Mahabali ganga.

பக்கம்	சொற்கள்	குறிப்புக்கள்
58.	கொழும்பு	இலங்கைத் தலைநகர், துறைமுகம்.
60.	வெள்ளவத்தை	கொழும்புவில் தமிழர் இருப்பிடம்.
	இரத்தினமல	வான ஊர்தி நிலையம்.
	லெவேனியா	கடற்கரைப் பவனம்.
	வெள்ளவத்தை விநாயகர் கோவில்	கூட்டுப் பிரார்த்தனை இடம்.
63.	கழனிய கங்கை	Kelaniya Ganga.—புத்தர் புனிதத் தலம்.
64.	சிலாபம், நீர்க்கொழும்பு, முன்னீச்சரம், புத்தளம்	மேற்கரை இடங்கள்.
65.	திருக்கேதீச்சரம்	பாடல் பெற்றது.
	மாதோட்டம், பாலாவி	அங்கே பகுதிகள்.
	கொற்கை, பூம்புகார், உறையூர்	தென்னாட்டுப் பண்டை நகர்கள்.
67.	சிவசுப்பிரமணியர்	திருக்கேதீச்சரத்துத் திருப்பணியாளர்.
	சண்முகநாதர்	புதை பொருள் ஆராய்ச்சி ஆளர்.
68.	யோக சுவாமிகள்	கொழும்புத்துறைப் பெரியார்.
71.	கோணை மீனல் [?]	
72.	படிப்பிணைப் பாடல்	

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்,
கோயமுத்தூர்.